# காவேரி

JULY - 52.. நந்தன - ஆடி

186

8 அணா



186
3-52
2282
ACL-TNAL 03271
JL
௭211, N41KV N52.11.12
199335



# குடை மனிதன்

நீங்கள் பிரயாணம் செய்யும் போது படத்திலே காணப்படுவது போன்ற மனிதன் ஒருவனைப் பார்த்திருப்பீர்கள். இந்தப்படம் பர்மா-ஷெல் ரிபைனரி ஸ்தலத்தில் எடுத்த ஒரு போட்டோ படத்திலிருந்து எழுதப்பட்டதாகும். இந்த இடத்திலே இப்போது ஸர்வே வேலை நடைபெற்றுவருகிறது. குடை பிடித்துக்கொண்டு நிற்கும் மனிதன் வெய்யிலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுகிறான் என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள். இந்த குடை அந்த ஒரு காரியத்திற்குத் தான் பயன்படுகிறது என்று நீங்கள் எண்ணக்கூடும். ஆனால் உண்மை என்ன தெரியுமா? (Theodolites) தியோடலைட்டுகள், மற்றும் இதர ஸர்வே உபகரணங்கள் ஆகியவற்றை உபயோகிப்பவர்களுக்கு இந்தக் குடை ஸர்வே உபகரணங்களில் அதி முக்யமான தொன்றாகும். ஸர்வேயரை வெய்யில் கடுமையினின்று காப்பாற்றுவதற்காக குடை பிடிக்கவில்லை. ஸர்வேகருவிகளை சூரியக்கிரணங்களினின்றும், உஷ்ணத்தினின்றும் பாதுகாக்கத்தான் உதவுகிறது. அக்கருவிகள் சூடு தாங்காதவை. நிழலில்தான் அவற்றை நாள் முழுவதும் இயக்க வேண்டும். வெய்யில் பட்டு அவை கெட்டுப்போவதைத் தவிர்க்கவே குடை பிடிக்கப் படுகிறது.

**பர்மா-ஷெல்...**

**பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது**

**BURMAH-SHELL... IN INDIA'S LIFE AND PART OF IT**


உ
ஜூலை 1 முதல்
வெலிங்டன்
பிரபாத் இரு தியேட்டர்களிலும்
மற்றும்
மதுரை — சென்ட்ரல் சினிமா
கோயமுத்தூர் — தியேட்டர் ராயல்
பெங்களூர் ஸிட்டி — கீதா
பெங்களூர் ஸிட்டி — சூபர்
பெங்களூர் கன்டோன்மெண்ட் — ஸ்ரீ
மைசூர் — பிரபுதேவ் டாக்கீஸ்
திருச்சி — ஸ்டார் டாக்கீஸ்
திருநெல்வேலி — பாலஸ்-டி-வேல்ஸ்
தஞ்சாவூர் — யாகப்பா டாக்கீஸ்
கும்பகோணம் — டைமன்ட் டாக்கீஸ்
திண்டுக்கல் — சென்ட்ரல் சினிமா
விருதுநகர் — நியூமுத்து டாக்கீஸ்
வேலூர் — தாஜ் தியேட்டர்
பாண்டிச்சேரி — கமர்ஷியல் நியூடோன்
காஞ்சீவரம் — கண்ணன் டாக்கீஸ்
ஈரோடு — ராஜாராம் டாக்கீஸ்
திருப்பாதிரிப்புலியூர் — பாடலி
விரைவில் எதிர்பாருங்கள் !
சேலம் — நியூ சினிமா & பிரபாத்
காரைக்குடி — சரஸ்வதி டாக்கீஸ்
ஜெமினியின்
மூன்று
பிள்ளைகள்

## நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



அவள் செய்து தானிருக்கிருள். அவளது பிரகாசமான புன்னகையைப் பாருங்கள்! பளபளப்பும், ஆரோக்கியமும் மிளிரும் பற்களை பாருங்கள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசையால் தினமும் இரண்டுதரம் அவள் சுத்தம் செய்து கொள்ளுகிருள்.

மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாகவும், பற்களை வெண்மையாகவும், ஒரே சமயத்தில் விளங்கும்படி செய்கிறது. அதனுல்தான் உலகிலுள்ள லக்ஷக்கணக்கான புத்திசாலிதாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தினமும் இரண்டு தடவை மக்ளீன் பற்பசையினுல் பற்களை சுத்தம் செய்யும்படி கூறுகின்றனர்.

"நான் எப்பொழுதும்
மக்ளீன்ஸ் உபயோ
கிக்கிறேன். ஏனெனி
ல் அது என் பற்
களை வெண்மை
யாகவும் பளபளப்
பாகவும் இருக்கச்
செய்கிறது என்று
என் தாய் சொல்கிறார்"

**இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!**




MTY-1 TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே.எல்.மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட் மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில். வார்டன் ரோட், பம்பாய் 20.

REGISTRAR OF
JUL 952
MADRAS

# சரித்திர இந்தியா

## பூரியில் ஜகந்நாத ஸ்வாமியின் ஊர்வலம்

ஹிந்து திருவிழாக்களிலே மிகப் பிரமாதமானது பூரி ஜகன்னாத ஸ்வாமியின் ரத உத்ஸவம். ஆண்டுக்கோர்முறை கோயிலிலிருந்து ஜகன்னாத ஸ்வாமி அவரது பெரிய தேரில் எழுந்தருளி, நகருக்கு வெளியில் ஒரு மைலுக்கு அப்பாலுள்ள தோட்ட விடுதிக்கு ஊர்வலம் செல்வார்.

கோயில்களும், திருவிழாக்களும் கொண்ட மகத்தான இந்த தேசத்தில் எங்கும் உங்களுக்கு அருகாமையில் நண்பனைப் போன்று சௌகரியமளிக்கும் டீ கடை ஒன்று இருக்கிறது. இங்கே நீங்கள் ஒரு கோப்பை புத்துணர்ச்சியளிக்கும், மணங் கமழும் **ப்ருக் பாண்ட் டீ**யை அருந்தி இளைப்பாற்றிக் கொள்ளலாம்.




# ப்ருக் பாண்ட் தேயிலை

இந்திய தேயிலைகளுள் சிறந்தது
இந்தியாவிற் சிறந்த பாக்கெட்டுகளில் கிடைக்கும்.

BBT/C/22

# The Ferguson

# POST HOLE DIGGER





மரம் செடிகள் நடுவதற்கும் வேலிக்கால்கள் ஊன்றுவதற்கும் துவாரம் பறிப்பதற்கு ஏற்ற இயந்திரம் 2½ முதல் 3 அடி ஆழமும் 9 & 12 அங்குல அகலமுள்ள துவாரங்கள் போடுவதற்கு ஏற்றது.

*and*

# WOOD SAW





இந்த அறுக்கும் இயந்திரத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். சுலபமான பெல்ட் அமைப்பு. இயக்குவதற்கு சௌகரியமானது. ஹைட்ராலிக் முறையினால் டிரைவரின் இடத்திலிருந்து மேலேயும் கீழேயும் இயங்கக் கூடியது.

**டீலர்கள்:**

கமானி இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் லிட்., சாகர்மான்ஷன், ஜோன்ஸ் தெரு, ப்ராட்வே, மதராஸ்-1.

ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (தென் இந்தியா) லிட்., கோயம்பத்தூர்.

வெப்ஸ் பார்ம் மெகானிஸேஷன், 30, மகாத்மாகாந்தி ரோடு, பெங்களூர் & மைசூர்.

**ஸ்டாக்கிஸ்ட்கள்:**

காமினேனி பார்மிங் கார்ப்பரேஷன், வராஹபட்டிணம் & குடிவாடா. S. பாப்பண்ண செட்டி, ஹோஸ்பேட். சுந்தரம் ஸன்ஸ், 67 பிரிட்ஜ் ஸ்டேஷன் ரோடு, தல்லாகுளம் P. O. மதுரை: பார்மிங் மெஷினரி & சர்வீஸஸ், பெஸன்ட் ரோட், பக்கிங்ஹாம் பேட் போஸ்ட், விஜயவாடா: கள்ளிக்கோட்டை, உதகமண்டலம், திருவனந்தபுரம் எலக்டிரிக் டைஸல் எக்குப்மெண்ட் கம்பெனி, அல்லபி; A. கோபாலகிருஷ்ணன் கோட்டாரம், கல்பட்டா வெய்நாடு.

**KAMANI ENGINEERING CORPORATION LIMITED.**
KAMANI CHAMBERS, NICOL ROAD, BALLARD ESTATE, BOMBAY.

E. I. 52 (B)


ரஸிகர்களுக்கோர்
ஹாஸ்யக்கலை
விருந்து!
விஜயாவின்
கல்யாணம்
பண்ணிப்பார்
டைரக்ஷன்... ப்ரசாத்
தயாரிப்பு.... நாகிரெட்டி...சக்ரபாணி




# இனாம்!



எமது நெ. 501. கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவித மயிரும் மை கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்துபோவதைத் தடுத்து மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 1—12—0 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 4—8—0,

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சு அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம், வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 கியூ கோல்டு மோதிரங்களும் இனாம். திருப்தியில்லையேல் பணம் வாபஸ்.

# ரூ 1500 ரொக்கப் பரிசு



இம் மாய மோதிரத்தை கையில் அணிந்தவுடன் மின்சாரம் போன்று அதனுடைய சக்தியால் எவ்வளவு கடின சித்தமுடைய ஆடவராயினும் பெண்ணாயினும் உங்கள் வசமடைவார்கள். பரீக்ஷையில் தேர்தலும், விவகாரத்தில் ஜெயமும் அடைவீர்கள்.

மாய மோதிரம் விலை அணா 12. ஸ்பெஷல் விலை ரூ. 2. அங்கீகரிக்காவிடில் வாபஸ் அளிக்கப்படும்.

யாராவது இதைப் பொய்யென நிரூபித்தால் ரூ. 1500 ரொக்கமாகப் பரிசளிக்கப்படும்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

**LONDON COMMERCIAL CO.,**

**P. B. 2. (C. K.) AMRITSAR.**



# உபசாரத்திற்கு உகந்தது

ஹேமா:- ஏன் மாமி, நேத்திக்கு ஒரு பெரியவர் ஒங்க வீட்டிற்கு வந்திருந்தாரே...அவரை சும்மா சௌக்கியமான்னு கேட்டுட்டு அனுப்பிட்டேளே...சாப்பிட ஏதாவது கொடுத்து உபசாரம் பண்ணியிருக்கக்கூடாதா......

பிரேமா:- இப்போ சாமான் விக்கிற விலையிலே 'டிபன்' பண்ணலாம்னு முடியல்லே...சரி, வேறு ஏதாவது தரலாம்னு பார்த்தேன், ஆனா அவருக்கு அவசரமா போக வேண்டியிருந்ததனாலே அது எல்லாம் தயார் பண்ணறமட்டும் இருக்க முடியாதுன்னு சொல்லிட்டார்.

ஹேமா:- ஏன்..,பேசாமே ஒரு டம்பிளர் 'டீ' கொடுத்திருக்கலாமே...'டீ'யை எவ்வளவு சீக்கிரம், எவ்வளவு சுலுவில், எவ்வளவு சிக்கனமாக தயாரிக்கலாம்!

பிரேமா:- ஆமாம்......உபசாரத்துக்கு உகந்தது 'டீ' தான்.

## மந்திர சக்தியுள்ள 'டீ'யைக் குடியுங்கள்.



சென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

CTB 79

இந்தியாவின் **மின்சாரம்,**

**நீர்பாசன** அபிவிருத்தி திட்டங்களுக்கு




**தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்**

இவர்களின் வியாபார மானேஜர்கள

**தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்**

SISTA'S - CMJ -

# காவேரி

## பொருளடக்கம்

நந்தன மலர் 11 | ஆடி இதழ் 12


வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி ... ... ... 11
கே. ஸ்ரீ.

கண்ணாடித் தொழில் ... ... ... ... 13
அ. வேணுகோபாலன்

டில்லித் தபால் ... ... ... ... ... 17
கே. ஸ்ரீநிவாஸன்

நீலக்கடலலையில் ... ... ... ... ... 23
கிருஷ்ணன் பாலா

புனர்ஜன்மம் ... ... ... ... ... ... 28
கோமதி சுப்ரமணியம்

பாசம் ... ... ... ... ... ... 35
விஸ்வம்

காதல் கதை ... ... ... ... ... ... 41
வேணு

லண்டன் அனுபவங்கள் ... ... ... ... 49
சி. வி. ராமகிருஷ்ணன்

சினிமாப் பகுதி ... ... ... ... ... 53
கண்ணன்

நாகரீகம் எங்கே? (தொடர் கதை) ... ... ... ... 57
ஜி. எஸ். மணி

என் குழந்தை ... ... ... ... ... ... 66
ரா. வேங்கடசாமி

காணிக்கைப் பொருள் ... ... ... ... ... 70
தி. நா. சுப்பிரமணியன்

சிற்பியின் கடிதம் ... ... ... ... ... 76
வ. அ. இராசரத்தினம்


### குறிப்பு

'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடைய -வே. அவைகளுக்குப் பத் ...ரியர் பொறுப்பா

# ARMSTRONG
## THE BETTER BICYCLE

199335

# ஆம்ஸ்டிராங்
## சிறந்த பைஸைகிள்



சிறந்த பைஸைகிளாகிய **ஆம்ஸ்டிராங்** ஒன்று உங்களிடம் இருந்தால் போதும்; வேலை நிமித்த மாகவோ வேடிக்கையாகவோ எவ்வித தொந்தரவும் இன்றி நீங்கள் ராஜபாட்டைபோலச் சவாரி செய்யலாம். ஒரு **ஆம்ஸ்டிராங்** வாங்குங்கள். ஸைகிள் தொழிலில் பிரசித்திபெற்ற தயாரிப்பாளர்களின் சிறந்த தயாரிப்பு உங்களுக்குச் சொந்தமாயிருக்கிறது என்கிற பெருமை உங்களுக்கு விரைவில் ஏற்படும். அதன் பெயரே குறிப்பிடுவதுபோல், வலிவாகவும், இந்தியாவின் கரடுமுரடான ரஸ்தாக்களில் நீடித்து நின்று வருஷக்கணக்கில் நம்பிக்கையளிக்கத் தக்கவாறு உழைப்பதாகவும் அது விளங்குகிறது. **ஆம்ஸ்டிராங்** — மிகவும் பிரபலமான பைஸைகிள்—ரஸ்தாவில் அதை நம்புங்கள். அதற்குக் கொடுக்கும் விலை அதற்குத்தகும்.

விநியோகஸ்தர்கள்

**ராயல் ஸைகிள் அண்டு மோட்டார் கம்பெனி**

13/14, பிராட்வே, தபால் பெட்டி நெ. 219, சென்னை-1.

ARMSTRONG
THE BETTER BICYCLE
ARMSTRONG CYCLES LTD
BIRMINGHAM

# காவேரி

| | | |
|---|---|---|
| நந்தன ௵<br>மலர் 11 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | ஆடி<br>இதழ் 12 |


## வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி

கே. ஸ்ரீ.

**ப**தினைந்து வருடங்களுக்குமுன் சென்னைச் சட்டசபை இப்பொழுதுள்ள சர்வகலா சாலைக்குப் பக்கத்துக் கட்டிடத்தில் கூடுவது வழக்கம். அப்பொழுதுதான் தமிழ்நாட்டின் தனித்தலைவர் ராஜாஜி முதலமைச்சர் பதவியேற்று, தேசமே பிரமிக்கும் முறையில் மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்புக்குள்ளிருந்து கொண்டே மக்களுக்குகந்த பல சாதகச் சட்டங்களை இயற்றினார். அவைகளுள் ஒன்று விவசாயக் கடன் நிவாரணச் சட்டம். தற்பொழுது தேசத்திற்கே காமதேனுவாக இருக்கும் விற்பனை வரியும் ராஜாஜியின் சிருஷ்டியே.

விற்பனை வரியை வர்த்தக சமூகம் மூர்த்தண்யமாக எதிர்த்தது. அந்த எதிர்ப்பைச் சட்டசபையில் பிரதிபலித்தவர் வர்த்தக சமூகத்தின் பிரதிநிதியாக விளங்கிய திருவள்ளூர் தட்டை ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரி (ஸ்ரீ டி. டி. கே). மடிப்புக் கலையாத ஆங்கில உடுப்புகள் ஒரு நாளைக்குப் பலவகை அவர் அணிந்தது ஏனையோருக்குப் பொறாமைகூட உண்டாக்கியிருக்கும். இதற்காகவே அவருக்கு 'டிப்டாப்" கிருஷ்ணமாச்சாரி என்ற பெயர்கூட உண்டு. "செய்வனத் திருந்தச் செய்" என்பதில் நம்பிக்கை உள்ள ஸ்ரீ டி. டி. கே. வர்த்தக சமூக விஷயங்களில் பூர்ண அக்கரை காட்டிவந்தார்.

ராஜாஜியால் சிருஷ்டிக்கப்பட்ட ராஜீயத் தலைவர்கள் அநேகர். அவர்களுள் ஒருவரானார் ஸ்ரீ டி. டி. கே. டி. டி. கே.யைத் தெரிந்தவர்களுக்கு அவர் காங்கிரஸில் சேர்ந்தார் என்று நம்புவதே கஷ்டமாயிற்று. ஏன், அவர் ஒரு ஆங்கிலேய பக்தர் என்றே எண்ணினார்கள் ஜனங்கள். எனினும் வர்த்தகம் என்ற முறையில் ஆங்கிலேயர்களுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தக் டி. டி. கே. தேசம் விடுதலையடையவேண்டும் என்ற விஷயத்தில் தாம் கொஞ்சமும் பின்வாங்கியவர் அல்ல என்பதைப் பிற்காலத்தில் நிரூபித்தார்.

தம் சொந்த வர்த்தகத்தை நன்கு வேரூன்ற வைத்துவிட்ட ஸ்ரீ டி. டி. கே. 1942-ஆம் வருஷம் வரை சாதாரண காங்கிரஸ் அங்கத்தினராகவே இருந்துவந்தார். அவர் வாக்கு வன்மையும் விவாதத்திற்கு அவர் விஷயதானம் செய்யும் முறையும் காங்கிரஸார் கவனத்தைக் கவர்ந்தன. 1942-ஆம் வருஷம் அவர் மத்திய சட்டசபைக்கு தஞ்சை—திருச்சி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மத்திய சட்டசபையில் வர்த்தக விஷயங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றவர் ஸ்ரீ கே. ஸி. நியோகி. ஆனால் டி. டி. கே. வர்த்தகத் துறையில் அனுபவம் உள்ள நிபுணர் என்ற ஹோதாவில் மத்திய சர்க்காரை ஒவ்வொரு விஷயத்திலும் புரியைக்கட்டி இழுத்தார், பேசுவதில் கோடையிடி பேச்சாளர் அல்ல டி. டி. கே. என்றாலும் அர்த்த புஷ்டியாக இருக்கும் அவர் விவாதம்.

1946-ல் டி. டி. கே. அரசியல் நிர்மாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசியல் சாஸனத்தை எழுத ஏற்படுத்தப்பட்ட நிபு

ணர்கள் கமிட்டியில் அங்கத்தினர் ஆனார். அம்பேத்கார்—அல்லாடி போன்ற நக்ஷத்திரங்கள் உள்ள கமிட்டியில் டி. டி. கேயும் நல்ல பெயர் வாங்கினார் என்பது அவர் திறமைக்குச் சான்றாகும்.

திரும்பவும் சென்ற தேர்தலில்—காங்கிரஸுக்கு விரோதமாக எல்லாக் கக்ஷிகளும் சேர்ந்த தேர்தலில்—டி. டி. கே. சென்னையிலிருந்து பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆனால் அவர் தேர்தலுக்கு நிற்கு முன்னரே அவர் நிச்சயமாக ஒரு மத்திய மந்திரி என்று இங்கு ஊர்ஜிதம் செய்துவிட்டார்கள்.

மத்திய சர்க்காரில் ஊழல் நிறைந்த இலாகா வர்த்தக இலாகா. இதில் பெர்மிட், லைஸன்ஸ் போன்ற பாரங்கள் கொடுக்க வசதி உண்டாதலால் வெள்ளையப்பன் பெருக்கெடுத்து ஊழியர்களிடையே ஓடியிருக்கிறார். தென்னிந்தியாவிலிருந்தே பல வர்த்தகர்களும் அவர்கள் பிரதிநிதிகளும் இங்கு வந்து ஸ்வர்ண புஷ்பம் சே[illegible]கன் முதல் ஸெகரட்டரி வரை கொடுத்து, காரியம் சாதிப்பது வழக்கம். ஸ்ரீ டி. டி. கேயை இந்தக் கட்டுரை எழுதச் சில குறிப்புகள் கிடைக்கப் பார்க்கவேண்டி வந்தது. அதற்கு நான் முயற்சித்துக் கடைசியில் முயற்சியைக் கைவிட்டு விட்டு, "டி. டி. கே. நம்பழைய நண்பர் தானே" என்று எழுத ஆரம்பிக்க நேர்ந்தது என்றால் வர்த்தக இலாகா எப்படிப்பட்ட கோட்டை என்று ஊகித்துக் கொள்ளுங்கள். டி. டி. கே. வேண்டினால் இந்த அபக்கியாதியைப் போக்கமுடியும்; போக்குவார் என்றே நம்புகிறேன்.

டி. டி. கே. அரசியல்வாதி என்பது சென்ற 15 வருஷங்களுக்குள் தான். ஆகவே அவருக்கு வாழ்க்கையில் மற்றும் உயரிய லக்ஷியங்களை அடைய முடிந்தது. அவர் நல்ல சங்கீ[illegible] கலா ரஸிகர், ஓயாமல் படிப்பவர். [illegible]ருடைய எலியட்ஸ் ரோட் வாஸமான "சாந்தி"யில் உள்ள புத்தகசாலை தனிப்பட்ட நபர்கள் புத்தகசாலைகளில் மிகவும் உயர்ந்தது.

சென்னையில் சொல்வதுண்டு; "கிறிஸ்தவக் கல்லூரிச் சரக்கு எப்படிச் சோடைபோகும்?" டி. டி. கே. இதே கல்லூரியில் படித்தவர். கல்லூரியை உயர்த்திச் சொல்ல இந்தப் பெயர் உதவுகிறது என்றாலும், ஸர் மகம்மது ஊஸ்மான்கூட அந்தக் கல்லூரியில் தான் படித்தார் என்றால் எப்படியிருக்கிறது?

டி. டி. கே.க்கு நான்கு பிள்ளைகள் உண்டு அவருக்கு இளம் வயதிலேயே அவர் மனைவி காலமாகிவிட்டார். பையன்கள் நன்றாகப் படிக்கவேண்டும். கிட்ட இருந்துவிட்டால் செல்லம் கொடுத்துக் கெட்டுவிடும் என்றே அவர்களையும் அவர் தாயாரையும் மயிலாப்பூரில் ஒரு தனி ஜாகையில் வைத்திருந்தார். தம் விடா உழைப்பால் முன்னுக்குக் கொண்டு வந்த அவர் வர்த்தகத்தை அவர் மூத்த பையன் நடத்தி வருகிறார். பலவித அந்நிய நாட்டுச் சாமான்களை மக்களுக்கிடையே தினசரி வாழ்க்கையில் புகுத்தியதற்குக் காரணம் டி. டி. கேயின் விளம்பர ஜாலமே.

தற்சமயம் தலை எது கால் எது என்று வர்த்தக இலாகாவுக்கே தெரியாது. ஏனென்றால் வர்த்தகக் கொள்கை தேய்பிறைச் சந்திரன்போல் குறைந்து, கொள்கையைப் பற்றிய பிதற்றல் அறிக்கைகள் ஒன்றையொன்று ரத்துச் செய்து வளர்பிறைச் சந்திரன்போல் பிரம்மாண்டமாகக் குவிந்திருக்கின்றன. டி. டி. கே. மனது வைத்தால் ராஜாஜி சொன்ன துடைப்பக் கட்டையைக் கொண்டு இலாகாவைச் "சரி" செய்யமுடியும்.

# இந்தியாவில்

# கண்ணாடித் தொழில்

அ. வேணுகோபாலன்

இன்று நாம் சீசா என்று குறிப்பிடும் கண்ணாடி இந்தியாவில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே புழக்கத்திலிருந்திருக்கின்றது என்று தெரிய வருகிறது. கண்ணாடி என்றாலென்ன? உருவத்தைப் பிரதி பலிக்கும் வஸ்து என்ற பொருளில், படிமக்கலம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் நம்முன்னோர். இதுவே, பளிங்கு ஸ்படிகம் என்று திரிந்திருக்கிறதென்பது சிலரின் அபிப்பிராயம். இவ்வார்த்தை கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வரையப்பட்ட ஒரு சாஸனத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது; எனவே, அக்காலத்தில் இது புழக்கத்திலிருந்திருக்கின்றது எனத் தெரிகிறதல்லவா?

கண்ணாடியைக் கண்டு பிடிக்காததற்கு முன்பு மனிதன் தன் பிரதி பிம்பத்தைக் காண வசதியான சாதனம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், நீரில் குளிக்கும்போது தன் உருவத்தைப் பார்த்திருக்க கூடும்.

பழைய காலத்தில் எரிமலைகள் அடிக்கடி நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தன; அதில் பலவித தாதுப்பொருள்கள் பூமியின் கீழிருந்து வெளியே வீசப்படும். இவைகளுள் ஒன்றான ஆப்ஸ்டின் (Obsidian) என்னும் ஒரு தாதுப்பொருள் எரிமலைக் குழம்பிலிருந்து வீசப்பட்டு உறைந்து கிடக்கும். இது சற்றே பிரதிபலிக்கும் தன்மையுடையதாதலால், இதையும் மக்கள் உருவங்களைப் பார்க்கும் ஒரு சாதனமாக உபயோகித்திருக்கிறார்களெனத் தெரிய வருகிறது.

இந்த 'ஆப்ஸ்டின்' தாதுப்பொருள்கள் மண்மூடி மறைந்துபோன மெக்சிகோ காட்டிலும், அமெரிக்காவிலிருந்த இன்சால் ராஜ்ஜியத்தின் மண்மூடிய பிரதேசங்களிலும் கிடைத்திருக்கின்றவை.

கி. மு. 2,200 ஆண்டுகளுக்கு முன்பு சிங்களத் தீவிலும், கி. மு. 2,400 வருடங்களுக்கு முன்பு எகிப்திலும் கண்ணாடியை உபயோகித்திருக்கின்றனர். எகிப்து தேச அரசர்களின் சமாதிகளில் கண்ணாடியை உற்பத்தி செய்யும் காட்சிகள் சித்திரிக்கப்பட்டிருப்பதால், இவர்களுக்கு இத்தொழில் தெரிந்திருக்கிறதென ஊகிக்கலாம். 'மஹாவம்சம்' என்ற புத்த நூலில் கண்ணாடியைப் பற்றிய ஒரு குறிப்பு இருப்பதால், சிங்களத்தீவில் கண்ணாடி உபயோகத்திலிருந்திருக்கின்றது என அறிகிறோம். இதுவன்றி, கி. மு. 1500–இல் ஹீப்ரூ என்று கூறப்படும் மக்களும், கி. மு. 600 இ-ல் கிரேக்கர்களும், கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் இத்தாலியர்களும் கண்ணாடியைப் பற்றின விஷயங்களையறிந்து, அதை உற்பத்தி செய்திருக்கிறார்களெனச் சரித்திர வாயிலாக அறிகிறோம்.

சில சரித்திரப் பேராசிரியர்கள் பீனிஷ்யர்கள்தான் முதலில் கண்ணாடியைக் கண்டு பிடித்தார்களெனக் கூறுகிறார்கள்; இது தவறான கருத்தாகும். ஏனெனில், எகிப்திய நாட்டுக் கண்ணாடியையும், பீனிஷ்யநாட்டுக் கண்ணாடியையும் ஒப்பிட்டுப்பார்த்த இப்பேராசிரியர்கள் பீனிஷ்ய கண்ணாடியின் சிறந்த வேலைப்பாட்டையும், கலைத்திறனையும் கண்டு, அதற்கு முதலிடம் கொடுத்துவிட்டிருக்கிறார்கள்; உண்மையில், எகிப்தியர்களிடத்திலிருந்துதான் இத்தொழிலை அறிந்திருக்கிறார்கள் பீனிஷ்யர்கள்; ஆனால் வேலைத்திறனில் எகிப்தியரை மிஞ்சிவிட்டிருக்கிறார்கள் பீனிஷ்யர்கள்! எனவே, வேலைத்திறனை மட்டும் கண்டு காலத்தை நிர்ணயித்துவிடமுடியாது.

எகிப்தியர்கள் கண்ணாடியைக் கண்டுபிடித்தாலும் அது பிரகாசமாயிருக்க உபயோகிக்கும் பாதரஸத்தை அதனோடு சேர்க்கும் திறனை முதன் முதலாக அறிந்தவர்கள் ரோமர்கள்தான்.

சரித்திரச் சான்றுகளை ஒருபுறம் வைத்துவிட்டு, கண்ணாடியை முதன் முதலாகக் கண்டு பிடித்த வரலாற்றைக் கவனிக்கலாம்.

அநேக நூற்றுண்டுகளுக்கு முன்பு கடல் மார்க்கமாய்ச்சில வியாபாரிகள் சிரியா என்று கூறப்படும்நாட்டிற்கருகில் பிரயாணம்செய்து கொண்டிருந்தபோது தங்கள் உணவை தயாரிக்க ஒரிடத்தில் இறங்கி, சமைப்பதற்கு அடுப்பு அமைக்கக் கற்களைத்தேடச் சமுத்திரக் கரையில் கற்களில்லாததால், தாங்கள் வியாபாரத்திற்கு எடுத்துச் சென்றிருந்த வெடியுப்புக் கட்டிகளை (Nitre) அடுப்பாக அமைத்துச் சமைக்கலானுர்கள். தீயின் உஷ்ணத்தினுல் அவ்வெடியுப்புக் கட்டிகள் உருகித் திரவமாக மணலின்மேல் பரவ ஆரம்பித்தது. இத் திரவம் மிகவும் பளபளப்புடனிருந்ததாகவும், ஆச்சரியத்தால் இதை உற்றுப் பார்க்கத் தங்கள் உருவம் அதில் பிரதிபலிப்பதைக் கண்ட அவர்கள் மிக வியப்படைந்தனர் என்பதும் வரலாறு.

இது எப்படியிருந்தாலும், ஐரோப்பியர்களால்தான் இத்தொழில் வெகு முன்னேற்றமடையவாரம்பித்தது என்பதில் சந்தேகமில்லை.

இந்த அபிவிருத்திக்குக் காரணம், அங்கு முன்னேறியிருந்த ரஸாயன அறிவின் அபிவிருத்திதான். விஞ்ஞானத்தினுல் கண்ணுடி யபிவிருத்தியடைய, கண்ணுடி மூலம் விஞ்ஞானம் அபிவிருத்தியடைந்து வருகிறது! கண்ணுடி இல்லாமல் தற்காலத்தில் விஞ்ஞான முன்னேற்றமே சாத்தியமில்லையென்று துணிந்து கூறலாம்.

| பெயர் | அளவு | 1950–51இல் உற்பத்திசக்தி | உற்பத்தியானது | 1955–56இல் உற்பத்திசக்தி | எதிர்பார்ப்பது |
|---|---|---|---|---|---|
| குழல் சாமான் | 1000 டன் | 211 | 81 | 232 | 174 |
| ஷீட் கண்ணுடி | " | 12 | 5 | 36 | 27 |
| வளையல்கள் | " | 35 | 16 | 35 | 17 |

ஏனெனில், விஞ்ஞானச் சோதனைகள் செய்யவும், மற்றும் பல விதங்களிலும் கண்ணுடி, விஞ்ஞானத்திற்கு இன்றியமையாதது. இதுவன்றி, எந்த வஸ்துவைக் கண்ணுடியில் வைத்தாலும் அது கெடுவதில்லை; இக்காரணத்தாலும், இதனைச் சுலபமாகச் சுத்தம் செய்ய முடிவதாலும், ஒளி இதனுள் பிரவேசிப்பதாலும் இதற்கு மிகவும் மதிப்புண்டு. எல்லாவற்றையும்விடக் குறைந்த விலையில் அழகான கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் இதைத் தயாரித்து விற்பதால் இதற்கு மார்க்கெட்டில் நல்ல இடமுமிருக்கிறது.

இந்தியாவில் இத்தொழில் ஓரளவு முன்னேறியிருக்கிறது.

| வருடம் | பேக்டரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1939-இல் | 80 |
| 1942-இல் | 164 |
| 1945-இல் | 170 |

1930-இல் சுமார் $4\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மேல் கண்ணுடிச் சரக்குகள் இறக்குமதியாகியிருக்கின்றன; ஏற்றுமதியின் மதிப்பு 1 கோடி தான். 1941-இல் இறக்குமதி ஒரு கோடியாயிருக்க, ஏற்றுமதி 5. 8 கோடியாக உயர்ந்திருக்கிறது.

யுத்த சமயத்தில் இத்தொழில் ஏன் இந்தியாவின் எல்லாவகைத் தொழிலுக்குமே சிறப்பாக முன்னேறின. இதில் கண்ணுடித் தொழிலுமொன்ருகும். இந்தியப் பிரிவினைக்குப் பின் போதிய நிலக்கரி கிடைக்காததாலும், போக்குவரவு வசதிக் குறைவாலும் உற்பத்திக் குறைந்திருந்தது. இப்போது நாட்டின் தேவையில் 80 சதம் உற்பத்தியாகிறது. 1945இல் 1 . 1 லட்சம்டன் உற்பத்தியாயிருக்கிறது; 1949இல் 34 லட்ச சதுர அடிகளும், 1950இல் $62\frac{1}{2}$ லட்ச சதுர அடிகளும் உற்பத்தியாயிருக்கின்றன.

இந்திய தேசியத் திட்டக் கமிஷன் கண்ணுடி உற்பத்தியை அதிகரித்துப் பற்ருக்குறையைப் போக்கத் திட்டம் வகுத்திருக்கிறது. இதன் விவரம்:

இந்தியாவிலுள்ள மொத்தம் கண்ணுடித் தொழில்கள் 170. அதில்,

| | |
|---|---|
| ஐக்கிய மாகாணத்திலிருப்பது: ... | 70 |
| பம்பாயில் இருப்பது ... ... | 32 |
| கல்கத்தாவில் " ... ... ... | 30 |
| சென்னையில் " ... ... ... | 4 |

ஹைதராபாத்தில் 2ம், மைசூரில் ஒன்றுமாக 139 பாக்டரிகள் இருக்கின்றன; மிகுதி பாக்கிஸ்தான் பகுதியில் இருக்கின்றன.

பெல்காம், வங்கம், மைசூர் முதலானவைகளில் பல்புகள், கண்ணுடிகள் தயாராகின்றன. இந்தியாவில் தயாராகும் பல்புகளின் 1950-இன் விபரம்.

| உற்பத்தி சக்தி | தயாரானது | நம் தேவை |
| --- | --- | --- |
| 24,00,00,000 | 13,56,56,100 | 14,00,00 000 |

ஐக்கிய மாகாணத்தில் கண்ணாடி வளையல்களை உற்பத்திச் செய்கிறார்கள்; பம்பாயில் தர்மாஸ் பிளாஸ்க்குகளைத் தயாரிக்கிறார்கள்.

ஐ. மா. தொழிற்சாலைகளில் வளையல்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. வளையல் தயாரிக்கும் சிறு சிறு தொழிற்சாலைகள், (கிராமக் கைத்தொழில்களிலொன்று) தொழிற்சாலைகளின் அசுர பலத்துடன் போட்டிபோட இயலாமல் அழிந்து போயின. இந்திய அரசாங்கம் கண்ணாடி வளையல் தொழிலுக்கு விதிவிலக்கு அளித்து, இதைக் குடிசைத்தொழிலுக்கே விட்டுவிடவேண்டும்; மற்றப்பல்பு, கண்ணாடி, ஷீட் போன்றவைகளைத் தொழிற்சாலைகளில் தயாரிக்கலாம். தூங்கிக்கொண்டிருக்கும் குடிசைத் தொழிலபிவிருத்தி போர்ட் உறக்கந்தெளிந்து, இதுபோன்ற விஷயங்களை ஆராய்ந்து, கைத்தொழில்கள் நசித்துவிடாமல் பாதுகாக்க வழி வகுத்தாலொழிய இப்போட்டியினால் கிராமங்களுக்கு ஒருவிதப் பயனுமில்லை.

கண்ணாடி உற்பத்திக்குச் சுண்ணாம்புக்கல், சோடா உப்பு, சுத்த மணல், இவைகளை உருக்கிப் பதப்படுத்த நிலக்கரி இன்றியமையாதன. இவைகளைப் பக்குவமாகக் கலந்து, பதமான பிறகு கண்ணாடி, கண்ணாடிப் பாத்திரங்களைத் தயாரிக்கிறார்கள். முன்னைப்போல இப்போது கண்ணாடிப பாத்திரங்களைத் தயாரிப்பதில்லை; இயந்திர மூலமாகச் சுலபமான முறையில் தயாராகின்றன இப்போது. இது மிகவும் நுட்பமான வேலை. சற்று உஷ்ணம் குறைந்துவிட்டால் பதன்போய் இளகியும், திடீரெனக் குளிர்ந்தால் இறுகி உடைந்தும் விடும். எனவே வெகு கவனத்துடன் செய்ய வேண்டிய வேலையிது. இவ்வளவு ஜாக்கிரதையாகச் செய்யவேண்டிய வேலையைக் கொஞ்ச காலத்திற்கு முன்பு வாயால் ஊதியே வேண்டிய உருவங்களை அமைத்து வந்தார்கள்; இப்போதும் சிலயிடங்களில் இம்முறையைப் பின்பற்றி வருகிறார்கள்.

நீண்ட ஒரு குழாயை எடுத்துக்கொண்டு அதன் ஒரு நுனியைக் கண்ணாடியிலும், மற்றொரு பாகத்தைத் தம் வாயிலுமாக வைத்து ஊதுவார்கள். வேண்டிய உருவம் வரும் மாதிரி தகுந்த முறையில் ஊதி, உருவம்வந்தவுடன் நிறுத்துவார்கள். இது காற்றினால் இறுகிவிடும்.

தற்போது பலவகைக் கண்ணாடிகளைத் தயாரிக்கிறார்கள். பொஹிமியன் கண்ணாடி; சாதாரணமாகக் கண்ணாடிக்கலவையில் சோடியம் சேர்ப்பார்கள்; ஆனால் இதில் பொடாஸிய உப்பு சேர்க்கிறார்கள். எனவே இது சற்றுக் கடினமாயிருக்கும். இதை அதிகச் சூட்டினால்தான் உருக்க முடியும்.

சோடாக் கண்ணாடி: ரஸாயன மாற்றத்திற்கேற்ப இக்கலவை எளிதாக உருகும். எனவே, இக் கலவை மூலம் எளிய பாத்திர வகைகளைத் தயாரிக்கிறார்கள்.

கற்கண்ணாடி (Flint glass) இதில்தான் விஞ்ஞான பரிசோதனைகளுக்குதவும் பலவிதக் கண்ணாடி வகைகளைத் தயாரிக்கிறார்கள். இதில், பொடாஸியத்துடன், ஸீஸம் என்பதையும் கலக்கிறார்கள்.

இன்னும் ஏனாக் கண்ணாடியென்றும் பல நிறக் கண்ணாடிகளும் தயாராகின்றன.

வர்ணங்களில் இரண்டு நிறங்களை ஒன்றோடொன்று சேர்த்தால் புதிய நிற வர்ணம் உருவாகிறது. இதே மாதிரி, கண்ணாடி உற்பத்தியிலும் மாங்கனீஸ் என்ற உலோகத்தைச் சேர்த்து ஊதா நிறக் கண்ணாடியையும் செம்பைச் சேர்த்துப் பச்சை நிறத்தையும் பல நிறங்களில் பல உலோகத்தைச் சேர்ப்பதின் மூலம் நிறங்களை மாற்றுகிறார்கள், இதெல்லாம் விஞ்ஞானத்தின் சாதனையாகும். இன்னும் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுமோ, அது அந்த விஞ்ஞானிகளுக்குக் கூடத் தெரியாது!

மேல் நாடுகளில் இவ்வாறு பற்பல விதங்களில் மாற்றங்களையும், உருவங்களையும் அமைக்கும்போது, நம் நாட்டிலிருக்கும் கண்ணாடித் தொழிலைச் சீரிய முறையில் நடைபெறவாவது ஒரு ஆராய்ச்சிச் சாலை இருக்க வேண்டுமென இந்திய அரசாங்கம் கல்கத்தாவில் கண்ணாடி, பீங்கான் ஆராய்ச்சிச் சாலையொன்றை ஸ்தாபித்திருக்கிறது. இதன் மூலம் ஆராய்ச்சிகள் பெருகி, அதன்மூலம் கண்ணாடித் தொழில் முன்னேறுமாக!

முன்னேற்றமடையச் செய்ய நாம் கண்ணாடிப் பாத்திரங்களை அதிகமாக உபயோகிப்போமாக!

வரலக்ஷ்மிப் போட்டி — 30 Govt. Regd. No. 816

முதற் பரிசு **5000** **பரிசு ரூ 10,000** மற்ற பரிசுகள் **5000**

சரியான விடைக்கும் 1, 2, 3, தவறுள்ள விடைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படும். சீல் விடை சென்னை ப்ரீமியர் பாங்கில்.

**கட்டணம் மேல்கீழ் வரிசை ஒன்றுக்கு அணா நான்கு. ஒரு ரூபாய்க்கு ஐந்து வரிசைகள் எழுதலாம்**

விசேஷப் பரிசு: ரூ. ஏழு அல்லது அதற்குமேல் கட்டணம் அனுப்பும் ஒவ்வொருவருக்கும் விசேஷப் பரிசு ஒன்று அளிக்கப்படும்.

## முடிவு தேதி 12—8—52

| | | விடைகள் 1 | 2 |
|---|---|---|---|
| 1 | காதலி தன் காதலனுடைய இதற்குப் பாவசமடைகிருள் | அன்பளிப்பு | அன்பணைப்பு |
| 2 | பெரிய துகை கொடுக்கல் வாங்கல் செய்யும்போது இது இல்லாமல் செய்யலாமா? | நமுது | ரசீது |
| 3 | கடந்த பொது தேர்தலில் பல போலி கட்சிகளின் இதைக் கண்டு ஏமாந்து விட்டனர் மக்கள் | வேஷம் | கோஷம் |
| 4 | ஞான முடையவன் பேச்சு இதாகவே இருக்கும் | அறிவு | அளவு |
| 5 | ஆத்திரமாக ஒருவர் எழுதும் கடிதம் இப்படியாக இருப்பது இயற்கையே | காரம் | நீளம் |
| 6 | தகப்பனுர் தன் பெண்ணுக்குத் தேடும் வரன் இது உள்ளவனுக இருக்க விரும்புவார் | ஆத்தி | புத்தி |
| 7 | இது ஓரளவாவது இல்லாவிட்டால் வியாபாரம் வெற்றியடைவது எப்படி? | ஆடம்பரம் | விளம்பரம் |
| 8 | நாம் ஒருவரிடம் இது வைக்குமுன் அவர் இதற்குப் பாத்திரம்தானு என்று யோசிக்கவேண்டும் | விசுவாசம் | சகவாசம் |
| 9 | இது அதிகமிருந்தால் தூக்கம் பிடிக்காது சிலருக்கு | இரைச்சல் | வெளிச்சம் |
| 10 | படபடப்பாகப் பேசும் சுபாவமுள்ளவர்களுக்கு இது எளிதில் வந்து விடுவதுண்டு | ஆயாசம் | ஆவேசம் |
| 11 | சின்ன விஷயங்களுக்குக்கூட இது செய்வது சில பெண்களின் சுபாவம் | பிரமாதம் | பிரமாணம் |
| 12 | வாங்குபவர்களுக்குக் காட்டுவதற்காகவே இப்படியாகக் கொஞ்சம் வைத்திருப்பார்கள் கடைகளில் | மாதிரி | உதிரி |
| 13 | பெரிய கடைகளில் வியாபாரம் இப்படியாகவே நடக்கும் | கரார் | சரூர் |

மேலே உள்ள கட்டத்தில் பதின்மூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம், அச்சுக் கூப்பன்களும் இலவசம். விடைகளை வார்த்தைகளாகவோ 1-2 எண்களை உபயோகித்தோ எழுதவும். இப் போட்டியின் சரியான விடை காவேரி ஆவணி இதழில் வெளிவரும். சகல விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகளும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம்:—

**மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி** "ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

போட்டி 29-ன் சரியான விடை:-
(1) வாடியது (2) சித்திரம் (3) குலைதல் (4) ஞானம் (5) மலிதல் (6) பறித்தல் (7) தாய்மை (8) பாஷானம் (9) விமர்சனம் (10) உயிர் (11) சாகசம் (12) புதிது (13) வெள்ளம். 1112111222122

போட்டி—27-ன் பரிசு விவரம். முதற் பரிசு தலைக்கு ரூ. 122—0—0-விதமும், 2-வது பரிசு தலைக்கு ரூ. 18—0—0 விதமும், 3-வது பரிசு தலைக்கு ரூ 2—0—0 விதமும், 4-வது பரிசு தலைக்கு ரூ. 0—8—0 விதமும், பகிர்ந்து வழங்கப்பட்டன. பரிசுகள் 27—6—52 தேதியன்று அனுப்பப்பட்டன.

**கூப்பன்களும் கட்டணமும் வசூல் செய்து அனுப்ப எங்கும் கலக்டர்கள் தேவை**
**கலக்டர்களுக்கு வெள்ளிப் பரிசு பிரதி மாதமும் உண்டு.**

# டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

தேசமெங்கும் தேர்தல்கள் நடந்துகொண்டிருந்த பொழுதும் சரி, அதற்குப் பிறகு தேர்தல்களின் முடிவுகள் வெளிவந்த பிறகும் சரி, இங்கு "சென்னையைப்பார்" என்று கொஞ்சம் குதூகலத்துடன் சொல்லிக்கொண்டிருந்தார்களே ஒழிய, "சென்னையைப்பார்" என்று சொல்லுவதற்குக் காரண பூதர்களான கம்யூனிஸ்ட்கள் டில்லிக்கும் வருகிறார்கள், அவர்கள் எண்ணிக்கை குறைவாயிருப்பினும் சரி, அவர்களின் தொந்தரவு மிகவும் அதிகமாக இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. கம்யூனிஸ்ட்டுகள் பார்லிமெண்டு முறைகளில் தங்கள் பூர்ண நம்பிக்கையைத்தெரிவித்தபிறகு, வெகு பலருக்கு "சீ, பாவம் இந்தக் கம்யூனிஸ்ட்டுகளா குண்டர்கள்?" என்று கூடத்தோன்றியிருக்கக்கூடும். பார்லிமெண்டு முறைகளைத் தங்கள் கோஷப்பிரசார சகாப்தத்தில் ஒரு காண்டமாக உபயோகிக்கப்போகிறார்கள் என்று யாரால் சொல்லமுடியும்?

பார்லிமெண்டு ஆரம்பித்தது முதல் தங்கள் கலாட்டா முறைகளால் மக்களின் கவனத்தைக் கவர விரும்புகிறார்கள் கம்யூனிஸ்ட்டுகள். பார்லிமெண்டுக் கூட்டம் மிகவும் ஒழுங்காக நடப்பது வழக்கம். கேள்விகள் கேட்பதிலும் சரி, விவாதம் நடக்கும்பொழுதும் சரி, மிகவும் அமைதியும் ஒழுங்கும் நிலவுவது வழக்கம். ஒரு மெம்பர் பேசுகையில் மற்றவர் எழுந்திருக்கக்கூடக் கூடாது. இப்படிக் கட்டுப்பாடு உள்ள ஸ்தலத்தில் தங்கள் கை வரிசைகளையும் குரல் வகைகளையும் காண்பிக்க ஆரம்பித்துவிட்டார்கள் கம்யூனிஸ்டுகள். எதையாவது ஆக்ஷேபிக்க வேண்டும் என்றால் எல்லோருமாக எழுந்து "கோவிந்தா" (அல்லது "ஸ்டாலினா"?) போட்டுச் சபையை நாற அடித்துவிடுகிறார்கள். இப்பொழுதுதான் தெரிகிறது இந்த வட்டாரங்களில் கம்யூனிஸ்ட் வியாதி எவ்வளவு கொடியது என்று. ஜனநாயக முறைகளில் உண்மையில் நம்பிக்கை இல்லாதவர்களுக்குப் பார்லிமெண்டாய் இருந்தால் என்ன, அதற்கு அப்பனாய் இருந்தால் என்ன?

கம்யூனிஸ்ட் கோஷம் எப்பொழுதையும் விடச் சென்ற வாரம் மிகவும் உற்சாகமாக எழுந்து வானைப் பிளந்தது. காரணம், மத்திய சர்க்காரில் அமைத்திருந்த பல ஆலோசனைக் கமிட்டிகள் ரத்துச் செய்யப்பட்டன. இந்தக் கமிட்டிகள் வெள்ளையர்கள் அரசாண்ட காலத்தில் எல்லா விதமான விஷயங்களையும் ஜனப் பிரதிநிதிகளைக் கலந்தே முடிவு செய்வதாக வேஷம்போட ஏற்படுத்தப் பட்டவை. வெள்ளையர்கள் ஏற்படுத்திய விஷயங்களில் எதைக் கை விட்டு விட்டார்கள் நம் சர்க்கார்? ஒன்றையும் விடவில்லை. காரணம், பயம். எதையாவது விட்டு அனர்த்தம் விளைந்தால் என்ன செய்வது?

இந்தக் கமிட்டிகளில் பல, பாதுகாப்பு, நிதி, போக்கு வரத்து, வர்த்தகம் முதலிய இலாகா சம்பந்தப்பட்டவை. கமிட்டிகளில் சர்க்கார் அங்கத்தினர்கள் தவிர, உத்தியோகப் பற்றற்ற முறையில் பல பார்லிமெண்டு அங்கத்தினர்களையும் சேர்ப்பது வழக்கம். அந்த அங்கத்தினர்களுக்கு இலாகா சம்பந்தப்பட்ட எல்லா நுட்பமான குறிப்புகளையும் அவர்கள் கேட்டால் கொடுத்தாக வேண்டும். இப்பொழுது சர்க்காருக்கு உண்டான தலைவலி இந்தக் கமிட்டிகளில் கம்யூனிஸ்ட்களுக்கும் இடம் கொடுக்க வேண்டிவருமே, என்ன செய்வது? சாதாரணமாக இதுமாதிரி விஷயங்களில் தர்ம சங்கடமே கிடையாது சர்க்காருக்கு. உண்மையில் சர்க்காருக்கு வெளியே தெரியக்கூடாத விஷயங்கள் வெளிப்பட்ட பொழுதுகூட அவர்கள் கவலைப்படவில்லை. ஆனால் விதைக் கோட்டைக்குள் பெருச்சாளியை வைத்து யார்தான் கட்டுவார்கள்? கம்யூனிஸ்ட்கள் தேச நலத்தையே பெரிதாகக் கருதி உழைத்தால் சரி. ஆனால் அவர்களுக்குத்தான் சொந்தத் தேசம் ருஷ்யா ஆயிற்றே. எந்த விஷயத்தில், எந்தப் பிரச்னையைத் துலக்குவதில் அவர்கள் உண்மை அக்கறை காட்டியிருக்கிறார்கள்? ஆகவே, சர்க்காருக்குள் புகுந்து தேசத்தின் ரகசியங்களை அறிந்து வெளியே அனுப்புவார்களோ என்று பயந்தே மத்திய சர்க்கார் இப்பொழுது ஆலோசனைக் கமிட்டிகளை ரத்துச் செய்துவிட்டார்கள்.

நாடு சுதந்திரம் பெற்று, சர்க்கார் அமைத்த உடனேயே இந்தக் கமிட்டிகளை ஒழித்திருக்கலாம்; அப்பொழுது இந்தக் கமிட்டிகள் மூலம் காங்கிரஸ் குசாக்கிரபுத்திகளுக்குச் சந்தர்ப்பம்கொடுத்து, மாப்பிள்ளை தயார் செய்யலாம் என்று நேருஜி கனுக் கண்டார். உருப்படியாக உருவானது என்னவோ ஒன்றும் இல்லை. ஆகவே, இப்பொழுது அவைகளை மூட்டைகட்டியதால், கம்யூனிஸ்ட் தேச பக்தர்களிடமிருந்து! எதேச்சாதிகார வெறியர் என்ற பட்டத்தைக் கட்டிக் கொண்டுவிட்டார் ஸ்ரீ ஜவஹர்லால்! இதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை, அவர் விஷயம் தான் "வந்தபின் காப்போன்" முறையாயிற்றே. ஹீராகுத் அணை, ரெடிமேட் வீடு கட்டும் தொழிற்சாலை, காஷ்மீர்........... அடேயப்பா!

* * *

நேருஜியைப்பற்றித் தெரியாத குழந்தை ஒன்றுகூட இந்தியாவில் இராது. பெரிய தேசபக்தர், தேசப் போராட்டத்தில் பங்கெடுத்த பிரதம வீரர், எழுத்தாளர் இத்தியாதி. ஆனால் அவரைப்பற்றி ஒன்றுமட்டும் ஜனங்களுக்குத் தெரியாது. அவர் யாவருக்கும் நல்லவராக இருக்க விரும்புபவர். அப்படி இருப்பதால்தான் ருஷ்யா, சீனா முதலிய நாடுகளை மற்றத் தேசங்கள் கண்டு நடுங்கியபோதிலும் அவருக்குக் கொஞ்சம்கூடப் பயம் இல்லை. இப்படி நல்லெண்ணம் காட்டும் நம் பிரதமருக்குக் கிடைக்கும் பிரதிப் பிரயோஜனம் அந்த நாட்டுப் பிரதிநிதிகள்மூலம் இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்குக் கிடைக்கும் பண உதவியும் பிரசார உதவியுமே. ருஷ்யப் புரட்சியைப் பற்றியும் அதன் காரண கர்த்தாக்களைப் பற்றியும் லக்ஷக்கணக்கான புஸ்தகங்களும் சஞ்சிகைகளும் இந்தியாவில் பேரளவில் விலை என்ற பெயரால் சப்ளை செய்யப்படுகின்றன. மார்க்ஸ்—என்ஜல்ஸ் கம்யூனிஸ்டுகளுக்குக்கூடக்கடவுள் போன்றவர்கள். இவர்கள் எழுதியிருக்கும் புரட்சிக் கீதை ஒன்று இரண்டு வீசை கனம் இருக்கும். அது கேவலம் ரூ. 2—8—0-க்கு விற்கப்படுகிறது. இது மறைமுகமான உதவி. நேர்முகமாக வெள்ளையப்பன்கூடக் கரை புரண்டு ருஷ்ய ஸ்தானிகர் மூலம் ஓடுகிறது. அமெரிக்கா பணத்தை இந்தியாவில் கொட்டி, இதைப் பிடிக்க ஏற்பாடு செய்கிறது என்று ஓலம் இடுகிறார்களே கம்யூனிஸ்ட்டுகள், இவர்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு ருஷ்ய ரூபிளும் (ருஷ்ய நாணயம்) நல்ல பாம்புக்கு வார்க்கப்படும் பால் என்று ஏன் சொல்லமாட்டேன் என்கிறார்கள்?

நிற்க, கம்யூனிஸம், கம்யூனிஸ்டுகள் சம்பந்தப்பட்டவரை வழ வழா கொழ கொழா என்று சமீப காலம் வரை இருந்து வந்தார் நேருஜி. அந்த ராஜியப்பெருக்கைத் தடுக்க வேண்டும், அந்த ஸித்தாந்தவாதிகளை ஒடுக்கவேண்டும் என்று அவருக்குத் தோன்றவில்லை. தெற்கே, கலையும், புராதனமும், தெய்வீகமும் புரண்டு ஓடும் தெற்கே, தக்ஷிண நாகரிகத்தைக் கட்டப்பாறை எடுத்து உடைத்து, லெனின் மார்க்கு நாகரிகத்தை ஸ்தாபிக்க விரும்பும் நம் தோழர்களை, "விட்டேனாபார்" என்று மார்தட்டி ராஜாஜி சங்கநாதம் செய்ய ஆரம்பித்த பிறகுதான், நேருஜியும் கம்யூனிஸ்டுகளை நேரிடையாகத் தாக்க ஆரம்பித்திருக்கிறார். குண்டனுக்குகந்தது குண்டாந்தடி என்று நேருஜிக்கு ராஜாஜி மூலம்தான் தெரியவேண்டும் போலும்!

கம்யூனிஸ்ட்களுக்குப் புரிவது மண்டையிலடி ஒன்றுதான் போலும். "விவாதத்தில் கொஞ்சமாவது புத்திசாலித்தனம் காட்டப்படவேண்டும். புத்திக்கும் உங்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள சமீபமே இருக்கிறது" என்று நேருஜி திரும்பத் திரும்பப் பல்லவியை அப்பட்டமாகப் பாட, பார்லிமெண்டில் ஆரம்பித்த பிறகுதான் இங்கும் அவர்கள் ஓய்ந்திருக்கிறார்கள்.

* * *

வால் நுழைய இடம் இருந்தால் தலையையே நுழைக்கும் கம்யூனிஸ்டுகளுக்குப் பாஷாவாரி மாகாணப் பிரிவினை தொக்குப்போல அவர்கள் கையில் சிக்கியது. அதை உடனே பிரசார மாத்திரையாக மாற்றி, பார்லிமெண்டில் ஒரு பிரேரேபணையைக் கொண்டு வந்துவிட்டார்ஒரு கம்யூனிஸ்டு அங்கத்தினர். வெறும்வாயை மெல்பவர்களுக்கு அவலே கிடைத்துவிட்டால் கேட்பானேன்?

பாஷாவாரிப் பிரிவினை காங்கிரஸ் கக்ஷிக்குப் புதியது ஒன்றும் இல்லை. உண்மையில், அந்தப் பிரகாரம் செய்வதாகத் தேர்தல் பிரகடனத்தில் காங்கிரஸார் கூறியிருக்கிறார்கள். ஆனால்—இது பெரிய "ஆனால்"—இதில் கம்யூனிஸ்டுகள் கிதாப்பைக் கட்டிக்கொண்டு போகப் பார்க்கும்பொழுது சர்க்கார் வாளாவிருப்பதா என்ற பிரச்னை எழுந்தது.


சோப்புகளுக்கு ராஜா
கால் நூற்ருண்டுகளுக்கு மேலாக கோத்ரெஜ் ந. 1
சோப் அரசனுயிருந்து வருகிறது. தலைமுறை தலைமுறை
யாக உபயோகிக்கும் பலவித ஜனங்களே
அதற்கு இப்பெருமையுள்ள பட்டத்தை அளித்
திருக்கின்றனர். ஏனெனில் அது கிடைக்கக்கூடிய
சிறந்த பொருள்களிலிருந்து வெகு சாமர்த்தியமாகத் தயா
ரிக்கப்படுகிறது. அதன் புதிய இனிய வாசனை, ஏராளமான
நுரை, பெரிய சைஸ் (மார்கெட்டில் மிகப் பெரிய சோப்)
அதையே எல்லோரும் விரும்பச் செய்கின்றன.
Godrej
ரகம்
சுதேசி
மூலதனம்
நிர்வாகம்
தொழில்
VEGETABLE TOILET SOAP
COSMETIC
GERMICIDAL
No 1
GODREJ SOAPS LTD.
Godrej
SOAPS · GLYCERINE · HAIR OIL · EAU-DE-COLOGNE
முற்றிலும் சுத்தமானது - மிருகக்
கொழுப்பற்ற தென்பதற்கு உத்தரவாதம்.
Godrej கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.
ரிஜிஸ்டர்டு
மதராஸ்: 164, பிராட்வே: கொச்சி: 6/36, கல்வத்தி.
தாவர எண்ணெய்களினுல் சோப்பு தயாரிப்பதில் முதன்மையானவர்கள்.

இந்த விஷயத்தில் கொஞ்சம் நம் தென்னாட்டுப் பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்குக் கக்ஷிச் சரக்குக் கொடுக்கவே தமிழ்நாட்டு வாக்கு வன்மையில் பெயர் வாங்கிய ம. பொ. சிவஞான கிராமணியாரும், சின்ன அண்ணாமலையும் இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாத் தமிழ் நாட்டு அங்கத்தினர்களையும் சந்தித்துப்பேசி, ஆந்திரச்சனியனை தொலைத்துத் தலை முழுகுவதுதான் சரி என்று விளக்கினார்கள். அங்கத்தினர்களும் தாங்கள் ஆந்திரத்தைப் பிரிப்பதே மேல் என்று வாதாடுவதாகவும் ஒப்புக்கொண்டனர்.

ஆந்திர மாகாணம் பிரிப்பதுபற்றி இந்தியச் சர்க்காருக்கு என்ன பயம் என்றால் ஆந்திர மாகாணம் கம்யூனிஸ்ட்கள் கையில் சிக்கிவிடும் என்பதே. இதைத்தான் சிவஞானம் மறுத்து விளக்கினார். 360 மெம்பர்கள் கொண்ட சென்னைச் சட்டசபையில் 190 பேர்கள் தமிழர்கள். மந்திரிசபை அமைக்கும் பொழுது நிச்சயமாகத் தமிழர்தான் பிரதம மந்திரியாக முடியுமே அல்லது ஆந்திரர் ஆகமுடியாது. இதனால்தான் அவர்களுக்கு ஆத்திரம். ஸ்ரீ பிரகாசத்திற்கு "இந்தா பிரதமர் பதவி" என்றால் ஐக்கிய முன்னணியைக் கூவத்தில் முழுக்கிவிட்டு, கிருஷிகர் லோக் கக்ஷி, காங்கிரஸுடன் சேருவாரே அல்லது கம்யூனிஸ்டுகளுடன் காதல்புரிய மாட்டார். இப்பொழுதும் ஆந்திரர்களிடையே உள்ள கம்யூனிஸ்ட்கள் எவ்வளவு? கேவலம் 40. ஸ்ரீ பிரகாசம் முனைந்தால் இந்த40ஐ அடுத்த தேர்தலில் 20ஆக்கலாம். ஆகவே கம்யூனிஸத்தை ஆந்திர மாகாணம் கொடுத்துத்தான் தடுக்கவேண்டுமே அல்லாது "ஐயோ கம்யூனிஸ்ட்" என்று அலறிப் பயன் இல்லை.

ஆனால் சென்னையைப் பற்றியோ?

சென்னை நகரம் பற்றியவரை எல்லாக் கக்ஷி தமிழ் எம். எல். ஏக்களும் சென்னை நகரம் தமிழ் நாட்டைச் சேர்ந்தது என்று சொல்லிவிட்டார்கள். ஆந்திர காங்கிரஸும் ஒப்புக்கொண்டுவிட்டது. ஏன், கம்யூனிஸ்டுகள்கூட, சென்னை தமிழ் நாட்டைச் சேர்ந்தது என்று ஒப்புக்கொண்டுவிட்டார்கள். ஆகவே சென்னை நகரத்தைக் குறித்து ஜட்காவண்டிக்காரன் மாதிரி தகவல் செய்பவர்கள் ஸ்ரீ பிரகாசம்காருவின் சிறிய கோஷ்டி ஒன்றுதான். இவர்களுக்காக ஒரு மாகாணத்தையே நிறுவாமல் விடுவதா? வெள்ளையர்கள்கூட இந்திய சுதந்திரம் குறித்து, இப்படித்தால், 'உங்களுக்குள் ஒற்றுமைவேண்டும்' என்று புரளி செய்தார்கள். அதற்காகக் காங்கிரஸ்காரர்கள் சர்வத்ர ஐக்யத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தார்களா?

ஆந்திரர்கள் புரளி என்னவென்றால் ஆந்திராவிலிருந்துபணத்தைச் சம்பாதித்து, தமிழ் நாட்டைச் செழிக்கச் செய்கிறார்களாம் சென்னைச் சர்க்கார். இது முற்றிலும் தவறு என்பதில் சந்தேகம் இல்லை. இந்தப் பசப்புக்கு மறுப்புக் கொடுக்கவே ராஜாஜி சில வருஷங்களுக்கு முன் மாகாணம் பிரிந்தாலும் சரி, பிரியாவிட்டாலும் சரி, மாகாண நிர்வாகத்திற்கு இரு பட்ஜெட்டுகள் தயாரியுங்கள் என்றார். அதையே இப்பொழுதும் அவர் தாராளமாகச் செய்து ஆந்திரர் கூத்தை அம்பலமாக்கலாம்.

பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் யாவரும் தாராளமாகப் பேசலாம்; ஆனால் ஓட்டுமட்டும் எடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். தமிழ்நாட்டு மெம்பர்கள் விஷயத்தை அலசிப் பேசினார்கள். எனினும் நேருஜி பிடித்தால் கு......குப் பிடித் தானே! ஆகவே, அவரே பார்லிமெண்டில் ஆந்திரர்களைத் தூண்டி, சென்னை நகர முட்டுக்கட்டையைப் போடச் சொன்னதாக இங்கு ஆதார பூர்வமான வதந்தி.

தேசத்தில் ஒருபகுதியில் காங்கிரஸ் தோற்றது என்றால் அதற்குப் பரிகாரம் என்ன? அங்கே கக்ஷி ஸ்தாபனத்தை வலுப்படுத்தி, பிரசாரத்தைத் திறந்துவிடவேண்டும். ஆந்திரத்தில் காங்கிரஸ் தோற்றது. ஸ்ரீ பிரகாசம் காரு மிகவும் பெரியவர் என்பது உண்மை. ஆனால் ஆஸாமியைக் கண்டு அஞ்சி, கம்யூனிஸ்டைக்கண்டு கலங்கி, நாய் பேய்களுக்கு நடுங்கினால் காங்கிரஸ் என்னவாகும்? அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் இலாகாக்களுக்கும் குறைவே இல்லை. அது டில்லியில் ஒரு சிறிய அரசாங்கமும் நடத்துகிறது. ஸ்ரீமதி பண்டிட் போன்ற பிரசாரப் புள்ளிகள் வேலையில்லாமல் திண்டாடும்பொழுது அவர்கள் போன்றவர்களைக்கொண்டு ஆந்திரமெங்கும் பிரசார மாரி பெய்தால் என்ன? காங்கிரசுக்கு வந்துள்ள ஜ்வரம் ஜன்னியாக மாறிவிடுமா? சொல்லிப் பலன் என்ன? விநாசகாலே......

* * *

ராஜாஜி பிரதமராகும் வரையில் இங்கே படித்தவர்களிடையே நிலவிய அபிப்

பிராயம் ஐக்கிய முன்னணிக்காரர்கள் சென்னையில் சர்க்கார் அமைத்து விடுவார்கள், அதற்குப் பிறகு சென்னைக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் துவந்த யுத்தம் மூளும், சென்னையில் கவர்னர் ஆட்சி வந்து ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்படும் என்றெல்லாம் மனோராஜ்யம் நடந்தது. ராஜாஜி வந்து, கம்யூனிஸ்ட்களை "நீங்கள் என்னுடைய பிரதம விரோதி, அதேபோல் நான் உங்களுக்கு" என்று முழக்கம் செய்து, தோழர்கள் முகத்தில் அணிந்திருந்த முகமூடியை விலக்கிய பிறகு, இங்கே காபி ஹௌஸ் காளமேகங்கள் ("சிகப்பு" எழுத்தாளர்கள்) உள்பட எல்லோருக்கும் ஒரு புத்துயிர், ஒருபுது நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. ஆகவே சென்னையில் கம்யூனிஸ்ட் ஆட்சி இப்பொழுதைக்கில்லை என்ற வரையாவது இவர்களுக்கு இப்பொழுது விளங்குகிறது.

சென்னையில் சட்ட சபையில் நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தபொழுது நான் அங்கு இருந்தேன். வெகுபலர் "ஐயோ பாவம்" ஏன் ராஜாஜி அதற்குள் வெளியேற விரும்புகிறார் என்றெல்லாம் அங்கலாய்த்தார்கள். ராஜாஜியின் மனம் எப்படி வேலை செய்கிறது என்பதை இவர்கள் அறியவில்லை.

மந்திரிசபை அமைத்ததிலிருந்தே ராஜாஜி உளுத்துப்போன கட்சியை எப்படியாவது ஒழுங்குபண்ணி அதை அடுத்த தேர்தலில் ஜயிக்க வைக்கவேண்டும் என்று கூறிவருகிறார். பலபட்டரையாரின் ஆதரவைச் சதா சர்வதா நம்பி எப்படி நிர்வாகம் நடத்தமுடியும் என்பது இவர் கட்சி. ஒவ்வொரு குழுவும் ஏதோ ராஜாஜிக்காகச் சர்க்காரை ஆதரிக்கிறார்களே ஒழிய, மற்றக் காமராஜ்களுக்காகவும், பக்தவத்ஸலங்களுக்காகவும் ஆதரிக்கவில்லை. பட்ஜெட் விவாதம் வருமுன் ஏதோ ஒருவிதமாகத் தம் நிலைமைச் சரி செய்வது என்றே ராஜாஜி முடிவு செய்திருக்க வேண்டும்.

எதிர்ப்பு என்ற பெயரால் சட்டசபை வாயிலைக் காக்கக்கூட யோக்கியதையில்லாத அண்ணாத்தைகள் பொதுக் கூட்டங்களில் உருண்டு, புரண்டு ஊளையிடுவதுபோல் அலறினார்கள். அவர்களின் நான்கு நாட்கள் புலம்பல்கள் பொது ஜனங்களுக்குச் "சீ இவ்வளவுதானா" என்ற அபிப்பிராயத்தை உண்டாக்கியிருக்கவேண்டும்.

பொதுவாக மிகவும் கவனிக்கவேண்டிய விஷயம், ஆனால் மிகவும் மறக்கப்படும் விஷயம் தெற்கில் என்னவென்றால் கருஞ்சட்டைக் கருங்காலிகளுடன் சேர்ந்துகொண்டு கம்யூனிஸ்ட்கள் செய்து வரும் நாஸ்திகப் பிரசாரம். தெற்கில், பெருமைக்கே காரணமாயுள்ள, மதானுஷ்டானங்களையும், பழக்க வழக்கங்களையும் தங்கள் பலாத்காரப் பிரசார மூலம் தகர்க்கப் பார்க்கிறார்கள் இந்த நொண்டி—பொட்டை ஐக்கிய கோஷ்டியார். இதைத்தான் ராஜாஜி மிகவும் உறுதியாகத் தாக்கி வருகிறார். நேற்றுத் தோன்றிய அப்பிச்சிகளா நமக்குப் பகுத்தறிவு மார்க்கம் போதிப்பது? கம்யூனிஸ்ட்கள் எப்படி ஒரு முன்னணியில் புகுந்து, வெளிநாட்டிலுள்ள அவர்கள் எஜமானர்கள் சொற்களைச் சிரமேற்கொண்டு காரியங்களைச் சாதித்துப் பிறகு மற்றக் கட்சிகளை ஒடுக்கி, வெகுவாகப் பிரலாபிக்கும் ஜனநாயகத்தைச் சிதையில் அடுக்கி, எல்லா மக்களையும பாட்டாளிகளாக்கி, அந்தப் பாட்டாளிகளைப் பானையில் அடக்கி, கூட்டாஞ்சோறு சமைத்து, "பும் மகாதேவா" என்று ஏப்பம்விட்டு ஏதேச்சாதிகாரம் ஸ்தாபித்திருக்கிறார்கள்; சென்னையிலும் ஸ்தாபிக்க விரும்புகிறார்கள் என்பதை மக்களுக்கு விரிவாக எடுத்துச் சொன்னார் ராஜாஜி.

சென்னையில் இருந்த காங்கிரஸின்பேரில் ஆத்திரம்கொண்டு அதற்கு விரோதமாக ஓட்டுக் கொடுத்தார்களே ஒழிய, ஜனங்கள் "தோழா, ஓடிவா" என்று கம்யூனிஸ்டுகளுக்குக் கல்யாண அழைப்பு அனுப்பவில்லை. 190 ஸ்தானங்கள் உள்ள தமிழ்நாட்டில் எவ்வளவு கம்யூனிஸ்டுகள்? கேவலம் 13. சுமார் ஆறுமாதங்களில் பொதுஜன நன்மை பலசெய்து, மேலும் தவறுகள் ஏற்படாத பொழுதே புதுத் தேர்தல் நடத்தி, தமிழ்நாட்டிலாவது 190க்கு 180 ஸ்தானங்களைக் கைப்பற்றவேண்டும் என்பது ராஜாஜியின் திட்டம்.

ஆனால் ராஜாஜி ஒருவர் செய்யக்கூடியது என்ன? காங்கிரஸ் காமராஜ் கையில் இருக்கும்பொழுது அது எப்படி உருப்படும்? உணவுக் கட்டுப்பாடு நீங்கியதும் காங்கிரஸ் கட்சி செய்யவேண்டியது என்ன? மாகாணமெங்கும் "நாங்கள் வந்தோம், கண்ட்ரோல் கரைந்தது" என்றல்லவா பறைசாற்றியிருக்க வேண்டும்? அதற்குப்பதிலாகப் பறை சாற்றியது எதிர்ப்பாளர்கள். "ஐயோ ஆச்சாரி

யார் கள்ளமார்க்கெட் விலையை ஊர்ஜிதம் செய்யவல்லவோ இந்த உணவுக் கட்டுப்பாட்டு ரத்தைக் கொண்டுவந்திருக்கிறார்?" என்று அவர்கள் தேம்பித் தேம்பி அழுகிறார்கள்.

அறுப்புக்கோட்டைத்தேர்தலில்நிறுத்தப்பட்ட காங்கிரஸ் அபேக்ஷகர் ஸ்ரீ காமராஜால் பொறுக்கப்பட்டவர். அந்தப பெண்மணியைபபற்றி அங்கு மிகவும் பிரபலமாதலால் காங்கிரஸுக்குப் பிரசாரம் தேவையேயில்லை. அறுப்புக்கோட்டை மறவர்கள் நிறைந்தவூர். அங்கு முத்துராமலிங்கத் தேவர் கொட்டடை போட்டுப் பிரசாரம் நடத்தி மக்களை அரவணைத்து வைத்திருப்பவர். அவர் அபேக்ஷகர் ஜயிக்கமாட்டார், நாம நானகு அரை டிக்கட் கூட்டங்கள் நடத்திவிட்டோம, ஆகவே நம அபேக்ஷகர்தான் ஜயிப்பார் என்று மனப்பால் தாஙகள் குடித்ததும் அன்றி, ராஜாஜிக்கும் தவறான செயதியைக் கொடுத்த குற்றம் காமராஜ்—சுப்பராயன்—டி. டி. கே. யைச் சார்ந்தது. தொகுதி இரண்டும் கெட்டான் என்று சொல்லியிருந்தால் ராஜாஜி மிகவும் கைமாட்டல் முறையில் அறிக்கையும் விட்டிருக்கமாட்டார். என்ன செய்வது, தமிழ் நாட்டின் துர்ப்பாக்கியம் மன்னர்கள் ஸ்ரீனிவாஸ அய்யங்கார், சத்தியமூர்த்தி போன்றவர்கள் தங்கள் ரத்தத்தைச் சிந்தி உழைத்து உண்டாக்கிய கட்சியைக் கடைசியில் காமராஜ் கையில் ஒப்படைக்க நேர்ந்தது. வேதாளம் முருங்கை மரத்தைப் பிடித்தால் அதை எப்படி விட்டுவிட்டுப் போகும் என்பதுதான் தெரிந்த விஷயம் ஆயிற்றே.

* * *

ஊர்கூடிச் செக்குத் தள்ளுவது என்பது பழமொழி. ஆனால் ராஜாஜியைப் பிரதமராக்கவேண்டும் என்று வற்புறுத்தும் விஷயத்தில் இது மிகவும் நிஜமாயிற்று. ராஜாஜிக்குப் பிரதமராகவேண்டும் என்று ஆசை? குழந்தையை வேண்டுமானாலும் கேளுங்கள்; இல்லை என்றே சொல்லும். இருந்தும ராஜாஜீ பதவிக்கு வந்து படார் படார் எனறு காங்கிரஸ்காரர்களுக்குச் சவுக்கடி கொடுத்ததும், நேருவுக்கு "ஐயோ காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கொலை செய்கிறாரே" என்று விஷமத் தபால் போட்டார் காமராஜ். அது பலிக்கவில்லை. இருந்தும் தேள் சுபாவம் சதா கொட்டவேண்டியதாயிற்றே. திரும்பவும் காமராஜ் ராஜாஜியைக் காலைவாரிவிடத் திட்டம் இடுவதாக இங்குப் பலத்த வதந்தி நிலவுகிறது. தமிழ் நாட்டின் தலையில், தான் தோன்றிக் காமராஜ் காங்கிரஸை ஒழிப்பதுமன்றி, நாட்டையே ஒரு தட்டில் வைத்து எதிரிகளிடம் கொடுக்கவேண்டும் என்று கடவுள் எழுதியிருந்தால் அதை யாரால்தான் தடுக்கமுடியும்?





# நீலக்கடலலையில்

"கிருஷ்ணன் பாலா"

ஏதோ ஒரு வேதனை, இனம் காணமுடியாத ஒரு உணர்ச்சி. இன்னதென்றறிய முடியாத நிலையில் என் மனதில் சுழன்று கொண்டே இருக்கிறது. நேற்றிலிருந்து பார்க்கிறேன்; அப்பப்பா! என்ன இது? அதை நீக்கிவிட வேண்டுமென்று தான் என்னால் ஆனவரை முயன்று பார்க்கிறேன். அதைப் பிடிக்கவேண்டுமென்று மனம் ஓடினால், அது சிக்காமல் மேலும் மேலும் ஓடி என்னை இழுக்கிறது. இருக்கிற துன்பம் போதாதென்று இதுவேறா? கொட்டாங்கச்சி போன்ற கப்பலில் எத்தனை நாள்தான் போய்க்கொண்டே இருப்பது? இதற்கு முடிவேயில்லையா?... இருந்தாலும், ஊருக்குப்போய்தான் என்ன செய்வது? நடுக் கடலில் உள்ள இந்த அமைதி என் மனதில் இருக்கக்கூடாதா?... நேரம் ஊர்ந்துகொண்டே இருக்கிறது. மணியைப் பார்க்கலாம். இது என்ன ஆச்சரியம்? கடிகார முட்கள் ஏன் இத்தனை வேகமாகப் பின்புறம் சுற்றுகின்றன? என்ன சுழற்சி? எத்தனை வேகம்! ஆ! என்ன புதுமை? எனக்குள்ளேயே ஏதோ ஒரு மாறுதல்... எங்கேயோ இழுத்துச்செல்லப் படுவதைப் போன்ற உணர்வு...

அட! கப்பல் எங்கே? நடுக்கடலில் இருந்த நான் இங்கே எப்படி வந்தேன்? நான் வயதில் சிறியவளாகிக்கொண்டே வந்து பதின் மூன்று வயதுப் பெண்ணாகிவிட்டேன். இதோ எங்கள் ஊர்... அதே தெரு... பெரியதாகத்தெரியும் மாடி வீடுதான் எங்கள் அகம். அப்பா யாரிடமோ பேசிக்கொண்டிருக்கிறார், என் பெயர் அடிபடுகிறாப்போல இருக்கிறதே! கவனிக்கலாம்.

அப்பாதான் சொல்கிறார் "எனக்கு ஆட்சேபனை கொஞ்சங்கூடக் கிடையாது. 'அவளு'க்கும் சர்வ சம்மதம்''

"'சுபஸ்ய சீக்கிரம்'னு தெரியாமலா சொல்லியிருக்கா? இதோ பாருங்கோ உங்களுக்கும் எனக்கும் இன்றைய நேற்றைய சிநேகம் இல்லே... குட்டி பிறந்தன்னிக்கே, நம்ம பாலுவுக்குதான்னு பார்வதி சொல்லிட்டா, எனக்கு வயசாச்சு. டாக்டர் வேறே பயமுறுத்தறான். பாலுவுக்கும் வயசு பதினேழாச்சு. கல்யாணம் பண்ணிப்பார்த்துட்டா, அப்புறம் 'அவன்' விட்டவழி''.

இதற்கு மேல் என்னால் கேட்கமுடியவில்லை. பேச்சு சரியாகப் புரியவும் இல்லை. நேர அம்மாவிடம் ஓடினேன். அம்மா சொன்னாள். "இப்படியெல்லாம் ஓடப்படாது. நாளைக்கே புக்ககம் போனால் அடக்க ஒடுக்கமாய் நடந்துகொள்ள வேண்டாமோ?''

என் கண்கள் விரிந்தன. ''கல்யாணமா அம்மா? எனக்கா?'' என்கிறேன்.

"ஆமாடி கண்ணா! கோடி வீட்டு பாலு—பட்டணத்திலே படிச்சிண்டிருக்கானே அவன் தான், என் தங்கத்துக்கு அகமுடையான்''.

எந்தப்பாலு? என்னைஎப்போ பார்த்தாலும் சீண்டிக்கொண்டே இருப்பானே, அந்தப் பாலுதானா? அவன் அம்மா கூட அடிக்கடி சொல்லுவா. "இந்தாடி விமலா, பாலு ஏதாவது சொன்னால் அழாதே. நாளைக்கே அவனைக் கல்யாணம் பண்ணிண்டு அவனை அடக்கி வை: அப்போ தெரியும் சங்கதி'' என்று. நிஜமாக எனக்கும் அவனுக்கும் கல்யாணமா? கல்யாணம் என்றால் எத்தனைபேர் வருவார்கள்? பட்டுத் தாவணி, நகைகள் எல்லாம் கிடைக்கும். விருந்து சாப்பாடு ஜோராயிருக்கும். காரில் ஊர்வலம் போகலாம்...அப்பா! எல்லாவற்றிற்கும் மேலாகப் பாலு என்னை வம்புக்கிழுக்கமாட்டார். கல்யாணமானால் புருஷர்கள், நாம் சொன்னபடி கேட்பார்களாமே! அது நிஜமானால் ரொம்ப நன்றாயிருக்கும்.........நாட்கள் ஊர்ந்து செல்கின்றன.

நாளைக்கு மாப்பிள்ளை அழைப்பு. யார் அங்கே வேகமாக வருவது? பாலுவா......ஆமாம். எதற்கு இப்படி வேகமாக வருகிருன்?

"ஏ விமலி, சண்டிக்கழுதை! உன்னுல்தான் என் வாழ்வே வீணுகப் போகிறது. உன்னை என்ன செய்கிறேன் பார்...உம்..."

"அதெல்லாம் முன் காலம் ஸார். கல்யாணம் ஆனுல் நீ என் சொற்படி நடப்பாய் என்று உங்க அம்மாவே சொன்ஞர்"

இதற்கு அவன் கை என் கன்னத்தில் பதில் சொல்லிற்று. உறுமிக்கொண்டே சென்றுவிட்டான் அவன். கன்னம் வலித்தது. கல்யாணம் நடந்தது.

மாதங்கள் செல்கின்றன. எனக்கு நன்ருக நினைவு தெரிந்துவிட்டது. பாலுவின் மீது—இல்லை. 'அவர்' மீது—தனி அன்பு வந்துவிட்டது எனக்கு. நாலு வருஷங்களாகப் பார்க்கவே இல்லை. படித்துக்கொண்டிருந்தார். நாளைக்கு வருகிருராமே? வரட்டும் வரட்டும்: வந்தால் இதமாகப் பேசுவேன். அதற்காக ரொம்பத் தணிந்து போகக்கூடாது. கல்யாணத்துக்கு முதல்நாள் ஏன் அப்படி அடித்தார் என்று கோபித்துக்கொள்ளலாம். அந்த இடத்தில் இன்னமும் வலி இருக்கிறதென்று சொன்ஞல், கிட்டே வந்து இதமாக, அன்புடன், மெதுவாகத் தடவிக் கொடுப்பார். பிறகு...சேச்சே! இந்த நல்ல சமயத்தில் அம்மாவை யார் கூப்பிடச் சொன்னது?

நாளை இன்ருகிவிட்டது. வண்டி ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறது. பாலு இன்ஜினீரிங் பாஸ் செய்துவிட்டாராம். எப்படி வளர்ந்திருப்பாரோ? இத்தனை நாள் பார்க்காதவரை—அவர் ஒரு கடிதம்கூட எழுதவில்லை—ப்பார்க்கப் போகிருேம் என்ற மகிழ்ச்சி. ஒரு விநோதம்... வண்டி அதோ வந்து நின்றுவிட்டது. அப்பாமட்டும்தான் வருகிருர். "விமலா, மாப்பிள்ளை வரவில்லை..." அதற்குமேல் அவர் என்ன சொன்ஞர் என்று என்காதுகளில் விழவே இல்லை. எங்கேயோ ஒரு அதலபாதாளத்தில் இழுத்துச் செல்லப்படுவது போன்ற உணர்ச்சி...மாப்பிள்ளை வரவில்லை!.. மாப்பிள்ளை வரவில்லை!.....எங்கோ கத்தும் காகங்கள்கூட இப்படித்தான் கரைகின்றன, மாப்பிள்ளை வரவில்லை!

அடுத்த நாள்... "ஸார் போஸ்ட்! விமலா அம்மாள்" என்ற குரல்... என் பெயருக்குக் கடிதம்! பிரித்துப்பார்த்தேன்... 'அவர்'தான். ஆவலுடன் படிக்கத் தொடங்கினேன். படித்ததுதான் தெரியும். மறு நிமிஷம் தலை சுற்றி விழுந்துவிட்டேன். மயங்கிய அந்த நிலையிலும். "நிர்ப்பந்தத்தின் மேல் உன்னை மணந்துகொண்டேன்... ஆனுல் கட்டாயத்தின் பேரில் உன்னுடன் வாழமுடியாது. வாழாமலிருப்பதற்கும் ஊரார் விட்டுவைக்க மாட்டார்கள். இதற்கு என்னபண்ணுவது? ஓடிப் போகலாமா? எங்கே போனுலும் தேடிப்பிடித்து, மறுபடியும் அப்பப்பா...! நான் செத்து ஒழிந்தால்தான் நிர்ப்பந்தம் ஒழியும். வேறு வழியே கிடையாது" என்ற வரிகள், என் மனதில், என் காதுகளில் என் கண்கள்முன் கோர நடம் புரிந்து கொண்டிருந்தன.

என் மனம் ஒரு நிலைக்கு வர ஒரு வருஷம் பிடித்துவிட்டதே! இதற்குள் எத்தனையோ மாறுதல்கள். அம்மா இதே கவலையில் போய்விட்டாள். அப்பா ஏற்கனவே, பலஹீனம்: இப்போது டி.பி வந்துவிட்டது. ஓயாத இருமல்... ஒழியாத கவலை; நீங்காத துன்பம், பணமோ நிறைய இருக்கிறது. அப்பா உடம்புக்காகச் செலவழிக்காமல், வேறு எதற்கு இருக்கிறது அது? எனக்கு இருக்கும் ஒரே ஆறுதல் ஒரே பற்றுக்கோடு அவர்தானே? அவருக்கு இஷ்டமில்லைதான். நான்தான் பிடிவாதமாக மேல்நாட்டுக்கு அழைத்துச் சென்று வைத்தியம் செய்து கொள்ளச் சொன்னேன். ஸ்விட்ஸர்லாந்து எத்தனை ரம்யமான இடம்! சுகந்தம் நிறைந்த அந்தக் காற்றும், திறமை நிறைந்த வைத்தியமும் கூட அப்பாவைக் குணப்படுத்த முடியவில்லை. பைத்தியம் பிடித்த மாதிரி தனியே நின்றேன். அழக்கூட முடியவில்லை. என் கண்ணீர் வற்றி எத்தனையோ நாட்களாகிவிட்டன. தன்னந்தனியே திரும்புகிறேன். என்ன செய்யப்



போகிறேன் என்று எனக்கே தெரியாது. இத்தனை துன்பத்துக்கும் இடையே நான் சில சமயம் என் பைத்தியக்கார எண்ணத்தைப்பற்றிச் சிரித்துக்கொள்வேன். "பாலு நீ சொன்னபடி கேட்பான்" என்ற வார்த்தைகள் என்னைப் பார்த்துக் கேலி செய்வதுபோல் இருக்கும். 'அவர்' அன்று அடித்ததை நினைத்தேன். கன்னத்தில் அப்போது இருந்த வலி. இப்போது மனதுக்கு மாறிவிட்டது.

பிறகு... சே! என்ன நினைவுகள்! கப்பலில் தான் மேல் தளத்தில் நின்றுகொண்டிருக்கிறேன். கடிகார முட்கள் சரியாகத்தான் போய்க்கொண்டிருக்கின்றன. அப்போது கண்டதெல்லாம்?... வீண் பிரமை. துன்ப அலைகள்?



இத்தனை துன்பத்துக்கும் இடையில் இப்போது என்ன புது உணர்ச்சி! நேற்று 'போர்ட் செய்ட்'டில் ஏறிய இவள் யாராயிருக்கலாம்? அவளைப் பார்க்கும் பொழுதெல்லாம், என் மனதில் ஒரு மலர்ச்சி பிறக்கிறது. [illegible] இது என்ன பாவச்செயல்? கல்யாணமானவள், பரபுருஷனை ...... அதனால் என்ன? என்ற நினைப்பும் தோன்றாமலில்லை. வேண்டாம்... வேண்டாம்... வேண்டாம்... என்ற இரைச்சல் அலை ஓசையுடன் காதில் விழுகிறது... என் காலடியில் பூமி விலகியது......

* * *

என்னதான் இருந்தாலும், வேறு ஒரு பெண்ணை இன்னாரென்று தெரியாதவனை. இப்படிப் பார்ப்பது நன்றாக இல்லை என்று தெரியாமலில்லை. ஆனால், என்ன செய்வது? ஏதோ ஒரு புதுவித சக்தி. இதுவரையில்லாத தனி வாத்ஸல்யம். அவள்பால் என்னை இழுக்கிறது. அவளைப் பார்த்தால் கல்யாணமானவளாகத் தோன்றவில்லை. நகையோ, தாலியோ இல்லை, அப்படியானால் விதவையாக...... எது எப்படி இருந்தாலும், அவளையே 'கைஸாக' விசாரித்துவிட வேண்டும், அதோ அவளே நிற்கிறாள், கம்பத்தில் சாய்ந்துகொண்டு. அடா! திடீரென்று 'வேண்டாம் வேண்டாம்' என்று சத்தம் போட்டுவிட்டுக் கீழே விழுகிறாள்!...... அவளைத் தூக்கிச் சென்று முதல் உதவி செய்தேன். அவளும், என்னை ஒரு மாதிரியாகப் பார்க்கிறாள். இது எதில் போய் முடியுமோ தெரியவில்லை. அவளைப்பற்றி விசாரித்ததற்கு முதலில் ஒன்றும் பேச மறுத்தாள். அப்புறம் நாளை சொல்கிறேன் என்றாளே. உம், அது என்னவாயிருக்கும்?... நாளை... நாளை... நாளை......

அவள் சொல்லச் சொல்ல என் மனம் பாகாய் உருகியது. கடைசியில்......

"ஆம், சங்கர ஐயரின் பிள்ளை பாலகிருஷ்ணன் தான் என் 'ஹஸ்பண்ட்' "

"நிஜமாகவா...... உம்ம்......"

"என்ன, என்னவோ மாதிரி பார்க்கிறீர்கள்? 'அவரை' எப்போதாவது நீங்கள் பார்த்துண்டா?"

"நன்றாகப் பழகியிருக்கிறேன்... ஹூம்... அவன் உங்களுக்குக் கடிதம் எழுதினதைப்போல் சாக

வில்லை. அதற்குத் துணியாமல் 'மிலிடெரி' யில் சேர்ந்தான். லிபியாவில் நானும் அவனும் ஒரே யூனிட்டில்தான் இருந்தோம். என்னிடம் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறான்... மெது வாக அவன் மனதைக் கனியச் செய்தேன்......''

"அப்படியா! இப்போது அவர் எங்கே! சொல் லுங்கள் விலாசம் தெரியுமா!''

"அவசரப்படாதீர்கள். அவன் 'அப்போது' சாகவில்லை. ஆனால் பிறகு இறந்து விட்டான். அப்பொழுது என்னிடம்......

"சொல்லுங்கள் சொல்லுங்கள்; ஏதாவது சொன்னாரா?''

அவள் குரலில் ஆதுரம் தொனித்தது. கண் களில் எல்லையில்லாத சோகம்.

நான் அவளையே ஒரு கணம் இமை கொட்டா மல் பார்த்தேன், பிறகு ஒரு காகிதத்தில் அவன் சொன்னதை எழுதி அவளிடம் கொடுத்தேன்.

* * *

திரும்பத் திரும்ப இது என்ன ஓயாத உணர்ச்சி அவர்தான் எத்தனை நாகரிகம் தெரிந்தவர்! சொன்னால் விரஸமாக இருக்குமோ என்று எழு திக் காட்டியிருக்கிறார். என்ன எழுதினார். திரும் பவும் பார்க்கலாம். "நான் கோழை மாதிரி நடந்துகொண்டுவிட்டேன். விமலாவைப் பதின் மூன்று வயதில் மாலையிட்டேன். அதன்பின் அவளை ஏதோ ஒரு வெறுப்பினால் பார்க்கவே இல்லை. நீ அவளைக் கண்டுபிடித்து என்னைப் பற்றிச் சொல்லு. அவளை நீயே கல்யாணம் செய்துகொண்டால் எனக்கு ரொம்ப திருப்தியாய் இருக்கும். எனது அர்த்தமற்ற வெறுப்பால் அவள் வாழ்க்கை இதுவரை பாழானது போதும். நான் சொன்னதாக அவளிடம் சொல்...'' இதே வரிகள்தான் மனதைச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டே இருக்கின்றன. இவருக்குத்தான் எத் தனை நல்ல மனது? முன்பின் பார்த்திராத என் மேல் பரிதாபம் கொண்டு பாலுவின் மனதை மாற்ற முயற்சி செய்திருக்கிறார். பிறகு பாலு சொன்னதற்காக, என் கிராமத்துக்கே வருவ தாக இருந்திருக்கிறார்... என் வாழ்க்கையிலேயே திடீர்சம்பவங்கள்தான் தோன்றுமா? ஆனால் இந்த மலர்ச்சி கருகிய மொட்டாகிவிடக்கூடாது... எரி நட்சத்திரமாக இருந்துவிடக்கூடாது...... ஆனால்......, இப்படி எல்லாம் நான் நினைப்பது சரிதானா? இந்த எண்ணம், மறுமலர்ச்சி என்று நான் நினைப்பது, விஷ விருக்ஷத்தின் வித்தாக இருந்துவிட்டால்!...... அப்படி இருக்கமுடியாது. நமக்குத்தான் இனியார் இருக்கிறார்கள்? பாலு வைத் தாலிகட்டிய தினத்தன்று பார்த்ததோடு சரி. முகம்கூட மறந்துபோய்விட்டது. அப்படி யும்தான் அவரால் நமக்கு என்ன சுகம்? என் வாழ்க்கையை ஓர் அர்த்தமில்லாத வெறுப்பினால் பாழாக்கினார். அதனாலேயே என் பெற்றோர்களை, ஏன் அவர் பெற்றோர்களையும்கூடக் கொன்றுவிட் டார். இப்போதும் என்னை அணு அணுவாகக் கொல்லுகிறது அவர் நினைவு. அப்படிப்பட்ட வரை மறந்து, 'இவரை' ஏற்றுக்கொண்டால் என்ன? இவரது பழக்கவழக்கங்களும் இனிமை யாக இருக்கின்றன. தாலிகட்டியவர் என்பதற் காக, அவர் என்ன செய்தாலும், அவரையே நினைத்துக்கொண்டு எத்தனை காலம்தான் இருப் பது? எனக்கோ யாரும் இல்லை. தனியே இருந் தால் சும்மா இருந்தாலே ஊரார் ஏதாவது சொல் லுவார்கள்...... எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால்...... நாளைக்காலையில் பதில் சொல்வ தாகச் சொன்னேனே. சரி என்று சொல்லிவிட லாம். திடீரென்று ஏதோ நினைவுடன் கன்னத் தைத் தொட்டுப் பார்த்துக்கொண்டேன். அங்கே வலி இல்லை. மனதில்தான் இருந்தது. அதுவும் நாளையுடன் நீங்கிவிடும்.

ஆயிற்று, எங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட் டது...... வாழ்க்கை ஆனந்தமாகத்தான் இருக் கிறது. ஒருநாள் இவருடைய சிநேகிதர் வந்தார், இவர் இல்லாதபோது. அவருடன் பொழுது போக்காக ஏதோ பேசிக்கொண்டிருந்தேன். திடீ ரென்று உள்ளே நுழைந்த 'இவர்' முகத்தில் ஏன் இத்தனை கடுகடுப்பு? அன்றிரவு...... "ஒரு புருஷனை மறந்துதானே என்னை மணந்துகொண் டாய்? அந்தச் சபலபுத்தி போகவில்லையா......'' ஐயையோ, இவரா இப்படிப் பேசுகிறார்? இப்படி எத்தனையோதரம் நடந்திருக்கிறது. ஒருநாள் ஜுரத்தில் படுத்தேன். ஜுர மயக்கத்தில் என் னென்னவோ நினைவுகள். என் அப்பா தோன்று கிறார். "ஏனம்மா! என் பெண்ணாக இருந்து இப் படிச் செய்யலாமா இதனால் என்ன சுகம் கண் டாய்?'' அதோ என் அம்மா. சிறுவயதில் என் னைக் கட்டிக்கொண்டு "ஆமாடி கண்ணு: உனக் குத்தான் கல்யாணம்'' என்று அன்பு ததும்பச் சொன்ன வாயால்; என்ன அப்படிக் கடுமையாகச் சொல்கிறாள்? "இப்படிச் செய்யலாமா விமலி!'' அதோ பழைய 'அவர்'. என்னை அறியாமலே அவ ரிடம் செல்கிறேன். திரும்பி என்னைப் பார்த்த அவர் சடாரென்று அதே பழைய காரியத்தைச் செய்தார். என் கன்னம் ரொம்ப வலித்தது...... அப்பா!

என்ன கனவு? என் கன்னம் நிஜமாகவே ஏனோ வலிப்பதுபோல இருந்தது. ஒன்றும் புரியவில்லை. வெறித்து வெள்ளித்தட்டைப் போன்ற சமுத் திரத்தைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந் தேன். திடீரென்று 'இவருக்கு'ப் பதில் எழுதி, இவர் அறைக்குள் போட்டேன்...... ஓயாமல் கப்பல் போய்க்கொண்டுதான் இருக்கிறது. பொழுது புலர இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறது.

* * *

என்ன சத்தம் அது? விளக்கைப் போட்டுப் பார்த்தால், ஒரு கவர் கிடக்கிறது. படித்தேன். என்ன விபரீதம்! "அன்று கன்னத்தில் அறைந்தாலும், அவருக்குத் துரோகம் நினைக்க மாட்டேன். உங்களைக் கண்டு பேசினால் மனம் மாறிவிடலாம் என்று தான் பார்க்காமல் கடிதத்தில் எழுதுகிறேன்...... என்ன செய்வது? அன்று பாலு செய்ய எண்ணி, ஆனால் துணியாத செயலை இன்று நான் செய்கிறேன். அன்று அவருக்கு என்மேல் வெறுப்பு. இன்று எனக்கு என்மேலேயேதான் வெறுப்பு......" விமலா என்று கத்த நினைத்தேன். முடியவில்லை. ஓட நினைத்தேன். ஏனோ கால்கள் நகர மறுத்தன. கொஞ்சநேரம் சென்றபின் திடீரென்று மேலே ஓடினேன். தளத்தில் ஒருவரும் இல்லை. சிலைபோல அசையாது நின்றேன். "அன்று கன்னத்தில் அடித்த பாவி செத்துப்போகவில்லை. நான்தான் அது. உன்னைப் பார்த்ததுமுதலே ஏதோ மாதிரி இருந்தது, உன் கதையை நீ சொன்னதும் நீ என் மனைவிதான் என்று உறுதிப்பட்டது. விளையாட்டுக்காக அப்படியெல்லாம் சொன்னேன். நான் மிலிடரிக்குப் போனது உண்மையே. அங்கு என் மனம் மாறியதும் மெய்தான். ஆனால் என் மனதை மாற்றிய நண்பன்தான் இறந்து போனான். நான் உன்னைக் கஷ்டப்படுத்தியதற்கெல்லாம் மாறாக உன்னை நேரில் கண்டு அன்போடு வாழலாம் என்று எண்ணினேன்...... தற்செயலாக உன்னைக் கப்பலில் பார்த்ததும் என் மனது என்ன பாடு பட்டது தெரியுமா...... விமலா, உன்னை அறியாமல் கொன்று விட்டேனே" என்று அலறினேன்.

ஆம்: நான்தான் விமலாவின் கணவன் பாலகிருஷ்ணன்.

கோழைத்தனமான, ஆனால் ஆங்காரம் கொண்ட என் செயலால் அவள் முதலில் மங்கல வாழ்வை இழந்தாள். பெற்றோரைப் பறிகொடுத்தாள்.

அதன்பின். வாழ்வு மலரும்போது என் முட்டாள்தனமான விளையாட்டினால் கடலில் குதித்து விட்டாள். அன்று என் அம்மா சொன்னது போல, அவள் மனம் கோணாமல் நடந்துகொண்டு. அன்பால் அவளைத் திணற அடிக்க எண்ணினேன். ஆனால், அவளுக்குத்தான் என்னை அடையாளம் தெரியவில்லையே என்று தமாஷாகச் செய்த காரியம் அவள் உயிரையே குடித்து விட்டது.

கன்னத்தில் வலி இருந்ததோ இல்லையோ, மனதில் வலியுடன் அவள் போய்விட்டாள். அந்தகாரத்தின் விடிவுப் பாதையில் இருந்த அவள். அந்தகாரத்தில் ஆழ்ந்தே போனாள்.

* * *

கப்பல் ஆடி ஆடிக்கொண்டே பம்பாய் வந்து சேர்ந்தது.

கனவில் நடப்பவன்போலத் தள்ளாடிக் கொண்டே மனதில் தீராத வலியுடன் இறங்கின என்னை யாருமே கவனிக்கவில்லை.

ஏகாங்கியாகவே கப்பலில் ஏறினேன்.

ஏகாங்கியாகவே திரும்பியிருக்கிறேன்,

ஆனால், நடுவில்?





# புனர்ஜன்மம்

கோமதி சுப்ரமணியம்

அண்ணனின் வீட்டிற்குப் போவதா வேண்டாமா என்கிற போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது ஜானகியின் மனம். இரண்டு வீடுகள் தள்ளியிருந்த அண்ணனின் வீட்டில் சற்றுமுன் நடந்த போராட்டம் அவள் சிந்தனையைக் கிளறிவிட்டிருந்தது. அநுதினமும் நடக்கும் சம்பவங்களில் ஒன்றுதான் என்றாலும், இன்று நடந்ததென்னவோ அவள் மனதைப் பெரிதும் பாதித்துவிட்டிருந்தது.

போ, போ குழந்தையை அந்த ராக்ஷஸியிடமிருந்து மீட்டுக் கொண்டுவா...... போ என்று தூண்டியது உள்மனம்.

இல்லை. குழந்தை அவளுடையது. ஆம் அவள் கணவனின் குழந்தை அவளுக்குச் சொந்தந்தானே. அதை அடிக்கவோ அணைக்கவோ அவளுக்கு உரிமையில்லையா? என்று போராடியது ஓர் நினைவு.

இல்லையில்லை, அடிக்கத்தான் உரிமை கொண்டாடுகிறாள். ஆனால் அணைக்க ஒருநாளும் எண்ணியதேயில்லை. என்ன இருந்தாலும் இளையவள் தானே. அக்கொடியவளிடமிருந்து அக் குழந்தையைக் காப்பாற்றுவது உன் கடமையில்லையா? என்று கேட்டது பாசம் நிறைந்த அவள் மனம்.

கடமையை நிறைவேற்றும் எண்ணத்துடன் அண்ணனின் வீட்டை நோக்கி நடந்தாள் ஜானகி.

தாழ்வாரத்தில் பச்சையும் சிவப்புமான மணிகள் மூலைக்கொன்றாக இறைந்துகிடந்தன. பாதி பின்னியும் பின்னாமலும் ஒன்று ஊசியோடு கோத்துக் கீழேகிடந்தது. இறைந்து கிடந்த பாசிகளை ஒன்று சேர்ப்பதில் முனைந்திருந்த இரண்டு வயதுக் குழந்தை, ஜானகியைக் கண்டதும் "அத்தை" என்று எழுந்து ஓடிவந்தது, காலைக்கட்டிய அக் குழந்தையை லட்சியம் செய்யாமல் மேலே நடந்தாள் ஜானகி. அவள் கவனமெல்லாம் சிற்றன்னையிடம் கொடுமைப்பட்டுத் துடிக்கும் விமலியிடம் லயித்திருக்கும்பொழுது, தன் வெறுப்புக்குப் பாத்திரமானவளின் பெண்ணான பானுவை எப்படிக் கொஞ்சுவாள். விமலி, பானு இருவரும் ஜானகியின் அண்ணாவின் பெண்கள். ஆனால் இருவருக்கும் தாய்மார் வேறு வேறு.

விமலி மூத்தவளின் பெண்; மூத்தவள் இறந்துபோய் வருஷம் ஆகிவிட்டன.

ஜானகி வந்ததைக் கண்டும் காணாதவள்போல முகத்தைத் திருப்பிக்கொண்டாள் மீனாக்ஷி. வழக்கம்போல் கிடைக்கும் வேண்டா வெறுப்பான வரவேற்புக்கூட இன்று கிடைக்காமல் போனதையும் லட்சியம் செய்யாமல் மேலும் நடந்தாள் ஜானகி. அழுகை ஓய்ந்து மூலையில் விக்கி விம்மிக்கொண்டிருந்த விமலி அத்தையைக் கண்டதும் அத்தையின் காலைக் கட்டிக்கொண்டு கோவெனக் கதறினாள்.

இந்த நாடகத்தைக் காணச் சகியாத மீனாட்சி, முகத்தைச் சொடுக்கிக்கொண்டு "சொன்னால் கோபித்துக்கொள்வீர்கள். இப்பொழுது என்ன நடந்துவிட்டது? எதற்காக இப்படி நாடகமாடுகிறாள் என்று இரைந்தாள். இன்னும் என்ன நடக்கவேண்டுமென்கிறவளைப்போல அந்த பாவனையில் பார்த்தாள் ஜானகி.

"கைக்கு ஒத்தாசையாக அழுகிற குழந்தையைத் தூக்கி வைததுக்கொள்ளச் சொன்னால் அது ஒரு குற்றமா? சொல்லச் சொல்லக் கேட்காமல் பாசியைப் பின்னிக்கொண்டிருந்தால் ஆத்திரம் வராதா? பாசியைப்பிடுங்கி எறிந்து இரண்டு அறை கொடுத்தேன்"

"என்ன ராக்ஷசத்தனம்" என்று வெடுக்கெனக் கேட்டாள் ஜானகி.

"நீ இப்படிச் செல்லங் கொடுத்துக் கொடுத்துத் தான் விமலி அடங்காப் பிடாரியாக மாறிவிட்டாள். உன்னுடைய சலுகை அவளை எப்படிக் குட்டிச் சுவராக்குகிறது என்பதை நீ உணரவில்லை" என்று இடைமறித்துக் கூறினான் ஜானகியின் சகோதரன் பாலு.

ஜானகியால் இந்தச் சொல்லைப் பொறுக்க முடியவில்லை. தன்னுடைய சலுகையால் கெட்டுப் போகிறாளா, அல்லது இளையவனின் கொடுமையால் கெட்டுப் போகிறாளா என்பதைத் தன் சகோதரன் ஏன் உணரவில்லை என்ற எண்ணம் அவள் இதயத்தைச் சுற்றிச் சுற்றி வதைத்தது. இனியும் அங்கு நிற்க மனமில்லாதவளாய் வீட்டை நோக்கி விரைந்துவிட்டாள்.

## 2

இன்று இப்படிப் பேசும் சகோதரன் அன்று எப்படி இருந்தான். நாலு வருஷங்களுக்கு முன் அவனது மனைவி—விமலியின் தாய்—குழந்தையை ஒரு அடி அடிக்கச் சம்மதியாதவன் இன்று மீனா கொல்லாமல் கொல்லுவதைச் சகித்துக்கொண்டிருப்பதோடு, அது சரி என்று பக்க வாத்தியம் வாசிக்கிறானே.

அந்தச் சம்பவம் மறக்கக்கூடியதா? அல்லவே. விமலிக்கு இரண்டு வயதாக இருக்கும்போது குழந்தைப் புத்தியில் எதைக் கண்டாலும் வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கும் அவள், பூஜையில் வைத்திருந்த லட்சுமி படத்தை விளையாடக் கேட்டாள். பிடிவாதம் செய்தாள் விமலி. கொடுத்தால் உடைத்துவிடுவாளே என்று கொடுக்க மறுத்தாள் பெற்றதாய். விமலியின் பிடிவாதம் ரோதனை சகிக்காமல் எப்படியும் போகட்டுமென்று கொடுத்த மறு விநாடி படம் சுக்கல் நூறு ஆகிவிட்டது. இதைப் பார்த்த மனம் கொதித்தது. படம் உடைந்துவிட்டதே என்ற ஆத்திரமன்று. லட்சுமிதேவியே உடைந்து விட்டாள் என்று அவள் மனம் கலங்கிவிட்டது. வந்த கோபத்தில் குழந்தையை ஒரு அடி அடித்தாள். இதுவே அவள் செய்த குற்றம். இச்சிறு குற்றத்திற்காக அவள் மனம் ஒடியும்படியான வசவுகள், எலும்பு ஒடியும்படியான அடிகள் கணக்குவழக்கின்றிப் பெற்றாள். விமலி தன் தகப்பனாரிடம் சொல்லி, தாயை வஞ்சம் தீர்த்துக் கொண்டாள்.

குழந்தை எது கேட்கிறதோ அதைக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அதன் மன வளர்ச்சி கெட்டுவிடும் என்று சொல்லிய அதே பாலு, அதே சகோதரன் தன் குழந்தை செய்தது தவறு; அதற்குத் தண்டனை நியாயம் என்று பேசுகிறான், அடிப்பதைவிட அடிபடுவது நன்மைக்கு என்று வாதாடுகிறான்.

பெற்ற தகப்பனே குழந்தையின் அழுகை, அனுபவிக்கும் கொடுமையைப் பார்த்துச் சகிக்கும்போது நமக்குத்தான் என்ன வந்ததென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு விமலியின் கண்ணீரைக், கவலையைச் சற்று மறக்க முயன்றாள். விமலி எப்போதாவது வலிய வந்தாலும் வைராக்கியமாக விரட்டிவிடுவாள். இடையே பாசம் குறுக்கிடும். தாயில்லாக் குழந்தையிடம் தானும் பராமுகமாக இருக்கலாமா, இருந்தால் அந்தப் பிஞ்சு உள்ளம் எப்படித் துடிக்கும், அவளுக்கு வேறு ஆதரவு ஏது? என்றெல்லாம் நினைப்பாள். விமலி வாங்கும் ஒவ்வொரு அடியும் ஜானகியின் கண்ணில் ரத்தச் சொட்டுகளாக விழுந்தன. குழந்தை விமலி விடும் பெருமூச்சு ஒவ்வொன்று ஆயிரமடங்காகப் பெருகி, தன் இதயத்தை நொறுக்குவதாக உணர்வாள். இருந்தாலும் இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டு பிறர் விவகாரத்தில் தலையிடக் கூடாதென்று வைராக்கியமாக இருந்துவிட்டாள். அவள் வைராக்கியத்தையும் மீறி ஒரொரு சமயம் நீண்ட பெருமூச்சு வெளிவரும். பெருமூச்சைத் தொடர்ந்து அவளையறியாத ஒரு பிரார்த்தனையும் வெளிப்புறப்படும். விமலி எப்படி மாற்றாந்தாயை அடைந்து துயர் படுகிறாளோ, அப்படி மாற்றாந்தாயிடம் மீனாவின் பெண் பானுவும் கொடுமைக்கு ஆளாகவேண்டும். அப்பொழுதுதான் என் மனம் ஆறும். ஆண்டவனே என் பிரார்த்தனை என்றுதான் நிறைவேறுமோ? என்று வேண்டிக்கொள்வாள். தன் பிரார்த்தனை மனிதத்தன்மையை மீறியது என்பது அவள் மனதிற்குத் தெரிந்திருந்தும் செய்துகொண்டிருந்தாள். விமலி படும் கொடிய அவஸ்தையைக் கண்டு இத்தகைய பிரார்த்தனை செய்து வந்தாள் ஜானகி.

* * *

'அத்தை' என்று தயங்கிய குரல் அவள் கவனத்தைத் திருப்பியது. ஏறிட்டுப் பார்த்தாள். வாடிச் சுருங்கிய முகத்துடன் வந்து நின்ற விமலியைக் காணவும் ஓடிப்போய் அணைத்துக் கொள்ளத் துடித்தது மனம். வைராக்கியத்தை நிலை நிறுத்தும் எண்ணத்துடன் 'ஏன்'? என்னும்

பாவனையில் வெறுப்பு நிறைந்த பார்வையைச் செலுத்திவிட்டுப் பேசாதிருந்தாள்.

சில நாட்களாகவே அத்தையின் மாறுதலை அறிந்திருந்த விமலியும் அதிகமாய் அவளை நெருங்காமல் ஒதுங்கிகொண்டாள். சிற்றன்னை என்ன கொடுமைப் படுத்தினாலும், அத்தையிடம் வந்து முறையிடுவதை அடியோடு நிறுத்திக்கொண்டு விட்டாள். தனக்கு ஒரு அத்தை இருக்கிறாள் என்பதையே மறந்திருந்தாள் என்றே சொல்ல வேண்டும். தனக்குச் சலுகை பேச ஆளில்லை யென்ற பயத்தினால் கூடியவரை சிற்றன்னையின் போக்குக்கு அனுசரித்து நடந்துவந்தாள். ஆகவே இப்பொழுதெல்லாம் அடிக்கடி ரகளைகள் நடக்க ஏதுவில்லாமல் போயிருந்தது. கிட்டத்தட்ட ஒருவருக்கொருவர் உறவே விட்டுப்போய்விட்டதோ என்று எண்ணும்படியான நிலையிலிருந்த போது விமலி வந்து நின்றது ஜானகிக்குச் சற்று வியப்பை மூட்டியது.

'ஏன் விமலா என்ன விசேஷம்?' என்று நிதானத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டாள் ஜானகி.

'ம் அம்மா...ம்...வந்து...காய்ச்சல்'

'அவள் அடியோடு போகட்டும்' அவள் உள்ளத்தில் எழுந்த உத்சாகம் வார்த்தையாக வெளியே புறப்பட்டது.

'அப்பா உன்னை அழைத்துவரச் சொன்னார்'

'ஏன் மனைவிக்கு வைத்தியம் பார்க்கவா?"

"ஆமாம் அத்தை, வீட்டிலே சமைக்க ஆளில்லை'

'ஏன் ஒரு சமையல்காரன் ஏற்பாடு செய்து கொள்வதுதானே'

'மருந்து கொடுக்க ஆளில்லே. நீ சோறு பொங்கினா என்னான்னு அப்பா கேட்கிறா. நான் எப்படி அத்தை சமையல் செய்கிறது.'

'ஏன் உன் அப்பனைச் சமைச்சுப் போடச் சொல்லு போ.' என்று வெருட்டினாள். வெகு நாட்களாக அடக்கிவைத்திருந்த ஆத்திரம் வார்த்தைப் பந்தமாக வீசிற்று.

'அத்தே' என்று கெஞ்சினாள் விமலி.

'இன்னும் ஏன் நிற்கிறாய்? வரமுடியாது என்று போய்ச் சொல்லு, போ'

'நீ வந்துதான் ஆகவேண்டும். அத்தை வா'

'முடியாது என்றால் நீ போகமாட்டே'

'அத்தே, எனக்காகவாவது நீ வந்துதானாக வேண்டும். நீ வராவிட்டால் வீட்டு வேலை முழுவதும் என் தலையில்தான். என்னால் சுமக்க முடியுமா? நினைத்துப்பார் அத்தை. நான் துன்பப்படலாமா? அத்தை உனக்குச் சம்மதந்தானா?'

"இல்லை" யென்று மறுத்துக்கூறியது மனம். அதோடுகூடப் பழிவாங்கும் எண்ணமும் அவள் உள்ளத்தில் படமெடுத்தாடத் தொடங்கியிருந்தது.

"வருகிறேன்......" என்று புறப்பட்டுவிட்டாள் ஜானகி.

## 4

'அத்தை எனக்கும் தலைபின்னிவிடு அத்தை' என்று குழறினாள் இரண்டு வயது பானு.

'ஆமாம், தலைபின்னிச் சிங்காரிக்கத்தான் எனக்கு நேரம். இந்த பாழாப்போற வீட்டிலே ஓடி ஓடி வேலைசெய்யவே நேரமில்லை?' என்று வெறுப்பாகப் பேசும் ஜானகியைப் பரிதாபமாகப் பார்த்தாள் பானு. தன் அக்கா விமலிக்கு அடிக்கொரு தரம் தலைவாரி அவளை அழகு பார்க்கும் அத்தை தனக்கு ஏன் செய்ய மறுக்கிறாள். அவளை வலிந்து வலிந்து உபசரிக்கும் அத்தை தன்னைக் கண்டால், ஏன் கடுகடுப்பாகப் பேசுகிறாள்?

ஜானகி இருவருக்கும் அத்தைதானே.

தன்னை ஏன் வெறுக்கிறாள் என்ற கேள்வியைக் கேட்டது பானுவின் பிஞ்சு உள்ளம். விடையைப் புரிந்துகொள்ள முடியாமல் அவதிப்பட்டாள் பானு.

தனக்காக மனது பொறுக்காவிட்டால் தாயிடம் போய் முறையிட்டுக் கொள்வாள். எழுந்திருக்கச் சக்தியின்றிப் படுக்கையில் கிடக்கும் மீனாட்சியால் என்ன ஆதரவு சொல்லமுடியும்? தான் செய்த வினை தன் கண்முன் நிகழ்வதைக் கண்டு மனம் பொருமுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும். தன் மகள் பானுவின் சோர்வுற்ற முகத்தைக் காணுந்தோறும் தான் விமலியைப் படுத்திய கொடுமைகள் ஒவ்வொன்றாக அவள் உள்ளத்தில் படரத் தொடங்கிற்று. தான் இறந்துவிட்டால் பானு மாற்றாந்தாயிடம் கொடுமைப்பட வேண்டியவள்தானே...... இந்த எண்ணம் அவள் மனதை அணு அணுவாய் அரித்தது.

பழிக்குப் பழி வாங்கத் துடித்த ஜானகி வேண்டுமென்றே பானுவை அவள் தாயின்முன் குறைத்துப் பேசுவாள். ஏழெட்டு வயதான விமலியை இடுப்பில் தூக்கிவைத்துச் சாதம் ஊட்டும் ஜானகி, இரண்டு வயதுக் குழந்தை பானு சாதம் கேட்டு அழுதாலும் சமயத்தில் எடுத்துக் கொடுக்கமாட்டாள். ஒவ்வொரு சமயம் ஜானகியின் மனம் தன்னுடைய பழிவாங்கும் செய்கைக்கு வருந்தும். மீனாட்சி அறிவற்ற தனமாக மூத்த

வள் குழந்தையை கொடுமைப் படுத்தினுள் என்பதற்காக ஒரு குற்றமும் அறியாத பானுவைக் கொடுமைப் படுத்தவேண்டுமா? என்ற கேள்வியைத் தனக்குத் தானே கேட்டுக்கொள்வாள். மழலை மாரு அப் பச்சிளங் குழந்தை தனக்குச்செய்த கொடுமை என்ன? கொடுமைக்காரி வயிற்றில் பிறந்த குற்றத்திற்காக அவள் கொடுமைப் படவேண்டுமா? இது நியாயமா? கொடுமை செய்தவளுக்கு அன்புகாட்டிப் புத்தி புகட்டினுல் என்ன வென்று நினைப்பாள். மறுகணமே அவள் மனம் மாறிவிடும்.

ஒரு குற்றமும் அறியாத விமலி ஏன் தண்டனை அனுபவித்தாள்? அதைப்போல் பானுவும் அனுபவிக்கவேண்டியதுதான் என்று தோன்றும்.

அன்பையும், அறத்தையும் நினைத்தாலும் ஜானகியின் உள்ளத்திலும் செயலிலும் கொடுமை தாண்டவமாடிற்று.

## 5

மாலை நேரம். விமலிக்குப் பக்ஷணம் கொடுத்துக்கொண்டிருந்தாள் ஜானகி. பக்ஷணத்தைக் கண்டதும் ஓடோடி வந்த பானு, 'அத்தை எனக்கு' என்றுள். 'உனக்குக் கொள்ளிக்கட்டை எடுத்து செருக...' என்று கோபமாகக் கூறியவள் வெடுக்கென முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'அத்தை தரவேண்டாம் நான் தருகிறேன்' என்று சொல்லிய விமலியிடம், பக்ஷணம் வாங்கக் கரம் நீட்டினுள் பானு. வெடுக்கெனத் தட்டிவிட்ட ஜானகி விமலியைக் கடிந்து பேசினுள்.

"அத்தை நீ, பானுவுக்கும் அத்தை தானே...... ஏன் அவளுக்கு மட்டும் பக்ஷணம் கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிருய்? தலை பின்ன மாட்டேன் என்று சொல்லுகிருய்? சிரித்துப் பேச மாட்டேன் என்கிருய்?'' என்ற விமலியின் கேள்விகள் குத்திட்டியாகப் பாய்ந்தன ஜானகியின் நெஞ்சில்.

குழந்தையின் கேள்விகள் நியாயமானவைதான். தன் செய்கை அக் குழந்தையின்முன் தலை குனிய வைக்கும் செய்கை என்பதை உணர்ந்தபோது அவள் நெஞ்சம் துடித்தது. பானுவும் விமலியைப்போன்ற குழந்தைதானே, எதற்காக அவளை மட்டும் நான் கொடுமைப் படுத்தவேண்டும்? என்று சிந்தனை செய்தாள். அடுத்த வினாடி நெடு நாளாகத் தான் பிரார்த்தனை செய்த நினைவும் தோன்றிற்று. மீனாட்சி இறந்துபோய் அவள் குழந்தை பானு, விமலியைப்போல் மாற்ருந்தாயிடம் கொடுமைப்பட வேண்டும்—அடாடா எவ்வளவு கொடுமையான எண்ணம்.

பானு கஷ்டப்பட்டால் மட்டும் தன் மனம் துடிக்காதா? அவளும் அண்ணன் மகள்தானே. வேண்டாம்—வேண்டவே வேண்டாம். மீனாட்சி சாக வேண்டாம். அவள் பெற்ற குழந்தை அவதி


# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிட்.

சேர்மென்

**ஸர். A. ராமஸ்வாமி முதலியார்** K. C. S. I., D. C. L. (Oxon)

(சென்னை நகரத்திலுள்ள ஆபீஸ்கள்)

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு,
பெரியமேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் & தியாகராயநகர்,

பிராஞ்சுகள்

| | |
|---|---|
| அம்பாஸமுத்திரம் | புதுக்கோட்டை |
| ஆம்பூர் (N. A. Dt.) | ராமநாதபுரம் |
| சிதம்பரம் | சீர்காழி |
| கடலூர் | தஞ்சாவூர் |
| ஈரோடு | தென்காசி |
| காஞ்சீபுரம் | திருநெல்வேலி ஜங்ஷன் |
| காரைக்குடி | திருநெல்வேலி டவுன் |
| கும்பகோணம் | வேலூர் |
| மதுரை | விஜயபுரம் |
| மாருதேரு | விழுப்புரம் & |
| மாயவரம் | விருதுநகர் |
| பாலக்காடு | |

K. S. வைத்யநாதன்
அஸிஸ்டெண்ட் செக்ரடரி

யுற வேண்டாம். பகவானே, என்னை, என் எண்ணத்தை மன்னித்துவிடு. சீக்கிரமே மீனாட்சி பிழைக்க வேண்டும். இதுவே என் பிரார்த்தனை என்று மனம் உருகினாள்.

மதனி என்ற ஹீனமான குரல் மீனாட்சியின் அறைக்கு அழைத்துச் சென்றது. வியர்க்க விறுவிறுக்க நடுங்கிக்கொண்டிருந்த மீனாட்சியைக் கண்டு பதறிப்போனாள் ஜானகி. "ஏன் மீனா? உனக்கு என்ன செய்கிறது என்ற பரிவோடு அவள் நெருங்கிப் போனதும், ஜானகியின் கரங்களைப் பற்றிக்கொண்டாள் மீனா.

"அப்பப்பா" எவ்வளவு பயங்கரமான கனவு கண்டேன் மதனி. மதனி, நான் இறந்துபோய், என் அருமைக் குழந்தை பானு மாற்றாந்தாயிடம் என்ன கொடுமைகள் அனுபவிக்கிறாள்? "ஐயோ" என மூச்சுத் திணறினாள். இவ்வளவு பக்குவப்பட்ட மனநிலையிலும் விமலியைக் கொடுமைப் படுத்தும்போது உனக்கு எப்படிச் சந்தோஷமாக இருந்தது? என்று கேட்கத் துடித்தாள். நிறுத்திக் கொண்டாள். தொடர்ந்து சொல்லவந்த மீனாட்சி, 'நான் விமலியைப்படுத்திய கொடுமை என் குழந்தை பானுவின் தலையில் விடியப் போகிறது.' என்று சொன்னதும் திடுக்கிட்டாள் ஜானகி. பானுவிடம் நடந்துகொண்ட கொடுமையைச் சுட்டிக் காட்டத்தான் அப்படிப் பேசுகிறாளோ என்று ஐயமுற்றாள். மேலே என்ன சொல்லப் போகிறாளோ என்று துடித்து நின்றாள் ஜானகி

"என்னை மன்னித்துவிடுங்கள். விமலி அவதியுறும்போது உங்கள் மனம் எப்படித் துடித்திருக்கும் என்பதை இப்பொழுதுதான் என்னால் உணர முடிந்தது. என்னை மன்னித்துவிடுங்கள். மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள்" என்று உள்ளங்கனியச் சொன்னாள் மீனாட்சி.

"இல்லை, நீதான் என்னை மன்னிக்கவேண்டும்" என்று கூறி அன்போடு மீனாட்சியின் அருகேயமர்ந்து கண்ணீர் வடித்தாள் ஜானகி.

"இப்படியெல்லாம் பைத்தியம் மாதிரி உளறாதே மீனாட்சி. நீ சீக்கிரமே பிழைத்தெழுந்து உன்னிரு குழந்தைகளுக்கும் தாயாகப் போகிறாய்" என்று கூறி முடிக்கவும் விமலியும் பானுவும் அவ்வறையினுள் நுழையவும் சரியாக இருந்தது. ஒரு நாளும் இல்லாத அதிசயமாகச் சிற்றன்னை தன்னை அருகில் இழுத்து அணைத்துக்கொண்ட புதுமையைக் கண்டு சிலையாகச் சமைந்து நின்றாள் விமலி. அதே சமயம் பானுவும் அதே அதிசயக் கடலில் மூழ்கி நின்றாள். அன்பென்பதே காண முடியாத தன் அத்தை தன்னைப் பரிவோடு தூக்கிக்கொள்வதை நினைத்து ஆனந்தத்தில் பூரித்து நின்றாள்.

புனர் ஜன்மம் எடுத்திருந்த பெரிய ஜன்மங்களின் உள்ளத்தை எப்படிச் சுலபமாக குழந்தைகள் உணர்ந்து கொள்ளமுடியும்?



# "லக்ஸ் டாய்லட் சோப்
## என் சருமத்தை அழகுடையதாக
## வைத்துக்கொள்கிறது" என்று சொல்கிறார்

*ஏ ஆர். சகுந்தலா*




இனிய மணத்துடன்
கூடிய இந்த வெண்மை
யானதும் சுத்தமானது
மான சோப் உங்கள்
சருமத்தை வசீகரமாகச்
செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 332-X30 TM




சுலபமாக எளிதில்
தயாரிக்கும் முறை:

1 கப் கடலையை முன் இரவே ஊற வைத்துக்கொள்ளவும். கடலை, 1 பவுண்டு துருவியமாமிசம், பச்சை மிளகாய், சிறிது மிளகு, சிறிது மஞ்சள், மிளகாய்ப்பொடி, சீரகம், இலவங்கப்பட்டை, கிராம்பு, உப்பு இவைகளை கலந்து மாவுபோல அரைக்கவும். சரக்கையினால் அரைத்த கலவையை நன்ருக வெந்த முட்டைகளின்மேல் பூசவும். கபாப்புகளைப்போல் டால்டாவில் பொரிக்கவும். அரிந்த வெங்காயத்துடன் பரிமாறவும்.

இதை தவற விடாதீர்கள்!



புதிய டால்டா சமையல் புத்தகம் — ஆங்கிலத்தில் படங்கள் கொண்டது— ஆர்ட் காகிதம்–80 பக்கங்கள்–300 தின்பண்டங்கள்செய்யும் முறைகள்—ஆரோக்கியம், சுகாதாரம், சமையலறைஇவைகளைப் பற்றிய குறிப்புகள் – விலை ரூபாய் 1/– தான்–தபால் செலவு 8 அணு தனி.

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1

# டால்டாவில் தயாரித்தது

காரபண்டங்கள், பக்ஷணங்கள், தித்திப்புப் பதார்த்தங்கள் எல்லாவற்றையும் டால்டாவில் தயாரியுங்கள். இது தின்பண்டங்களின் முழு மணத்தையும், ருசியையும் வெளிக்கொண்டு வருகிறது. டால்டா சுத்தமானது, ஊட்டமளிப்பது. சீல் செய்த டின்களில் துப்புரவாகவும், புதிதாகவும் உங்களுக்குக் கிடைக்கிறது.




சமநிலை உணவில் உங்களுக்குத் தேவையான கொழுப்பை அளிக்கிறது.

HVM. 171-50 TM




ஜான் கால்ஸ் ஒர்த்தி எழுதிய நாடகத்தைத் தழுவியது.

## 4. இரத்த பாசம்

இரவு முழுவதும் பலபல யோசனைக்குப் பலியான கீத் அதிகாலையிலேயே எழுந்துவிட்டான். அன்று நீதிஸ்தலத்தில் ஒரு முக்கிய வழக்கில் அவன் வாதாடவேண்டும். பல நினைவுகளும் கற்பனைகளும், பலவகையான பீதியும் கலந்து அவன் மனதைக் குழப்பின. அரைமணிநேரம் மனமே மரத்துப்போய்விட்டது. திடீரென்று ஒரு திடம் உண்டாயிற்று. அன்றைய வழக்கின் முக்கியத்துவம் ஒரு தெம்பும் தெளிவும் கொடுத்தது. ஒருமணி நேரம் மும்முரமாக வழக்கின் குறிப்புகளை ஆராய்ந்து தயாரித்தான். சரியாக ஒன்பதரை மணிக்கு லாரியைச் சந்திக்க வேண்டும். நாளை புறப்படவிருக்கும் கப்பலில் அவனை அயல் நாடு அனுப்பிவிடவேண்டும். எல்லாவற்றிற்கும் முதலாகப் பணம் தயாரிக்கவேண்டும்.

காலைப் பத்திரிகை வந்து விழுந்தது. எடுத்தவுடன் கொலைவிஷயம் கொட்டை யெழுத்தில் கண்ணில் பட்டது.

"கிளவ் சந்துக் கொலை."

"நேற்றுக் கொலை செய்யப்பட்டவனின் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. இது சம்பந்தமாக ஒருவர் கைது ஆயிருக்கிறார்."

கீத்தின் இதயத்தைப் பிழிந்தது இச் செய்தி. லாரி பிடிபட்டுவிட்டான்! அந்தப் பெண்ணை காட்டிக்கொடுத்திருப்பாளோ! இனி தன் நிலை! முன்னிரவு தன்னை அவ் வட்டாரத்தில் பல இடங்களில் பார்த்த போலீஸ் ஜவான் தன்னை வேண்டுமென்றே தொடர்ந்திருப்பானோ! கொலை வழக்கில் இனி தன் பெயரும் அடிபடுமே! ஒரு வித கிலேசம் பற்றிக்கொண்டது.

மணி ஒன்பதுக்கு மேலாய்விட்டது. லாரியிடம் செல்லவேண்டும். கிலேசத்தை உதறிவிட்டுக் கிளம்பினான். லாரிதான் கைது செய்யப்பட்டு விட்டானே! போய் என்ன செய்வது?.........ஏன் வீண் சந்தேகம். போய்த்தான் பார்ப்போமே.

லாரியின் அறை வாயிலுக்குச் சென்றதும் வியர்த்தது. வெளியில் நின்ற சேவகனைக் கேட்டான் "லாரன்ஸ்......"

"இன்னும் எழுந்திருக்கவில்லை."

பாரம் நீங்கிற்று. கைது செய்யப்பட்டது வேறு யாரோ? புதிய உற்சாகம் உதித்தது. உள்ளே சென்றான் கீத்.

லாரி விழித்துக்கொண்டே படுத்திருந்தான். முதல் நாளிரவு தோன்றிய பீதியும் குழப்பமும் அவன் முகத்திலில்லை. ஒரு சாந்தம் தோய்ந்திருந்தது. கீத்தைக் கண்டதும் நகைத்தான். கீத்துக்கு என்னவோ செய்தது. கொலை செய்தவன் இப்படியா கவலையற்றிருப்பான்!

"என்ன தண்டனை. ஆயுள் தண்டனையா......?" லாரிதான் கேட்டான்.

"ஏன்......?"

"நான் துணிந்துவிட்டேன்."

"கிடக்கட்டும்.........நான் சென்று அவளைப் பார்த்தேன்."

"நீயா?"

"ஆம். நேற்றிரவு. அவளை முற்றிலும் நம்பலாம்."

"நான்தான் சொன்னேனே."

"நீ உடனே வெளியேற வேண்டும்"

"அவள்?"

"பின்னால் வந்துசேருவாள். இருவரும் சேர்ந்து போகக்கூடாது. நான் பணம் கொடுக்கிறேன். உன் இருப்பிடம் என்னைத் தவிர வேறு எவருக்கும் தெரியக்கூடாது.

"அண்ணா! உன் அன்பே அன்பு!"

"ஒருவனைக் கைது செய்திருக்கிறார்கள். பத்திரிகையில் பார்த்தேன்......நீ பார்த்தாயா?"

லாரியின் கையிலிருந்த சிகரெட்டுத் துண்டம் கீழே விழுந்தது. அவன் துள்ளி எழுந்து தள்ளாடிக்கொண்டு கட்டில் பிடியைப் பிடித்து நின்றான். "என்ன? கைதா?" கீத்துக்கு அவனிடம் விஷயத்தைச் சொன்னது தவறு என்று பட்டது. லாரன்ஸ் நெற்றியைத் தடவிக்கொண்டான். "எனக்காக ஒரு நிரபராதி கைதா?" லாரன்ஸின் கண்களில் ஒரு அசாதரண ஒளி. கீத்தே பயந்து விட்டான்.

"அதனால் என்ன? நிரபராதிக்கு எப்போதும் தண்டனை கிடைக்காது. இதுமாதிரி வழக்கில் தவறான ஆஸாமியைத்தான் முதலில் பிடிப்பார்கள். இது நம்முடைய அதிர்ஷ்டந்தான். உனக்குத் தப்பிச் செல்ல அவகாசம் கிடைத்திருக்கிறது."

லாரி சமாதனமடைந்ததாகத் தோன்றவில்லை.

"இதோபார் லாரி! இவ்விஷயத்தைப்பற்றி யோசிக்க இது சமயமல்ல. அதை என்னிடம் விட்டு விடு. புறப்படத் தயார் செய்துகொள். உனக்குப் பிரயாணச்சீட்டு வாங்கிவிடுகிறேன். மாலை ஆறு மணிக்கு மீண்டும் வருகிறேன். திடப்படுத்திக்கொள். அந்தப் பெண் அடுத்த வாரம் வருவாள். பின்பு நீங்கள் இருவரும் எங்காவது வாழலாம். நான் போகவேண்டும் மாலை வருகிறேன்."

கீத் புறப்பட்டான். வாயிற்படியைத் தாண்டும்போது திரும்பி, "என் ஏற்பாட்டை அசட்டை செய்யாதே—அவளுக்காக," என்றான். லாரி அசைந்து கொடுக்கவில்லை.

அன்று நீதிஸ்தலத்தில் கீத் அற்புதமாக வழக்காடினான். அவன் அவ்வளவு தெளிவாகவும் சரளமாகவும் எப்போதுமே வாதாடியதில்லை. பிற்பகல் தன் பாங்கிற்குச் சென்று 400 பவுன் எடுத்துக்கொண்டு வந்தான். மாலையானதும் தம்பியைப் பார்க்க விரைந்தான்.

## 5. எய்தவனிருக்க...........

லாரன்ஸ் வெகு நேரம் படுக்கையிலேயே உட்கார்ந்திருந்தான். அவன் உள்ளத்தில் ஒரு முரண். தன் பொருட்டு ஒரு நிரபராதி கைது! ஆனால் நிரபராதி எப்போதும் நிரபராதி தானே! அவனுக்குத் தண்டனை கிடைக்காது என்று கீத் சொன்னானே! அதை நம்பலாமா? நாட்டைவிட்டு ஓடிவிடுவதா? தான் செய்த பாவத்திற்கு வேறொருவனை வேதனையனுபவிக்க விட்டு ஓடிவிடுவதா? தன்னிடத்தில் வேறு ஒருவன் நீதிஸ்தலத்தில் விசாரிக்கப்படுவான்! தானும் போய்ப் பார்த்தால் என்ன?



உடுத்துக் கொண்டு புறப்பட்டான். வழியில் ஒரு க்ஷவர நிலையத்தில் நுழைந்தான். அங்கேகிடந்த பத்திரிகையில் கைதானவன் பெயர் இவான் என்றிருந்தது. ஆனால் விலாசம் கொடுக்கப்படவில்லை. அன்று விசாரணை போ நீதி மன்றத்தில் நடக்கும் என்றும் கண்டிருந்தது.

நேரே நீதிமன்றத்திற்குச் சென்றான். நல்லகூட்டம். தன் செயல்தான் அவ்வளவு கூட்டம் கூட்டியிருந்தது என்று

அறிய அவன் உடல் கொதித்தது. கைது செய்யப்பட்ட குற்றவாளி (?) இரு போலீஸ் ஜவான்களால் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். கூண்டில்! யாரது? லாரியின் உடலில் மின்சாரம் பாய்ந்தது. முதல் நாளிரவு வளைவடியில் கண்ட மாஜிமந்திரி கூண்டில்! இந்த அப்பாவியா குற்றவாளி! தோல்வியின் எல்லையிதுதானோ?'

விசாரணை தொடங்கியது. சாட்சியம் வெகு சுருக்கமாயிருந்தது. வாலன் தங்கியிருந்த ஒரு ஹோட்டல் முதலாளி அவன் உடலை அடையாளம் கண்டுபிடித்தான். அவன் சாப்பிடும்போது அணிந்திருந்த பாம்பு மோதிரமும் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு வட்டிக் கடைக்காரன் அதே மோதிரததைக் கைதி இவான் முதல் நாள்தான் தன்னிடம் அடகு வைத்ததாகச் சாட்சியம் சொன்னான். இவான் அடிக்கடி அந்த வளைவினடியில் தூங்குவதைத் தான் பார்த்ததாயும், பலதடவைகள் அவனை அங்கிருந்து விரட்டியதாயும் ஒரு போலீஸ்காரன் சாட்சி சொன்னான். இவான் கைது செய்யப்பட்டபோது "ஆம், நான் மோதிரத்தை அந்த உடலிலிருந்து எடுத்தது உண்மை. ஆனால் அது சவமாயிருந்தது. நான் சவத்தைத் தேட்டை போட்டது தவறுதான். நான் படித்தவன்...... இருந்தும் முட்டாள் தனமாக மோதிரத்தை அடகு வைத்தேன்...ஏன்?......என் வயிறு......" என்று சொன்னதாக இன்னொரு போலீஸ் அதிகாரி சாட்சியம் சொன்னான்.

லாரன்ஸ் மனது கஷ்டப்பட்டது. என்ன அற்புதச் சாட்சியம். எய்தவன் தான் எதிரே நிற்க, எவனுக்கோ விசாரணை! இவான் கூட்டத்தைப் பரிதாபமாகப் பார்த்தான். லாரன்ஸ் எப்படி அவன் முகத்தைப்பார்ப்பான். தலையைக் குனிந்துகொண்டான். கைதி "ரிமாண்டில்" வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. உடன் அவன் இழுத்துச்செல்லப்பட்டான். லாரன்ஸ் நெற்றியில் வியர்வை முத்தாய் நின்றது. ஒருவித மயக்கம் பற்றிக்கொண்டது. நீதி மன்றத்தைவிட்டு வெளியே வந்தவனுக்குக் குடிக்க வேண்டும்போல் தோன்றியது. சுற்றிலும் உள்ளவர்கள் தன்னைச் சந்தேகத்துடன் பார்ப்பதாக ஒரு பயம். மனச்சாட்சி வாளாக அறுத்தது.

அவள்! ஆம்! அவள் நினைவு வந்துவிட்டது. அவளைப்பார்ப்பதில்லையென்று கீத்திடம் வாக்குறுதி கொடுத்திருந்தது நினைவுக்கு வந்தது. அதனால் என்ன? அவளைப் பிரிந்திருப்பதைவிட உயிரைப் பிரிந்துவிடலாம்! அவள் வாழ்வது அவனுக்காகவே! அவன் வாழ்வதும் அவளுக்காகவே! அவர்களிடையே என்ன பாசம்! மனிதரின் காமவெறிக்கு மருந்தாகிவந்த அவள் அவனுக்குக் காதல் தெய்வம்! பல மனிதருடன் பழகிப் பணிந்த அவளுக்கு அவன் காதல் தெய்வம்! என்ன மர்ம பாசம்!

அவள் அணைப்பில் ஆறுதல் பெறத்துணிந்தான். விரைந்தான் அவள் வீட்டிற்கு.

அவளுக்கும் இவன் நினைவே. எதிர்பார்த்திருந்தவள்போல் நின்றவள் இவனைக்கண்டதும் மகிழ்ந்தாள். நொடியில் அவனுக்குத்தேவையானவை செய்யப்பட்டன—வெந்நீர், சாப்பாடு, புகை, எல்லாம். அப்பேர்ப்பட்டவள் வாழ்வைப் பாழடித்த மிருகத்தைக் கொலை செய்ததற்கா வருந்துவதா என்றுகூடத் தோன்றிற்று அவனுக்கு.

அன்று நீதி மன்றத்தில் தான் கண்டதைச் சுருக்கமாக அவளிடம் சொன்னான். அவன் மனநிலையை அவள் நன்கு உணர்ந்துவிட்டாள். அவன் மனச்சாட்சி அவனைச் சரணடையச்செய்துவிட்டால், அவள் வெள்ளைமுகம் அவள் பயத்தைக் காட்டியது. "என்னைவிடவா மனச்சாட்சி வலிவுடையது?" என்று கேட்டது, கெஞ்சியது. அவன் குழம்பினான்.

மாலை ஐந்து மணிக்கு அவளைவிட்டுத் தன் இருப்பிடம் சென்றான்.

சொன்னபடி ஆறு மணிக்குக் கீத் வந்தான்.

"இந்தா பணம், கிளம்பு" கீத் பண நோட்டுக் கத்தையை நீட்டினான். லாரன்ஸ் அதைப் பார்க்கக்கூட இல்லை.

"வேண்டாம்......நான்......"

"லாரி! சொல்வதைக் கேள்! ஒன்றும் முழுகிவிடவில்லை. அப்பேர்ப்பட்ட அப்பாவி எங்கிருந்தாலென்ன? விட்டுத்தள்ளு அவன் நினைவை. அவனைத்தண்டிக்கப் போதிய சாட்சியம் இல்லை. இந்தா எடுத்துக்கொண்டு புறப்படு. புது வாழ்வைத் தேடிக்கொள்.

லாரன்ஸ் சிரித்தான். அச்சிரிப்பில் குத்தல் கலந்திருந்தது. பண நோட்டுக் கத்தையை வெடுக்கென்று பிடுங்கினான்.

"வெளியே போ, உன் கௌரவத்தைக் காப்பாற்றிகொள். இதோ இவைகளை உன் பையில் போடு. இல்லாவிட்டால் நெருப்பில் போட்டுவிடுவேன் என்ன?" லாரி கர்ஜனையே செய்துவிட்டான்.

கீத் கத்தையை வாங்கிக்கொண்டான்.

"எனக்குக் கோழையாக இஷ்டமில்லை. ஓடி ஒளியமாட்டேன் நான்."

வெகுநேரம் நிசப்தம். கீத்தே அதைக் குலைத்தான்.

"பைத்தியமே என்னிடம் நம்பிக்கையில்லையா? அந்த அப்பாவியைத் தண்டிக்க முடியாது—ஒருவரும் தண்டிக்க மாட்டார்கள். சவத்தைத் தேட்டைபோடும் அற்பன் சிறையில் இருக்கத் தகுந்தவன்தான். நீ செய்ததைவிட அவன் செய்தது பெரிய குற்றம்."

லாரன்ஸ் முறைத்துப் பார்த்தான்:"என்ன?...... சரிதான்''

"பின் என்னதான் செய்யப்போகிறாய்? உன் பெயரும் கௌரவமும் குலையவேண்டுமா?''

லாரன்ஸ் தலைகுனிந்தான், "பணிந்தவனை உதைக்காதே" என்று சொல்வதுபோலிருந்தது அவன் செய்கை. "என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆனால் ஓடமட்டும் மாட்டேன். மன்னித்துவிடு என்னை.'' லாரி திடமாகவே பேசினான்.

'கீத் வேறு வார்த்தையின்றி வெளிச்சென்றான்.

## 6 என்ன அது?

விசாரணை ஜனவரிக்கு ஒத்திப் போடப்பட்டது. கீத்துக்கு ஒரு நம்பிக்கை. எப்படியும் அவனைத் தண்டிக்கப் போதிய சாட்சியம் இல்லை. தவிர அவனுக்குச் சிறைவாசம் தேவையே! தெருச் சுற்றித் திரிந்து, வளைவடியில் தூங்கிக் கழிப்பதைவிடச் சிறையில் நன்கு தூங்கலாமல்லவா?

பல வாரங்கள் கழிந்தன. கீத் லாரியைப் பார்க்கவேயில்லை. அவன் என்னதான் செய்து வந்தான், எங்கெங்கே சுற்றித்திரிந்தான் ஒன்றும் தெரியவில்லை. ஒருநாள் இரவு கீத்துக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. எழுந்து நடந்து ஆற்றங் கரைக்குச் சென்றான். எவ்வளவு நேரம் அங்கே கழித்தானோ தெரியாது. திடீரென நினைத்துக் கொண்டு திரும்பி நடந்தான். ஒரு வண்டி பிடித்துக்கொண்டு லாரியின் இருப்பிடம் சென்றான். அவன் அறையில் விளக்கில்லை. வெளியே "வாடகைக்கு'' என்ற போர்டு தொங்கிற்று. போய் விட்டானா? எங்கே? எப்படி? அந்தப் பெண்?

திரும்பி நடந்தான், பாரோத்தெரு குறுக்கிட்டது. நல்ல தனிமை. அவள் அறை ஜன்னலில் ஒளி தெரிந்தது. ஜன்னல் திரை சரியாக மூடிக் கொள்ளவில்லை, மெள்ள அருகே சென்று உள்ளே பார்த்தான்.

மின்சாரவிளக்கு எரியவில்லை, இரு மெழுகுவர்த்திகள்தான் எரிந்தன. அவள் மேஜையின் முன் முழந்தாளிட்டு, கைகட்டியிருந்தாள், தலை வணங்கியிருந்தது. அவளுக்குப் பின்னால் அவன் நின்றுகொண்டிருந்தான், அவன் முகக்குறிதான் என்ன? அவனுடைய உணர்ச்சியையெல்லாம் கரைத்துக்கொட்டிவிட்டது-ஆவல், காதல் பீதி, பரிதாபம்! அக்குறி கீத்தின் மனதில் பதிந்துவிட்டது, என்றென்றும் மறக்கமுடியாமல். மெழுகுவர்த்தி ஒளி அவர்கள் முகங்களில் படிந்து ஒரு தூய்மையைத் தந்தது. அவள் தொழுதாள். அவன் அசையாது நின்றான். திடீரென அவள் தலைநிமிர்த்து முன்னால் பார்த்தாள். அவள் கண்களில் ஒரு கனல். அவள் எந்த ஜோதியைக் கண்டுவிட்டாள்?

கீத் பத்து நொடிகளே நின்று கவனித்திருப்பான். தன்னை யாராவது கவனித்துவிடப் போகிறார்களே என்ற பயத்தில் பின் நகர்ந்தான், வீட்டை நோக்கி நடந்தான்.

லாரி அவள் அறைக்கே வந்துவிட்டானா!

வீடு திரும்பியவன் உள்ளே செல்லாமல் வெளித் தாழ்வாரத்திலேயே கைபிடிச் சுவரில் சாய்ந்து கொண்டு ஆகாயத்தைப்பார்த்தவண்ணம் நின்றான். நட்சத்திர மண்டலத்தையும் தாண்டிச் சென்றது அவன் பார்வை. அவன் புறக்கண் கண்டவைகளுக்கெல்லாம் அப்பால் அவன் அகக்கண் எதையோ ஒன்றைக் கண்டது. என்ன அது?

மணி பன்னிரண்டடித்தது. படுக்கச் சென்றான்.

## 7 சத்தியம்

கொலை வழக்கு விசாரணைக்கு ஆறு வாரங்கள் இருக்கின்றன. கீத் மனதில் சமாதானமின்மை, இருள். லாரன்ஸுக்கோ மிகவும் சந்தோஷமான காலம் அதுதான். தன் அறையைக் காலி



செய்ததுமுதல் அவளோடுவசிக்கத் தொடங்கிவிட்டான். ஒருவித அமைதியும், களிப்பும் அவனிடம் குடிகொண்டன. மனத் தாங்கல் தானே நீங்கிற்று. காதலல்ல, ஒருவித ஆத்மீக சக்தி அவனை இயக்கிற்று. ''வருவது வந்தே திரும்'' என்ற வேதாந்தத்தில் மிதந்தது அவன் வாழ்க்கை. காலையில் விழித்துக்கொண்டும், படுக்கையைவிட்டு எழுந்திருக்கமாட்டான், மல்லாந்து படுத்துக்கொண்டு கையைத் தலையைச் சுற்றிக் கட்டிக்கொண்டு அவள் நினைவிலேயே அயர்ந்திருப்பான். அவள் அதற்குள் வெளியே சென்று தேவையான வாங்கி வருவாள். சாப்பிடும்போதுதான் எழுவான். மாலையில் வெளியே உலாவச் செல்வான். நெடுந் தூரம் நடந்து களைத்துத் திரும்புவான். படுக்கு முன் பத்திரிகை படிப்பான்.

ஜனவரி 28. அன்று கீத்துக்கு நீதி மன்றத்தில் கடும் வேலை. வழக்கில் வெற்றி. வெளியே வந்ததும் சுவரொட்டி விளம்பரத்தைப் பார்த்தான்

"ஹைவ் சந்துக் கொலை — விசாரணையும் தீர்ப்பும்.'' ஏமாற்றம்! காலையில் பத்திரிகை பார்க்கவில்லை. தன் சொந்த அலுவலில் தம்பியின் விஷயத்தை மறந்துவிட்டதற்காகத் தன்னை நொந்துகொண்டான். கொஞ்ச நேரம் ஒன்றும் செய்ய இயலாமல் மரத்துப்போய் நின்றான். பிறகு ஒரு பத்திரிகை வாங்கினான். கடைசிச் செய்திகள் என்ற பத்தியில் ''......கொலை. எதிரி குற்றவாளிதான் என்ற தீர்ப்பு. மரண தண்டனை'' என்ற தலைப்பைப் படித்தான்.

முதலில் ஒரு அர்த்தமற்ற ஆத்திரம் வந்தது. என்ன தீர்ப்பு? அநீதி! கொடுமை! சாட்சியம்...? மன்றத்திலிருந்து தன் வீட்டிற்கு நடந்த ஐந்து நிமிடம் யுகமாகப்பட்டது. இந்தத் தீர்ப்புக்குத் தன்னைத் தயாரித்துக்கொள்ளத் தவறிவிட்டான் கீத். தீர்ப்பை மாற்ற இயலுமா? அதுவே யோசனை; ஆனால் அவன் உண்மையில் நிரபராதிதானா? பிணத்தைத் தேட்டை போட்டுத் திருடியதைவிடவா ஒரு மிருக மனிதனை அகஸ்மாத்தாகக் கொலை செய்தது பெரிய குற்றம்?

ஒரு வண்டி பிடித்துக்கொண்டு பரோத்தெரு சென்றான். அவள் கதவைத் திறந்தாள். அவள் கறுப்பு உடை அணிந்திருந்தாள். அது அவள் வெளுப்பை எடுத்துக்காட்டிற்று. அவளுடைக்கும் கண்களுக்குந்தான் என்ன பொருத்தம்!

"லாரி!''

''இல்லை''

"எங்கே போயிருக்கிறான்?''

"தெரியாது''

"அவன் இங்கேதான் வசிக்கிறானா?''

"ஆம்''

"அவனுக்காக நான் காத்திருக்கட்டுமா?''

"உட்காருங்கள் தயவு செய்து''

கீத் உட்கார்ந்துகொண்டான். அவள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். ''அவரை என்னை விட்டுப் பிரிக்கமாட்டீர்களே?''

"உங்களைப் பிரிக்க நான் இஷ்டப்படுவேனா? நிரந்தரமாக உங்களைச் சேர்க்கவே பாடுபடுகிறேன். இந்த இடத்தைவிட்டு வெளியேறத் தயாராயிருக்கிறாயா?''

"நான் தயார்தான்''

''அவன்''

"அவருந்தான்......ஆனால்'' அவள் மெல்லிய குரலில் சொன்னாள்,'' அந்த அப்பாவி......?''

''அவன் ஒரு பிணம், திருடன், கழுகு; அவனைப் பற்றி என்ன?''

''பாவம், பரிதாபம் பட்டினிக் கொடுமை! நானும் அனுபவித்திருக்கிறேன், பசி வந்தால் பாதகம் ஏது? பாவம்... அவனுக்கு ஆதரவு யாருமில்லைபோலும்.''

"வழக்கு என்னாயிற்று தெரியுமா?''

"தெரியாது. அதைப்பற்றி அவர் என்னிடம் சொல்வதில்லை. நேற்றிரவு மிகவும் பரபரப்புடன் இருந்தார். இன்று வழக்குத்துக்கு விரோதமாய்ச் சீக்கிரமே எழுந்து வெளியே போனார். வழக்கு என்ன ஆயிற்று?''

"முடிந்தது''

''முடிவு?''

"குற்றவாளி, மரண தண்டனை.''

அவள் கண்களை மூடிக்கொண்டாள். அவள் வதனத்தில் அனுதாபம் நிழலாடிற்று. மூர்ச்சை போட்டு விழுந்துவிடுவாள் போல் தோன்றிற்று. கீத் எழுந்து அவள் கரங்களைப் பற்றிக்கொண்டான். "கவனி. லாரன்ஸைத் தனியே விடாதே. அவன் சரணடைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.''

அவள் கண்களைத்திறந்தாள். சிலைபோல் நின்றாள். ''புரிகிறதா?'' என்றான் கீத்,

"புரிகிறது. அவர் இதற்குள் சரணடை......?'' அவள் விம்மினாள். கீத்துக்கு ஒரு புதிய பயம். தான் அங்கிருக்கும்போதே போலீஸ் வந்து விட்டால்? அவன் பரபரப்புடன் எழுந்தான். ''சீக்கிரம் லாரி வந்ததும் அவனைத் தனியே அனுப்பாதே. நம்பலாமா உன்னை?''

"நம்பலாம். என்னால் முடிந்தவரையில் முயல்கிறேன்."

"நாளைக் காலையில் வருகிறேன்."

கதவில் சாவி திருப்பும் சப்தம். லாரி நுழைந்தான். அவனுடைய முகபாவம் சீத்துக்குத் திகில் உண்டாக்கியது. "எதிர்பார்த்தது நடந்துவிட்டது......ம்......" இழுத்தான் லாரி.

"பாதகமில்லை; அவனைத் தண்டித்துவிடமாட்டார்கள். அவனைக் காப்பாற்ற நான் என்னால் இயன்றதையெல்லாம் செய்கிறேன்...... சத்தியம் செய்துகொடு, நீ சரணடைவதில்லையென்று...ம் ...செய் சத்தியம்"

லாரன்ஸ் தலையை அசைத்தான். அவள் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். "சத்தியம் செய்கிறேன் (உயிரோடு) சரணடைய மாட்டேன்" அவன் சிரித்தான். அதில் மறைபொருள் இருப்பதாகச் சீத் உணரவில்லை.

## 8 பாசம்.

சீத் சென்றதும் அவள் ஒன்றும் பேசவில்லை; தனக்கு ஒன்றும் தெரியாததுபோல் நடந்துகொண்டாள். அவன் நிறையக் குடித்தான்; காதல் சொரிந்தான். அவளும் எல்லாவற்றிற்கும் ஈடு கொடுத்தாள். குடி அவனுக்குப் போதை யூட்டவில்லை; தெளிவும் திடமுமே கொடுத்தது. அறையை ஒழுங்கு படுத்தினான். விருந்துக்கு ஏற்பாடு செய்தான். தெருவில் யாரோ பியானோவில் பாடினார்கள்—சோககீதம். இசையைக் கேட்டுக்கொண்டே காகிதம் பேனா எடுத்து எழுதினான். அவள் அசையாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

இருவரும் படுக்கச்சென்றார்கள்!—தூங்க!

சீத் தன் வீட்டுக்குச் செல்லவில்லை, பொழுது போக்குச் சங்கத்துக்குச் சென்றான், அங்கே பலரும் இவனைக்கண்டு அன்று அவன் அடைந்த வெற்றியைப் பாராட்டினார்கள். அவர்கள் அறிந்தார்களா இவன் மன ஓட்டத்தை. அவன் அமைதி தேடித் தனியிடம் சென்றான். ஞாபகம் முழுவதும் லாரியிடம்! அவன் என்ன செய்கிறானோ. நிறைய மலர்கள் வாங்கி வந்தானே! இச்சந்தர்ப்பத்தில் மலர்கள்!... ஒன்றும் புரியவில்லை.

நினைவு வந்தது! அன்று லாரி தன்னிடம் கொடுத்த சாவி. சென்றான் அவள் வீட்டிற்கு, கதவைத்திறந்தான். விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. ஆனால் நிசப்தம். விளக்கைப்போட்டுக்கொண்டு என்ன செய்கிறார்கள்?... அவர்களைக் காணோம், எங்கே சென்றுவிட்டார்கள்?... திரைக்குப்பின் படுக்கை தெரிந்தது, நெருங்கிப் பார்த்தான். இருவரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள்—ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு. அப்படியென்ன தூக்கம்? தூக்கந்தானா...? இல்லை சீத் சந்தேகப்பட்டான். அருகில்போய் அழைத்துப் பார்த்தான், பதிலில்லை. மெதுவாகத்தொட்டான் லாரியின் நெற்றியை. "சில்"லென்று ஒரு உணர்ச்சி அவன் நரம்பில் பாய்ந்தது. அவள்? ஆம், அவளுந்தான். இருவரும் இறைவனடியில் நிரந்தர நித்திரை புரிந்தனர். தலைமாட்டில் ஒரு கடிதம்--"உடனே போலீசுக்கு அனுப்பவும். லாரன்ஸ்" அதை எடுத்துத் தன் பையில் போட்டுக்கொண்டான். இனி அங்கிருந்து என்ன பயன்? வீடு திரும்பினான்.

கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

'சாவின் பிடியில் இருக்கும் லாரன்ஸ்., என் சொந்தக்கையால் இந்தக் கடிதம் எழுதுகிறேன். கிளவ் சந்துக்கொலை செய்தவன் நானே. கொலை இவ்வாறு நேர்ந்தது........நாங்கள் இறக்க விரும்பவில்லை. ஆனால் ஒரு நிரபராதி என் பொருட்டுத்தண்டிக்கப்படுவதைப்பார்த்துச்சகிக்க முடியவில்லை, வேறு வழியின்றி இப்படிச் செய்தோம். எங்கள் பிரேதங்களைப் பரிசோதனை செய்ய வேண்டாமென வேண்டிக்கொள்கிறேன். இத்துடனிருக்கும் பொட்டலத்திலிருக்கும் பாஷாணந்தான் நாங்கள் சாப்பிட்டது. எங்களை ஒன்றாக அடக்கம் செய்யும்படி வேண்டிக்கொள்கிறேன். ஜனவரி 28 இரவு 10 மணி, லாரன்ஸ்."

பத்து நிமிஷம் கடிதத்தைக் கையில் பிடித்தபடியே நின்றான். வெளியில் காற்று அலறிற்று. அருகில் கனல் ஜ்வாலை வீசிற்று. ஒரு அப்பாவியின் வாழ்வும் சாவும் அவன் கையிலிருந்தது—அக்கடிதத்தில், அதிலேயே இருந்தது. தன் கௌரவமும். அப்பாவியைக் காப்பாற்ற வேண்டுமானால்...? தன் கௌரவம் பாதிக்கப்படும். தன் தம்பியின் விபசாரம்; கொலை; தன் ஈடுபாடு; எல்லாம் வெட்ட வெளிச்சமாய்விடும். அப்படித் தன் குலப்பெயரைக் கெடுத்துக்கொண்டாவது திருடனைக் காப்பாற்ற வேண்டுமா? ஆனால்...நீதி? அறையில் குறுக்கும் நெடுக்கும்நடந்தான். முடிவு ஒன்றும் கிட்டவில்லை. ஜன்னலண்டை போய் நின்று வெளியே பார்த்தான். எங்கும் இருள். இருளிலும் எங்கோ ஓர் ஒளி, "பத்திரிகை! பிரபல சட்ட நிபுணரின் தம்பி கொலை செய்தார்! தற்கொலை செய்துகொண்டார்!......" பத்திரிகை விற்கும் பையனின் குரல். இந்த நிலைக்கு இடம் கொடுப்பதா? ஆனால்...... அந்த அப்பாவி!......

எங்கிருந்தோ வந்தது புது சக்தி! புது புத்தி! புது யுக்தி! மேல் நீதி மன்றம்! தானே வழக்காடினால்......?

கையிலிருந்த கடிதம் கணப்பில் விழுந்தது. ஜ்வாலை அதை ஆவலோடு உண்டது.

சீத்துக்கு அடுத்த வழக்கில் வெற்றி! விடுதலையடைந்த அப்பாவிக்குப் புது வாழ்வு!




இன்று ஐந்து வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம்—மறக்க முடியாத நிகழ்ச்சி.

அன்று நான் ஒரு கசப்பான அனுபவத்தையும், வேதனை கொண்ட ஒரு தீர்மானத்தையும் காண ஏற்பாடு செய்த மகத்தான புண்ணியத்தைக் கட்டிக் கொண்டார் ஸ்ரீமான் பத்திரிகாசிரியர்.

"அடுத்துவரும் இதழுக்கு உங்கள் கதையை அன்புடன் எதிர் பார்க்கிறேன்... உருக்கமான காதல் ஓவியம் ஒன்று தீட்டி அனுப்புக...... என்று செந்தமிழில நவின்றிருந்த வேண்டுகோளுக்கிணங்க எனது கதை அவரை நோக்கிப் பறந்தது.

"உருக்கமான காதலின் நாயகர்கள் ஒன்று சேரக்கூடாது என்பது விதியோ என்னவோ, என் காதலிலும் நானும்,, என் காதலி, அபலை மிஸ் ராதாமணியும் கடைசியில் ஒன்று சேரவிடாமல் காதல் கதை விதி ஆக்கி விட்டது!

கதை வெளியானது. இவ்வளவு உருக்கமாக மிஸ் ராதாமணியிடம் நான் காதல் புரிந்ததை, என்னை எழுத்தாளன் என்ற முறையில் பலர் தங்கள் பாராட்டுக் கடிதங்கள் மூலம் தட்டிக்கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் அளித்த ஊக்கத்தைத்யெல்லாம் சாக்கடையில் தள்ளி விட்டு என் முகத்தில் சேற்றை அப்பிவிட்டாள் என் மனைவி நீலா.

நீலாவைக் கைப்பிடித்து அப்போதுதான் ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகியிருந்தது. அதற்குள் மனதுக்கு மனம் பிடிபட வழியில்லை. எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படும் காலம். பரஸ்பர நம்பிக்கை பூரணமாக வளர்ந்து நிற்காத நிலை. அவள் கழுத்தில் என்றைக்கு மூன்று முடிகள் போட்டேனே, அன்றையிலிருந்தே நான் மனோ, வாக்கு காயத்தால் பிற மாதரிடம் தொடர்பு கொள்ளேன் என்று ஒப்பந்தப் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டேன் என்று எண்ணம்கொள்ளும் புது மணப் பருவம்.

பாவம், அவள் அசடு. அவ்வளவுதான், அவளைப் பொறுமைக்காரி யென்று சொல்லமாட்டேன், நான் அவள் கணவன் என்ற முறையில் சில கட்டுப்பாடுகளை எதிர்பார்த்தாளே ஒழிய, நான் ஒரு எழுத்தாளனும்கூட என்ற அளவில் எனக்குச் சிறிது கற்பனைச் சுதந்திரத்தையும் அளிப்பதைப்பற்றி அவள் கொஞ்சம்கூட யோசனை செய்யவில்லை.

அவளுக்கு அந்தக் கதை பலத்த சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. என் மணவாழ்வின் பின் திரையில் நான் மிஸ் ராதாமணி போன்ற யாரொருத்தியுடனாவது காதல் வாழ்வு நடத்தியிருக்கவேண்டுமென்ற திகைப்பான முடிவுக்கு வந்துவிட்டாள் நீலா,

இவள் திரட்டி வைத்திருந்த முடிவுக்கு 'ஏமன்' கூறுகிறதுபோல வந்து சேர்ந்தது வைத்தியின் கடிதம். அவனுக்கு என் கதை கவ்விவிட்ட உணர்ச்சி. "உன் கதையில் ஜீவன் துடிக்கிறது

ராஜு, உணர்ச்சிகளை அள்ளிக் கொட்டியிருக்கிருய். அனுபவசாலிகளால்தான் இவ்வளவு விறுவிறுப்புடன் எழுதமுடியும்'' என்று இன்னும் எவ்வளவோ புகழ்ந்து என் தலையில் பனிக்கட்டியையே வைத்துக் குளிரச் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதியிருந்தான். ஆனுல் அவன் வைத்த பனிக்கட்டி என் உள்ளத்தையே பொசுக்கிவிடக்கூடுமென்று கண்டானு?

எக்கச்சக்கமாக நீலா கையில் மாட்டிவிட்டது அந்தக் கடிதம். அதுவரையில் என் 'பழைய காதலைப்பற்றி ஓயாமல் என்னைக் குடைந்து வந்தவள் அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் மௌனம் அனுஷ்டிக்க ஆரம்பித்துவிட்டாள் எப்போதும் அவள் முகம் முக்கால்படி வெண்கலப்பானையாகக் காட்சி அளிக்க ஆரம்பித்துவிட்டது. ஏதோ தன் வாழ்வே குட்டிச் சுவராகிவிட்டது போன்ற குறு விசாரம் அவளைச் சதா வாட்டி வந்தது. அவள் கோபம், அதில் பேசாதபேச்சு'கள் எல்லாவற்றிற்கும் வக்காலத்து வாங்கிக்கொண்டு அடுக்களையிலுள்ள சாமான்கள் உறுமித் தீர்க்க ஆரம்பித்துவிட்டன!

அவளது போக்கு நாளுக்கு நாள் மோசமான வேகத்தில் முன்னேறி வந்தது எனக்குப் பொறுக்க முடியவில்லை. அவளிடம் கோபித்துக்கொண்டு விரட்டிவிட்டால் அது அவள் கொண்ட முடிவுக்குத்தான் பலமளிக்கும். ஆகையால் ஒருநாள் நானே அவளிடம் சமாதானத்திற்கு முன்னேறி அவளை என் நிலைமையை உணரச்செய்தேன். நான் எவ்வளவோ விளக்கவிட்டுத்தான் அவள் வெண்கலப்பானை முகம் அழகிய செந்தாமரைப் பூவாக மலர ஆரம்பித்தது!

அன்றுடன் என் மகிழ்ச்சியையே குலைப்பதற்குக் காரணமான காதலை என் கற்பனையினின்று கிள்ளி எறிந்து விட்டவன்தான், என் கதைகளில் அன்னையின் பரிவு சுரந்து ஓடும், ஏழையின் புலம்பல் ஓலமிடும் — இப்படி எவ்வளவோ — ஆனுல் காதல்மட்டும் என்றும் மலர்ந்ததில்லை.

## 2

எனது கடைசியான காதல் கதை வெளிவந்த பத்திரிகை அந்தக்கதையை வெளியிட்டபின் ஐந்து ஆண்டு மலர்களைச் சமர்ப்பித்துவிட்டது. இந்த ஐந்து வருஷங்களில்—நான், நீலா—எங்களுடைய வாழ்வில்தான் எவ்வளவு சம்பவங்கள்! கஷ்டமோ, சுகமோ; ஊடலோ, ஒற்றுமையோ அவைகள் ஒவ்வொன்றும் எங்களை விட்டுச் செல்லும்போது எங்கள் உள்ளங்கள், ஒவ்வொரு தடவையும் இன்னும் கொஞ்சம் இறுகப் பற்றிக்கொள்ளும். இன்று நீலா என்னை முழுதும் கற்றுத் தெளிந்துவிட்டாள்.

நீலாவிற்கு இன்று என்னைப்பற்றிப் பூரண நம்பிக்கை உண்டு. என் தாழ்விலே அவள் எனக்குக் கைகொடுத்து என் வாழ்விலே கையோடு கை பிடித்து ஐந்து வருஷங்களாக என் சுக, துக்கங்களுக்குத்தானும் உடைமையாய்வாழ்ந்துவிட்ட அவள் இன்று எனமேல் ஏற்றிவைத்த அன்பை இனி எந்த விதத்திலும் இம்மிகூடக் குறைக்க முடியாது.

* * *

மறுபடியும் இன்று,ஐந்து வருடங்களுக்குப்பின், எந்த மகான்கள் அன்று என் வாழ்விலே ஒரு புயலை ஏவிவிட முனைந்தார்களோ அவர்கள் தங்களது கடிதங்கள் மூலம் அதே பிரச்னையை இன்று எழுப்பிவிட்டிருந்தார்கள். ஸ்ரீமான் பத்திரிகாசிரியர் நண்பன் வைத்தி இருவருடைய கடிதங்களும் இணை கோடுகள் போல ஒரே தொனியில் ஓடின.

அவர்களுக்கு என் கற்பனையில் காதல் கருத்துக்கள் மலரவேயில்லையாம், அந்த மணத்திற்காக ஏங்கி நிற்கும் அவர்கள் என் அடுத்த கதை காதல் தென்றலை வீசுமா என்று கேட்டு எழுதியிருந்தார்கள். அதில் நட்புரிமையுடன் எழுதியிருந்த வைத்தியின் கடிதம் சற்று என் சொந்த வாழ்வைக் கேள்வி போட்டது.—

''......ஐந்து வருஷங்களுக்கு முன் நீ எழுதியிருந்த 'ராதாமணியின் காத'லிற்குப்பின் உன் கதைகள் வாழ்வொடிந்த ஜீவனின் பரிதாபக்குரல்களில்தான் பேசுகின்றனவே யொழிய, சுவை கொண்டு இன்பமூட்டுவதில்லை. மணம் செய்துகொண்ட புதிதில் உன் இதயம் மலர்ந்த மணத்தின் போதையில் நீ அந்தக் கதையில் காதலைக் கள்ளெனச் சொரிந்திருந்தாய். நான் கேட்கிறேனே என்று கோபித்துக்கொள்ளாதே — ஏன் உன் கதைகளில் காதலே இல்லை? உன் மண வாழ்வு அதற்கு ஏதேனும் காரணமா? அடுத்து வரும் உன் கதை இதற்கு ஒரு மகிழ்ச்சிக்குரிய விடையை அளிக்குமா...?''

கடிதத்தைப் படித்துவிட்டு அதை நீலாகையில் கொடுத்தேன். இரு கடிதங்களும் 'கார்'டிலே தான் எழுதப்பட்டிருந்தபடியால் அவள் அதை முன்னமேயே படித்திருக்கிருள்,

நீலா அதைச் சாவதானமாக வாங்கிக்கொண்டு மௌனமாக நின்ருள். என் சிந்தனை பலமாகச் சுழல ஆரம்பித்தது.

அந்தச் சுழற்சியினின்று விடுபட்ட நான் நீலாவை நிமிர்ந்து நோக்கினேன். அவளது கண்களில் நீர் திரையிட்டிருந்தது.

''நீலா...'' என்று அவளை உலுக்கினேன்.

''நீங்கள் இனிமேலாவது எழுதுங்கள்—'' அவள் கண்ணீரோடு குலுங்கி விழுந்தன வார்த்தைகள்.

''அசடு இதற்காகவா அழுகை. நிச்சயமாக எழுதுகிறேன்.''

நீலா என் மார்பிலே சாய்ந்தாள். அவள் அழவில்லை. ஏதோ ஒன்றை என் மனத்திலே தேடுவதுபோல் அவள் முகம் புதைந்து நின்றது.

நீலாவின் செய்கைதான் எவ்வளவைச் சொல்லிவிட்டது!

## 3

நீலாவின் தெளிவும், வைத்தியின் ஆவலும் எனது கிள்ளி எறிந்துவிட்ட காதல் கற்பனையைத் திரும்பி முளைவிட்டுத் தளிர்விடச் செய்தன.

அதன் பயனாக என் மனதில் நெடுநாட்களாகக் குமைந்து வந்த ஒரு சம்பவம் எனது மற்றொரு நண்பன் நடராஜன் சுவைக்கப்போய்க் கசந்துவிட்ட காதல் கனி எனது சிந்தனைக் கருவிலே வளர்ந்தது. முதல் நாள் இரவு தூக்கத்தை விலை கொடுத்துத் திரட்டிய அந்தக் கதைக்கு மறுநாள் காலை காகிதத்தில் உருக்கொடுக்க ஆரம்பித்துவிட்டேன்.

கதை எழுதி முடிவதற்கும், நீலா என்னைக் குளிக்க அழைப்பதற்கும் சரியாக இருந்தது. ஆபீஸிலிருந்து வந்ததும் அதற்கு நகாசு செய்து பத்திரிகைக்கு அனுப்பலாம் என்று மற்ற வேலைகளைக் கவனிக்க எழுந்தேன்.

மாலை வீடு திரும்பும்போது நீலா என்னை மௌனமாக வரவேற்றாள். அந்த மாறுதல் என் நெஞ்சில் ஏதோ ஒரு கேள்விக்குறியைச் சொருகியது. நான் ஒன்றையும் காட்டிக்கொள்ளாமல் அவள் கொடுத்த சிற்றுண்டியை அருந்திவிட்டுக் கதையை நோக்கி மேஜையை அணுகினேன்.

கதை அங்கு இல்லை. கற்பனை தங்கிநின்ற காகிதங்களுக்குச் சிறகு முளைத்து எங்கோ பறந்துவிட்டது.

நீலாவின் மௌனமும், கதையின் மறைவும் ஐந்து வருடங்களுக்கு முன் நடந்த சம்பவத்தைச் சுட்டிக்காட்டி என்னை ஏளனம் செய்தன.

"நீலா," வரம்பு நிலையாத ஆக்ரோஷத்துடன் சிதறி விழுந்தன என் வார்த்தைகள்.

என் கூப்பாடு அவளைப் போய் அடைவதற்கு முன்னமே கதையுடன் அவள் அறையில் நுழைந்தாள்.

"படிச்சா, படிச்சப்புறம் அதை இங்கேயே வைக்கிறதுதானே..."

"ஏன் இப்படி இறையறேள். ஆமாம், உங்களுக்கென்று கதை தோணித்தே"

"அதுக்கு என்ன குறைச்சலாம்... நீலா வேணுமின்னா மனசை விட்டு இப்பவே சொல்லிவிடு. நான் காதலைப்பற்றியே எழுதலை இன்னு சத்தியம் செய்து கொடுத்துடறேன்"

"அப்படி உங்ககிட்டே சத்தியம் வாங்கிக்கொண்டா கூடத் தேவலை போலத்தான் தோணறது. ஏன்னா உங்கள் கதையில் வரும் நாகராஜனுடைய காதல் மஜ்னுவுடைய காதலைக்கூடத் தோற்கடிச்சுடுத்தோன்னோ—"

வாழ்க்கையில் நடராஜனாக உலாவுபவன்தான் "கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே தவிர யாரையும் குறிப்பிடுவன அல்ல" என்றதற்கு உட்பட நாகராஜனாக மாறியிருந்தான்,

"நீலா, எந்த மஜ்னுவாக இருந்தாலும் இப்பேர்ப்பட்ட துரோகத்திற்குப் பின்னும் கூட எந்த லைலாவையும் காதலித்திருக்கமாட்டான்,"

நாகராஜனுக்கு அவன் காதலித்த கமலா செய்த துரோகம் பத்திரிகையில் பதினைந்து பக்கங்களுக்குக் குறையாமல் அச்சுக்கு வரும் நீளத்திற்கு ஓடியிருந்தது.

மேற்கொண்டு எங்களுக்குள் தொடர்ந்த பேச்சுகள் அந்தக் கதையின் முடிவை ஒட்டியிருந்ததால் கதையைச் சொல்லி விடுவது நலம்.

'நாகராஜன் காதல்' நீளமானது. அது கொண்டு அதை அப்படியே சொல்ல இயலாது. ஆகையால், பல மொழிகளில் மணக்கும் இலக்கிய மலர்களைத் தொடுத்துக் கதம்பமாகத்தரும் பத்திரிகையில் உள்ள 'புத்தகச் சுருக்கம்' முறையைத்தான் கையாளவேண்டும். சுருக்கம் பின்வருமாறு.

## 4

மேட்டிலிருந்து பள்ளத்தில் இறங்கிய சக்கரங்கள் வண்டியையும், அதன் உள்ளே இடிந்து உட்கார்ந்திருந்த நாகராஜனையும் ஒரு தரம் குலுக்கிவிட்டன.

பின்மண்டையில் 'நொக்' என்று தாக்கிய மரக் கட்டையைவிடப் பூதலூர் அக்கிரகாரத்தில் வாத்தியார் கோடீசுவரய்யர் வீட்டிலிருந்து சீறி வந்த கொட்டுமோளத்தின் இடிகள் அவனது மூளையையே அதிரச்செய்தன.

திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் ஸயன்ஸ் எல். டி. கோடீசுவரய்யரின் பெயர் காரணப்பெயராகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்துவிட்டான் நாகராஜன். "ஆமாம், கமலாவைப் போன்ற பெண்ணைப் படைத்தவனைக் கோடீசுவரன் என்று என்ன, குபேரன் என்றாலும் தகுமே" என்று எண்ணியது எப்போதோ கமலாவிடம் சரணடைந்துவிட்ட அவன் காதல் இதயம்.

புது நாணயம் போன்ற அவளது மேனியின் பளபளப்பு. காசைப் போன்று நிலையற்று

மருண்டு எத்திக்கிலும் பாயும் விழிக்கோணங்கள். கமலா அவன் வாழ்வின் செல்வம்.

திருக்காட்டுப்பள்ளிப் பள்ளிக்கூடத்திலேயே படித்துவந்த நாகராஜனுக்கு விஞ்ஞானப் பாடத்தில் அடிக்கடி சந்தேகம் முளைத்து வந்ததற்குக் காரணம் கூறத்தேவையில்லை! அதை வியாஜமாகக்கொண்டு கோடீசுவரய்யர் வீட்டிற்கு அடிக்கடி அவன் வருவது முன்னேறி அவரிடம் ரசிப்பதற்குவேண்டிய முக்கிய உடைமையான கமலாவின் இதய வாயிலிலும் நுழைந்துவிட்டான்!



கமலா-நாகராஜன் காதல் அவர்களை ஒருவரும் பார்க்காதபோதெல்லாம் அல்லது அவர்கள் தங்களை ஒருவரும் பார்க்கவில்லை என்று அறிந்தபோதெல்லாம் நாளொரு புன்சிரிப்பும் பொழுதொரு கண்சிரிப்புமாக வளர்ந்துவந்தது.

நாகராஜனிடம் தலைதூக்கிய விஞ்ஞானச் சிக்கல்கள் அதே ரீதியில் அந்தத் தெருவில் உள்ள மாஜிஜட்ஜ் மாத்ருபூதமய்யர் திருக்குமாரன் தியாகராஜனிடமும் வாலை ஆட்டிப்பார்த்தன.

ஆனல் தியாகு ஒருபடி மேலேயே போய்விட்டான். கோடீசுவரய்யரை அவனுக்கு 'ட்யூஷன்' வாத்தியாராகவும் ஆக்கிக்கொண்டு, அவனது விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடைபெற ஆரம்பித்தன,

நாகராஜனுக்கு இதனல் தொல்லை, கமலாவின் கைவளைகள் அறைக்குப்பக்கத்தில் இப்போது அடிக்கடி சிரித்தொலிப்பது கிடையாது. ஆனல் தியாகு மாத்திரம் நாளுக்குநாள் அதிக மலர்ச்சியுடன் காணப்பட்டான்.

நாட்கள் ஆக ஆக கோடீசுவரய்யருக்குக் கமலாவின் திருமண விஷயமாக யோசனைகள் எழுந்தன.

அவருக்குத் தம்கையில் வெண்ணெய் இருப்பது தெரியும். அநாவசியமாக எந்தக்கோயம்புத்தூர் நெய்யையும் தேடி, ஜாதகக்கட்டைத் தூக்கிக்கொண்டு அலையவில்லை. ஆம், பெரிய இடத்துப் பிள்ளையான தியாகுவைத்தான் புள்ளி போட்டிருந்தார்.

நாகராஜனுக்குக் கோடீசுவரய்யரின் முடிவுகள் தெரியவந்தன. அவன் மனம் தன் ஒரே தடையான ஏழ்மையைக் கண்டு நொந்துகொண்டது. எப்படியும் கமலாவிடம் அதற்கு உள்ள பிரதிபலிப்பையும் அறிந்துவிடவேண்டும்.

நாகராஜன் அவள் வீட்டை அடைந்தபோது வாத்தியார் வெளியில் போயிருந்தார். சற்று நேரத்தில் வந்துவிடுவார் என்று தெரிந்தது. சரியான சமயம் என்று எண்ணியவனுக, அவருக்காகக் காத்திருக்கும் பாவனையில் உள்ளே போய் அவர் அறையில் அமர்ந்தான், நாகராஜன்.

கமலா அந்தப் பக்கம் வருவாள்போல் தோன்றவில்லை. சரி; அங்கு அறையில் உள்ள ஏதாவது புத்தகத்தையாவது எடுத்துப் படிக்கலாம் என்று மேஜையை அணுகிய நாகராஜனது கண்களில் கமலா வாசிக்க வைத்திருந்த நாவல் புத்தகம் பட்டது.

எடுத்துப் பிரித்தான் நாகராஜன்? அது நாவல் புத்தகமா? அல்லது பாம்பு இருக்கும் பெட்டியா? பெட்டியிலிருந்து சீறி எழுகிற நாகம்போல அதன் உள்ளே இருந்து விழுந்த கடிதம்...கமலாவிற்குத் தியாகுவிடமிருந்து வந்திருந்த காதற் கடிதம்......

அது அவனது மனத்திலே விஷத்தைக் கக்கி விட்டது.

"அடி, பாவி! உன் காதலெல்லாம் பாசாங்கு தானு? தியாகுவின் பணத்தையா கலியாணம் செய்துகொள்ளப்போகிருய்? இந்த முடிவுக்குத் தான் உன்கண்கள் என்மேல் வாளென வீசினவோ?—"

நாகராஜன் கமலாவிற்கு எழுதிய அந்தக் கடிதத்தில் வாழ்விழந்தவனது வரையற்ற வெறுப்பும், சோகமும் தொனித்தன.

அவன் எண்ணிய முடிவை ஆமோதிப்பதுபோல் கமலா-தியாகராஜனின் கல்யாணம் ஏற்பாடாகியது.

நாகராஜனின் காதல் தூங்க ஆரம்பித்தது. சகுந்தலை, லைலா, ஜூலியட் பெருமைப் படுத்திய பெண் குலத்தில் கமலாவின் தோற்றம் ஒரு நீக்க முடியாத மாசு.

நாகராஜன் பூதலூரை விட்டுக்கிளம்பும் எண்ணத்துடன் ரயிலடியை அணுகிக்கொண்டிருந்தான். அக்கிரகாரத்தில் கமலா—தியாகராஜன் கல்யாண ஊர்வலத்தில் எழுந்த கொட்டுமேளம் அவன் மனதிலே 'விண்'ணென்று எதிரொலித்த வண்ணம் இருந்தது.

## 5

யாரனைக்கும் அடி சறுக்காதா என்ன! நாமே நமக்குத் தெரியாமல் கதையில் ஏதேனும் உளறிக்கொட்டிவிட்டோமோ என்று இன்னுமொருமுறை படித்துப் பார்த்த எனக்கு அப்படி ஒன்றும் தெரியவில்லை.

"நீலா, எனக்கு இதிலே தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே" என்றேன்.

"அது போகட்டும். இது முழுக்க உங்கள் கற்பனையா அல்லது..."

"ஏன்? என் சிநேகிதன் நடராஜனுடைய கதையைத்தான் எழுதியிருக்கிறேன்."

"சரிதான் மனுஷன் ரொம்ப நம்பிக்கை இல்லாதவராக இருக்கணும். அந்த மனுஷனுடை சந்தேக புத்திக்கு, பாவம், எங்க சாரதாதானு அகப்பட்டாள்?"

நீலா கமலாவைத்தான் சாரதா என்று குறிப்பிடுகிருள் என்று தெரிந்துகொண்டு, "அவளை உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன்.

"அவள் கடலூரிலே கொஞ்சநாள் இருந்தாள். அப்போ என்னேடே ரொம்ப ஒட்டு. அவ தன் கதையெல்லாம் எங்கிட்ட சொல்லிருயிக்கா."

"அப்படீன்னு, கமலா—"

"ஆமாம், அவள் தங்கமான பெண். முழுக்கக் கேளுங்கோ தெரியும்"

"சொல்" என்று சுவை கொட்டிக்கொண்டு உட்கார்ந்தேன். நீலா ஆரம்பித்தாள். அவள் உண்மையில் நடந்ததைச் சொன்னதால் கமலா, நாகராஜன், தியாகு இவர்கள் முறையே சாரதா, நடராஜன், மகாதேவனாக வருகிருர்கள்:—

சாரதாவுக்கு நடராஜனைக் கலியாணம் செய்துகொள்ளத்தான் ஆசை. ஆனல் அவள் தங்



தைக்கு அவளைப் பணக்காரப் பிள்ளை மகாதேவனுக்குக் கொடுக்க எண்ணம் இருந்தது. அது தவிர அவள் அவரிடம் காதல் கீதல் என்றெல்லாம் வாதாடினால் அதற்குக் கத்தரிக்காயின் மதிப்புக்கூட இருக்காது. பார்க்கப்போனால் இந்தமாதிரி விஷயங்களெல்லாம் 'தத்தாரி' களுடைய விஷயங்கள் என்று வெறுப்பவர் அவர்,

சாரதா தன் தந்தையின் இத்தகைய 'ஆண்டி லவ்' மனப்பான்மையைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டு தன் காதலை வெற்றி பெறச்செய்ய ஒரு தந்திரம் செய்துவைத்தாள்.

அதன்படி தன் நாவல் புத்தகத்தில் மகாதேவன் எழுதினாற்போல் தனக்கு ஒரு காதற் கடிதத்தை எழுதி, அதைத் தன் அப்பாவின் கண்ணில் படும்படியாக அந்தப் புத்தகத்துடன் மேஜையில் வைத்துவிட்டாள்.

'அவர்' மகாதேவன் கடிதத்தைப் பார்ப்பார். அவருக்கு அது பிடிக்காது. உடனே அந்த வரன் ரத்தாகிவிடும். பின்பு நமக்கு ஜயம்தான் என்பது சாரதாவின் எண்ணம்.

ஆனால் அதற்குள்தான் நாகராஜன் அதைப் பார்த்துவிட்டான். கதையே மாறிவிட்டது.

* * *

நான் இடைமறித்தேன். "அப்படி நீ சொல்லுகிறதுபோல் என்றால் சாரதா ஏன் மகாதேவனைக் கலியாணம்செய்துகொள்ளவேண்டும்?"

"அங்கேதான் நீங்களும், நடராஜனும் நினைக்கிறதுபோல் உலகமே அவளைத் துரோகி என்று முடிவுகட்டுகிறது. ஆனால் அவள் துரோகி அல்ல."

"பின் என்னவாம்?"

"அவளா, அவள் புதுமைப்பெண்"

நீலா ஆவேசமாகத் தொடர்ந்தாள்: பின் நீங்களே சொல்லுங்கள். ஒரு பெண்ணுக்கு யாராவது தடியன் ஒரு காதல் கடிதம் எழுதிவிட்டால் அதற்கு அவள் குற்றவாளியா? அது போகட்டும்; அவள் மகாதேவனையே கலியாணம் செய்துகொள்ளக்கூடிய முடிவுக்குக் கொண்டுவிட்டவன் யார்? நடராஜன் தான். இவ்வளவு நாட்களாக அவன்மேல் உயிரையே வைத்திருந்த சாரதையின் மேல் ஒரு நிமிஷத்தில் யோசனைகூடச்செய்யாமல் சந்தேகம் கொண்டது அவன் மனக்கோணல் தானே. அவள்மேல் அத்தனை நம்பிக்கைகூட இல்லாத அவன் நாளைக்குக் கலியாணம் செய்துகொண்ட பிறகு எப்படி நம்பப்போகிறான்? சாரதையின் முடிவும் இதுதான். அவளுக்கு இஷ்டமான அவனைத் தான் கலியாணம் செய்துகொள்ள வழியில்லை என்றாலும், தன் தகப்பனாருடைய இஷ்டத்தையாவது பூர்த்தி செய்யலாமே என்று மகாதேவனுக்கு மாலையிடச் சம்மதித்துவிட்டாள், இப்போது நீங்களே சொல்லுங்கள், சாரதா துரோகியா?"

நான் அயர்ந்துவிட்டேன். என் உள்ளம் சாரதையின் தீர்மானத்தை மெச்சியது.

கூடத்துத் தூளியிலிருந்து கண்ணன் குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டான்.

"குழந்தை எழுந்திருந்துட்டான், அவனுக்குப் பால் காய்ச்ச குமுட்டியைப் பற்றவைக்கணும். உங்களுடனேயே இத்தனை நாழி பேசிண்டு இருந்துட்டேனே" என்று அறையை விட்டு அடியெடுத்துவைத்த நீலா, "பழைய நியூஸ் பேப்பர் இருந்தா கொடுங்கோ. அடுப்பை மூட்டணும்" என்று கேட்டுத் திரும்பினாள்.

"செய்" என்று கையிலிருந்த 'நாகராஜன் காதலை' எரியவிட நீட்டினேன். அவள் அதைச் சிரித்தபடி பெற்றுக்கொண்டு கண்ணனை எடுக்க விரைந்தாள்.

"நாகராஜன் காதல்" எரிந்து கக்கிய புகை அடுக்களையிலிருந்து வர ஆரம்பித்தது.

மேஜையின் அருகே போய் உட்கார்ந்தேன். என் கையும் கருத்தும் சாரதையின் தீர்மானத்தை உருவாக்குவதில் முனைந்தன. ●


## காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள்நாடு ரூ. | அ. | பை. | மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| ஒரு வருஷம் | 6 | 0 | 0 | 7 | 8 | 0 |
| அரை வருஷம் | 3 | 0 | 0 | 3 | 12 | 0 |
| தனிப் பிரதி ஒன்றுக்கு | 0 | 8 | 0 | 0 | 10 | 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.




துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 184-50 TM



குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

# டோங்ரேயின் பாலாம்ருதம்



K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.



குணத்தில் சிறந்தது

# மைதீன் புகையிலை

தாம்பூலப் பிரியர்கள்
மிகவும் விரும்புவது

ட்ரேட் மார்க்
E. S. MYDEEN & CO
இ.எஸ்.மைதீன்
TRADE MARK
KUMBAKONAM

E. S. மைதீன் & கோ
கும்பகோணம்

# லண்டன் அனுபவங்கள்

**சி. வி. ராமகிருஷ்ணன்**

விதம் விதமான மோட்டார்களையும் சைக்கிள்களையும் பார்த்துவிட்டு, டும் ஆப் டிஸ்கவரிக்குள் நுழைந்தோம். அதற்குள் ஒலிபெருக்கியின் மூலம், "பிரிட்டனைச் சுத்தமாக வைத்துக்கொள்ள உதவி செய்யுங்கள்; குப்பைகளைத் தொட்டியில் போடுங்கள்" என்று சொல்வது காதில் விழுந்தது. இங்கும் நம் தோழர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டே உள்ளே சென்றோம்.

பெனிஸிலின், அமிலங்கள், மருந்துகள், சாயங்கள், பிளாஸ்டிக் பொருள்கள் முதலியன தயாரிக்கப்படும் விதம் காட்டப்படுகிறது. உலோகங்களில் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் சாதனங்கள் வைத்திருக்கிறார்கள். இன்னொரு பக்கம் மலைகளில் உள்ள 'கற்பதிவுகளி' (Fossils) லிருந்து அவற்றின் பூர்வீக அமைப்பைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம் என்று காட்டப்பட்டிருக்கிறது. ஒரு புறம் துருவங்களுக்கு யாத்திரை (Polar expedition) போகும் விதம் போகும்பொழுது எடுத்துச்செல்லவேண்டிய உணவு, உடுப்பு முதலியன காட்டப்பட்டிருக்கின்றன. மாடியில் ஓரிடத்தில் நவக்கிரகங்கள் மாதிரி உருண்டைகள் செய்து வைத்திருக்கிறார்கள். உள்ளே சென்றால் அவை எப்படித் தோற்றமளிக்கும் என்பதைச் சினிமா ஸ்லைட்கள் மூலம் காட்டுகிறார்கள். இப்பொழுது பத்திரிகைகளில் அடிக்கடி சந்திர உலகத்துக்குப் பிரயாணம் செய்வதைப் பற்றிய செய்திகள் வருகின்றன. அது எப்படியிருந்தாலும் எக்ஸிபிஷனில் நாங்கள் சந்திரலோகம் செல்வதன் அனுபவத்தை அடைந்துவிட்டோம்! சந்திரலோகத்திலிருந்து பார்த்தால் கிரகங்கள் எப்படித் தோன்றும் என்று காட்டும்படி கிரகங்களின் மாதிரி உருண்டைகள் வைத்திருப்பதுடன் நாம் உள்ளே இருட்டில் செல்லும் பொழுது சந்திரலோகத்திலிருப்பதாகவே தோன்றுகிறது. இன்னுமோரிடத்தில் அணுகுண்டு தயாரிப்பது பற்றியும் அணு சக்தியை உபயோகித்து, அடோமிக் பைல் (Atomic Pile) என்னும் கருவியைச் செய்வதுபற்றியும் காட்டியிருக்கிறார்கள். 'காஸ்மிக்' ஒளிக் கதிர்களை ரேடார் மூலம் பார்க்கும்படி செய்திருக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் விஞ்ஞானத்தின் அற்புத சாதனைகளையெல்லாம் படிப்படியாகவும் தெளிவாகவும் காட்டியிருக்கும் இந்த எக்ஸிபிஷன் மிகவும் பாராட்டத்தக்கது.

எக்ஸிபிஷனை எவ்வளவு நேரம் பார்த்தாலும் சலிக்காதுபோல் தோன்றியது. ஆனால் எங்களுக்கு நேரமில்லாத குறை. எக்ஸிபிஷனைவிட்டு மற்ற இடங்களைப் பார்க்கச் சென்றோம். தேம்ஸ் நதிக்கரையிலுள்ள பாட்டர் ஸீ பார்க்கைப் பார்க்கச் சென்றோம். போகும் வழியில் அநேக பாலங்களைப் பார்க்க முடிகிறது. இவற்றுள் மிகப் பிரசித்தமானது லண்டன் பிரிட்ஜ். வழியில் பார்லிமெண்ட் ஹௌஸ், கண்ட்ரி ஹால் முதலியவற்றைப் பார்த்தோம். கடைசியாக, 'பாட்டர்ஸீ பார்க்'கை அடைந்தோம். இங்கே பிரிட்டன் திருவிழாவையொட்டி ஒரு நந்தவனம் அமைத்திருக்கிறார்கள். பெஸ்டிவல் கார்டன்ஸ் என்று அழைக்கப்படும் இந்த இடத்தில் நடுவில் ஒரு பௌண்டினும் சுற்றிலும் அழகிய மரங்களும் இருக்கின்றன. பௌண்டினைச் சுற்றி பாம்பே ஷோ!!! இது ஒரு பெரிய பணம் பிடுங்கும் இடம் என்று நுழைந்தவுடன்தான் தெரிந்தது. ஒரு வளையத்தைப் பணம் கொடுத்து வாங்கி அதைப் பந்தாலோ அம்பினாலோ குறி தவறாமல் அடிக்கவேண்டும். அப்படி அடித்தால் நமக்குப் பணம் உண்டு. அடிக்காவிட்டால் போட்ட பணம் போனதுதான்! குறி எப்படிச் சரியாக இருக்கும்? ரங்கராட்டினம், ஏரோப்ளேன் ராட்டினம் முதலியன வேறு இருக்கின்றன. மரத்திற்கு மரம் பாலங்கள் இருக்கின்றன. அவற்றின் மேல் நடக்க ஒரு ஷில்லிங்! தங்கப் பல்லியையும், வெள்ளிப் பல்லியையும் தொடுவதற்குப் பணம் வசூலிக்கும் கோவில் அதிகாரிகளையும் தோற்கடித்து விடுவார்கள் போல் இருக்கிறது. இந்த இடம் நமக்குச் சரியல்ல என்று தீர்மானித்து, இங்கிருந்து திரும்பவும் பிக்காடிலி ஸர்க்கஸுக்குச் சென்றோம். சரியாக எக்ஸிபிஷன்கள் காலத்தில் இங்கிலாந்துக்கு வந்திருந்த எங்களை இங்கேயும் ஒரு எக்ஸிபிஷன் (பி. பி. ஸி. எக்ஸிபிஷன்) வரவேற்றது! பிரிட்-

டனில் ஒலிபரப்பும் கம்பெனி ஆரம்பித்த விதம், அங்கு எவ்வளவு பாஷைகளில் ஒலிப் பரப்புகிறார்கள், ஒலிப்பதிவுகள் செய்யும் விதம் எல்லாவற்றையும் இங்கே காட்டியிருக் கிறார்கள். டெலிவிஷன் மூலமாக நாம் எப் படித் தெரிவோம் என்பதை நாமே பார்க் கும்படி அமைத்திருக்கிறார்கள். இந்த எக்ஸி பிஷனைப் பார்த்து முடிந்ததும் ஹோட்டலுக் குத் திரும்பிவிட்டோம். நாள் முழுவதும் சரியான அலைச்சல், உடனே தூக்கம் வரு வதற்குக் கேட்பானேன்.

லண்டனில் கடைசி நாள். காலையில் எழுந் தவுடன் சிற்றுண்டி அருந்திவிட்டு, லண்டன் யுனிவர்ஸிடிக்கு அருகிலுள்ள பிரிட்டிஷ் மியூ ஸியத்திற்குச் சென்றோம். பிரமாண்டமான மியூஸியம். இங்கு சைனா, இந்தியா முதலிய இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பீங்கான் பாத்திரங்கள், தந்த சாமான்கள், ஜோத்பூர் வர்ணம் தீட்டப்பட்ட பிளேட்டுகள் முதலி யவை காணப்படுகின்றன. எகிப்திய ஹாலில் எகிப்திய சாமான்களும் சித்திரங் களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு முக்கியமாக 'மம்மி'களைப் பார்க்கலாம். கெய் ரோவில் பிணங்களைக் கெடாமல் வைத்திருப் பது பற்றி ஏற்கனவே குறித்திருந்தேன். அவற்றை 'மம்மிகள்' என்று சொல்கின் றனர். அவை எப்படிக் கெடாமல் பாதுகாக் கப்படுகின்றன. என்று இங்கே காட்டுகிறார் கள். பிணத்தை நன்றாகக்கட்டி அது சரி யாகக் கொள்ளும்படி ஒரு பெட்டி செய்து அதில் வைத்துவிடுகிறார்கள். பெட்டிக்குள் அடக்கமானவுடன் பிணம் மறு பிறவி எடுப் பதாகப் பண்டைய எகிப்தியர்களின் நம் பிக்கை. இம்மாதிரி பெட்டி, பெட்டியிலிருந்து எடுத்த பிணம், பெட்டியில் கட்டிய பிணம் எல்லாம் மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக் கின்றன. பெட்டிக்குள் காற்றுப் புக வழியில் லாததால் பிணம் அப்படியே அமுங்கியிருக் கிறதேயொழிய, கெடவில்லை. ஒரு பெண் ணின் பிணத்தை மார்புகூடக் கட்டு விடாமல் இருக்கும்படி வைத்திருக்கிறார்கள். இம்மா திரி பிணங்களைக் காப்பாற்றி வைத்திருப் பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. கெய்ரோவின் பிரமிட்டுகளை உலக மகா அதி சயங்களுள் ஒன்றாக மதிப்பதில் ஆச்சரிய மென்ன! மற்றும் கல்லால் செய்யப்பட்ட குளிக்கும் தொட்டி, நூறடி உயரம் கொண்ட பிரம்மாண்டமான கல்லால் ஆன மனித உரு வம் முதலியன வைக்கப்பட்டிருக்கின்றன.

மியூஸியத்திலிருந்து பாங்குத்தெருவுக்குச் சென்றோம். இங்கே லண்டனின் முக்கிய மான பாங்குகளெல்லாம் இருக்கின்றன. நாணயம் அச்சிடும் இடம் ராயல் எக்ஸ் சேஞ்சு இங்குத்தான் இருக்கிறது. இங்கே யிருந்து ஸெய்ண்ட்பால் கதீட்ரலுக்குச் சென் றோம். இது உலகத்தில் புகழ் பெற்ற மாதா கோவில்களுள் ஒன்று. இங்கிலாந் திலிருந்து இந்தியாவுக்கு வந்திருந்த என்நண் பர் ஒருவர் இக்கோவிலை வெகுவாக வர்ணித் ததிலிருந்தே இதைப் பார்க்கவேண்டும் என்று எனக்கு மிகவும் ஆவலாக இருந்தது. அதைப் பூர்த்திசெய்துகொள்ளும் சந்தர்ப் பமும் இப்பொழுது வாய்த்தது. நம் நாட் டில் காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோவில் பிராகாரம் அவருக்கு இந்த மாதா கோவிலை ஞாபகப்படுத்தியதாம். இந்த மாதா கோவிலைச் சுற்றியுள்ள இடங்களெல்லாம் கடந்த யுத்தத்தில் குண்டு வீச்சினால் சேத மடைந்திருக்கும்பொழுது இது மாத்திரம் பழுதடையாமல் கம்பீரமாக நிற்பது ஆச் சரியமாக இருக்கிறது. இங்கிலாந்து அரசர் கள் இங்கேதான் புதைக்கப்படுகிறார்கள். உன்னத சிற்ப வேலைப்பாடுகள் அடங்கிய இக்கோவிலில் உலகத்திலேயே உயரமான விஷ்பெர்ரிங் கேலரி இருக்கிறது. பிரம் மாண்டமான இதன் கோபுரத்தை உள்ளே யிருந்து நோக்கினால் தலை சுற்றுகிறது! இது அமைப்பில் பீஜப்பூர் கோல்கும்பஸின் கோபுரத்தை ஒத்திருக்கிறது. இங்கே ஏதா வது பேசினால் இரகசியமாகப் பேசுவது போல் எதிரொலி கேட்பதனால் இதை 'ரக சியம் பேசும் கூடம்' 'விஷ்பெர்ரிங் காலெரி, என்று சொல்கிறார்கள். இங்கேயிருந்து அல்ட்விச்சுக்குச் சென்றோம். இங்கேதான் இந்தியா ஹௌஸ் இருக்கிறது. இந்திய ஹைகமிஷனர் ஆபீஸ் இங்கேதான் இருக் கிறது, மிக அழகான கட்டிடம், இதன் ஏழாவது மாடியில் இங்கு வேலை பார்ப்பவர் களுக்கும் இந்தியப்பிரயாணிகளுக்கும் உணவு விடுதி இருக்கிறது. ஒரு புறம் அவர்கள் கொண்டுவந்து பரிமாறுகிறார்கள். மற்றொரு பக்கத்தில் கியூவில் நின்று வாங்கிக்கொள்ள வேண்டும். இங்கே சாப்பிடும்பொழுது இங்கிலாந்திலிருக்கிறோம் என்பது மறந்து போய்விடுகிறது. தயிர் சாதம், சாம்பார் சாதம், அப்பளாம், வடாம் எல்லாவற்றை யும் ருசி பார்க்கும்பொழுது அயல் நாட் டிலிருக்கிறோம் என்ற நினைவு எப்படி வரும்! இந்தியா 'ஹௌஸ்' என்ற பெயர் பொருத்த மாக இருப்பதற்காகச் செய்திருக்கும் ஏற் பாடு போலும்! கோஹினூர், வீராசாமி கபே என்று இரண்டு ஹோட்டல்கள், இவற் றைத்தவிர இந்திய உணவு கிடைக்கும் இடங்

கள். ஆனால் விலை மிகவும் அதிகம். இந்தியா ஹௌசுக்குப் பெரும்பாலான இந்தியர்கள் சாப்பிட வந்துவிடுகிறார்கள். ஆகையால் இந்தியர்களை இங்குச் சுலபமாகச் சந்திக்கலாம்.

இங்கேயிருந்து மேடம் டுஸார்ட் பில்டிங்குக்குச் சென்றோம். இங்கிலாந்து மன்னர்கள், பிரதம மந்திரிகள் இவர்களுடைய சிலைகளைக் காணலாம். கிரிக்கெட் முதலிய விளையாட்டுகளில் பிரபலமடைந்த பெரிய ஆட்டக்காரர்களையும் சிலை உருவத்தில் பார்க்கலாம். அரசியல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஆட்டமும் என்று காண்பிப்பதற்குப் போலும்! தவிர, பிரசித்தமான உலகத்தலைவர்களின் சிலைகளையும் வைத்திருக்கிறார்கள், ஸ்டாலின், காந்தி, நேரு முதலியவர்கள் சிலைகள் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. சிலைகளைப் பார்த்தபின் கொலைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கோ என்னவோ ஹார்ரர்ஸ் என்ற இடத்தில் கொலை செய்து பெயர் பெற்ற கைதிகளின் சிலைகள், பழைய காலத்தில் தூக்கிலிட உபயோகப்பட்ட சாதனங்கள், கொலைகள் நடந்தவிதம் முதலியவைகளைக் காண்பித்திருக்கிறார்கள்!

இதற்குள் மணி நான்கு ஆகிவிட்டது. இரவு அமெரிக்காவுக்குப் பயணமாகவேண்டும், ஹோட்டலுக்குத் திரும்பி மூட்டை முடிச்சுகளைக் கட்டவேண்டும் என்ற நினைப்பும் வந்தது. இருந்தாலும் கடைசி நிமிஷம் வரை இங்கிலாந்தில் சுற்றுவதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பத்தை வீணாக்க மனம் வரவில்லை. நேராக டவர் பிரிட்ஜ் பார்க்கச்சென்றோம். இது தேம்ஸ் நதியின் முகத்துவாரப்பக்கத்திலிருந்து முதல் பாலம். இது கப்பல்கள் வரும்பொழுது இரண்டாகப் பிளந்து இரு பிரிவுகளும் மேலே செல்கின்றன. கப்பல்கள் கடந்தவுடன் மறுபடி பழைய நிலைக்கு வந்து விடுகின்றன. இதைப் பார்த்துவிட்டு இடது பக்கம் திரும்பியவுடன் அகழிகளால் சூழப்பட்ட ஒரு பெரிய கட்டிடம் தெரிந்தது. இதுதான் பிரசித்தி பெற்ற 'டவர் ஆப் லண்டன்' என்று தெரிந்துகொண்டோம். பழைய காலத்தில் அரசர்களைச் சிறை வைக்கும் இடமாக இது உபயோகப்பட்டது! இப்பொழுது இதை வெறும் காட்சியாக எக்ஸ்பிட் வைத்திருக்கிறார்கள். எட்டாவது ஹென்றியால் இங்குச் சிறை வைக்கப்பட்டு, பிறகு தூக்கிலிடப்பட்ட ஸர் தாமஸ் மோரின் ஞாபகம் வந்தது. ஷேக்ஸ்பியர் இதை ஒரு பெரிய நாடகமாகச் சித்திரித்திருக்கிறார். டவர் ஆப் லண்டனைப் பார்த்துவிட்டு, பல விதமாக யோசனை செய்துகொண்டே ஹோட்டலுக்குத் திரும்பினோம்.

பெட்டியைக் கட்டிக்கொண்டு நேராக ஏர் டெர்மினஸுக்குச் சென்றோம். சரியாக ஏழரை மணிக்கு எங்களை விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப் பஸ் வந்தது. வழக்கம்போல், கஸ்டம்ஸ் முதலிய விஷயங்களும் ஒருவாறு முடிந்தன. 'மானார்க்' என்ற பெயர்கொண்ட பிரம்மாண்டமான விமானத்தில் (ஸார் அட்ஸ் க்ரூய்ஸர்) ஏறி உட்கார்ந்தோம். விமானத்தின் பெயர் 'மானார்க்'. அதாவது 'அரசன்' என்று பார்த்ததும் எனக்கு ஒரு நண்பரின் நினைவு வந்தது. அவர் ஒரு முறை சென்னையிலிருந்து டில்லி செல்ல விமான நிலையத்திற்குச் சென்றாராம். விமானத்தின் பெயர் 'ஜடாயு' என்றிருப்பதைப் பார்த்ததும் ஏற்கனவே பயந்துகொண்டிருந்த அவருக்குக் கிலியே பிடித்துவிட்டதாம்! வர வர விமான விபத்துக்கள் அதிகமாகிக்கொண்டு வரும் இந்தக் காலத்தில் பெயர் வேறு இப்படி வைக்கவேண்டுமா என்று என்னிடம் அங்கலாய்த்துக்கொண்டார்!! எங்கள் விமானத்தின் பெயர் அவருக்குத் திருப்திமளித்திருக்கும் என்று நினைக்கிறேன்! பெல்ட்டைக் கட்டிக்கொண்டு இடங்களில் அமர்ந்தோம். காப்டன் பிரயாணிகளுக்கு வரவேற்புக் கூற விமானம் ரன்-எவேயில் ஓட ஆரம்பித்தது. நான் கண்ட லண்டனைப்பற்றி சிந்தித்துக்கொண்டேயிருக்கும்பொழுதே லண்டனுக்கு மேல் பறந்துகொண்டிருந்தேன். மங்கள ஆரத்தியுடன் உத்ஸவங்களை முடிப்பது போல லண்டன் காட்சிகளில் கடைசியாக நான் கண்டது ஸௌத் ஸீ பாங்க் எக்ஸிபிஷன் தீபாலங்காரந்தான். மேலேயிருந்து இதைப் பார்க்க வெகு அழகாக இருந்தது. விமானம் கிளம்புவதற்கு இரவு 9 மணி ஆகிவிட்டது. விமானத்தில் சுமார் அறுபது பிரயாணிகள் இருந்தார்கள். நாங்கள் எங்கள் ஸீட்டுக்களில் அமர்ந்தவுடன், "புகைக்கக் கூடாது, பெல்ட்டை இறுகக் கட்டிக்கொள்" என்று "நோட்டீஸ் போர்டு" அறிவித்தது. ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு இருபுறமும் உள்ள பெல்ட்டின் முனைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிக்கொண்டோம். பறப்பதற்கு முன் கொஞ்ச தூரம் ரன்-எவேயில் ஓடுகிறது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உயரக் கிளம்புகிறது. அரை மணிக்குள் 20000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தோம். அதற்குப் பின் பெல்ட்டுகளை அவிழ்த்துவிட்டோம் சிகரெட் அன்பர்கள் விமானம் மேலே

199335

பறக்க ஆரம்பித்தபின் தாராளமாகப் புகைக்கலாம்! விமானத்தில் காற்றின் அமுக்கத்தை ஒரே சீராக வைத்திருப்பதால் உயரத்தில் பறப்பது தெரியவில்லை. லண்டன் நகரம் முழுவதையும் மேலேயிருந்து பார்க்கமுடிந்தது. மணிக்கு சுமார் 300 மைல் வேகத்தில் 20000 அடி உயரத்தில் சென்றுகொண்டிருந்தபோதிலும் பூமியில் போவது போலத்தான் இருந்தது. ஒவ்வொருவர் நாற்காலிக்கும் முன்னுல் ஒரு மேஜை போட்டு அதில் ஒரு 'ட்ரே'யில் சாப்பாடு கொணர்ந்து வைத்தார்கள். அவரவர்கள் உட்கார்ந்த இடத்திலிருந்தபடியே சாப்பிட முடிகிறது. இரவு 12 மணிக்கு விமானத்திலேயே சொருகியிருக்கும் பலகைகளை வெளியே இழுத்து அதில் படுக்கைகள் போடுகிருர்கள். இந்த வசதிக்கு அதிகப்படி கட்டணம் உண்டு. க்ஷவரம் செய்துகொள்ள இடம், குளிர்ந்த நீர், வெந்நீர் முதலிய வசதிகள் இருக்கின்றன. சீட்டு விளையாடுவதற்கு ஒரு தனி இடம் இருக்கிறது. விமானம் இங்கிலாந்திலிருந்து வடக்காக ஐஸ்லாந்துவரை சென்றுவிட்டு, பின் அமெரிக்காவை நோக்கிச் செல்கிறது. ஆகையால் வழியில் ஸ்காட்லாந்தைப்பார்க்க முடிகிறது. ஐஸ்லாந்தில் 'ப்யூல்' (Fuel) போடுகிருர்கள். ஐஸ்லாந்தில் இறங்கிப்பார்த்தேன். அதன் பெயர் முழுவதும் உண்மை. சுற்றி எங்குப் பார்த்தாலும் பனிக்கட்டி. குளிர் நடுக்குகிறது. என்னருகில் பாகிஸ்தான் அயல்நாட்டு மந்திரி ஜப்ருல்லாகான் உட்கார்ந்துகொண்டிருந்தார். பத்திரிகைகளில் இவர் பேச்சுகளைப் படித்துப் பகிரண்டப் புளுகன் என்று முடிவு கட்டியிருந்த எனக்கு இவர் பழகுவதற்கு மிகவும் நல்ல மாதிரியாகத் தோன்றினர்!

காலை ஒன்பதரை மணிக்கு நியூயார்க் போரம்ச் சேர்ந்தோம். அமெரிக்காவில் நுழைவதற்கு முன் 8 டாலர் தலைவரி (ஹெட்-டாக்ஸ்) கட்டவேண்டும். வழக்கம்போல் 'கஸ்டம்ஸ்' பரிசோதனை முடிந்தவுடன் ஒரு டாக்ஸி வைத்துக்கொண்டு நியூயார்க்கிலிருந்து 2000 மைல் தூரத்திலுள்ள மேன்-ஹெட்டன் என்ற இடத்திலுள்ள ஒரு ஹோட்டலுக்குச் சென்ருேம்.


இனும்! இனும்!! இனும்!!



எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்துபோவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், வளரச்செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—15—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும் மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிருேம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனும். அங்கீகரிக்காமல் போனுல் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

**AMRIT PHARMACY (c. k.)**

**JULLUNDUR CITY.**

# சினிமாப் பகுதி

**கண்ணன்**

## வேலைக்காரன்

வெளியூர்களில் சுற்றிவிட்டுச் சாவகாசமாகச் சென்னைக்கு வந்திருக்கும் ஸ்ரீ வள்ளி ப்ரொடக்ஷன்ஸாரின் "வேலைக்காரன்" மொத்தத்தில் மிகச் சுமாராகவே இருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருப்பினும் பெரும்பாலும் கதையமைப்பையே முக்கிய காரணமாகச் சொல்லவேண்டும்.

படத்தைப் பார்த்தபின் V.K. ராமசாமியின் அநாயாசமான நடிப்பும், "தீயை வைக்கும்" சொற்களும் தான் மனதில் பதிந்திருந்தன.

கதை வெற்றிகரமானதாக அமைய வேண்டுமானால் அதன் ஒவ்வொரு அம்சமும், கதையின் அடிப்படையான நோக்கத்திற்கு அனுசரணையாக இருக்கவேண்டும். அப்படியில்லாமல் பல்வேறு சம்பவங்கள் பல்வேறு உணர்ச்சிகளைக்கிளப்பிவிடுவதாக இருந்தால் மொத்தத்தில் ரசிகர்களுக்குச் சலிப்புத்தான் ஏற்படுகிறது. இதே காரணத்தினால்தான் தற்காலத்தில் பெரிய நாவல்களைவிட ஒரு சம்பவத்தையோ, அல்லது உணர்ச்சியையோ அடிப்படையாகக்கொண்ட சிறு கதைகளுக்குத் தனி ஆதரவு ஏற்பட்டு, வாசகர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றது.

"வேலைக்காரனி"ல் வரும் சம்பவங்களோ ஒரே கதம்பமாக இருக்கின்றன. ஆரம்பித்த சிறிது நேரத்திற்குள் வீரப்பன் என்கிற வேலைக்காரன் இறக்கும் தறுவாயில் இருக்கும் தன் தாய்க்கு எஜமானன் சுந்தரேச முதலியாரின் கொடுமையினால் பணிவிடை செய்யாமல் போவதும், வீணே திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு ஜெயிலுக்கு அழைத்துப்போகப்படுவதும், அந்த விஷயம் தெரிந்ததும் தாய் உயிர் துறப்பதும் காட்டப்பட்டு விடுகின்றன. உடனே ஜெயிலில் இருந்து திரும்பின வேலைக்காரன் எஜமானனின் பேரில் பழிவாங்கும் நோக்கத்துடன் அவருடைய ஒரே பிள்ளையைத் திருடிச் செல்கிறான். இந்த "வேலைக்காரன்" நாளடைவில் செல்வம் படைத்த காண்ட்ராக்டராக மாறி, திருடி வந்த குழந்தைக்கு மோகன் என்று பெயர் வைத்து, மெடிகல் காலேஜில் படிக்கவைக்கிறான்.

இந்தக் கட்டத்தில்தான் டி. ஆர். மஹாலிங்கம், டாக்டர் மோகனாகத் தோற்றமளிக்கிறார்.

இது இப்படியிருக்க மகனையிழந்த சுந்தரேச முதலியாரின் மனைவி, மனோ வியாதியால் பீடிக்கப்படுகிறாள். ஒரு லேடி டாக்டரின் யோசனையின் பேரில் அநாதையாகத் தவிக்கும் ஒரு ஸ்திரீயின் மகளை வளர்ப்புப் பெண்ணாக வைத்துக்கொள்கிறாள். அந்த அநாதை ஸ்திரீ வாஸ்தவத்தில் சுந்தரேச முதலியார் மைத்துனரின் சம்சாரமான தங்கம் என்பவள். குழந்தையின் தாய் என்று தெரிவிக்கப்படாமலேயே தங்கம் முதலியார் வீட்டில் வேலைக்காரியாக அமர்கிறாள். வளர்ப்புப் பெண் கமலா பெரியவளானவுடன் சென்னைக்கு வைத்தியக் கல்லூரியில் படிக்க அனுப்பப்படுகிறாள். இந்தக் கட்டத்தில்தான் ஜி. வரலக்ஷ்மி மெடிகல் காலேஜ் மாணவியாகத் தோற்றமளிக்கிறாள்.

மெடிகல் காலேஜில் நடத்தப்படும் ஒரு நாடகத்தை ஒட்டி மோகனுக்கும், கமலாவிற்கும் நட்பு ஏற்படுகிறது. இவ்விஷயத்தை அறிந்த கமலாவின் தகப்பனார் அவளுடைய படிப்பை நிறுத்தி, தம் சொந்த ஊரான மதுரைக்கு அழைத்துச் செல்கிறார். காதலியின் பிரிவாற்றாமையைச் சகிக்காத மோகன் தன் தகப்பனாரின் அனுமதியின் பேரில் மதுரை சென்று சொந்த வைத்தியசாலை ஒன்று ஆரம்பிக்கிறான். அங்கே சுந்தரேச முதலியாரின் மனைவிக்கு வைத்தியம் செய்யப்போன பொழுது, அவன் தன் மகளின் காலேஜ் காதலன் எனத் தெரிந்துகொண்டு மோஹனை அவமானம் செய்து விரட்டிவிடுகிறார். இந்த நிலைமையில் மோகன் மீது அபாண்டமாகக் கொலைக்குற்றம் சாட்டப்பட்டுப் பிறகு உண்மை வெளியாகி, தப்புகிறான். அத்துடன் அவன் சுந்தரேச முதலியாரின் மகன் என்பதும், கமலா அவர் மைத்துனன் மகள் என்பதும் வெளியாகி, இரு காதலர்களுக்கும் கல்யாணம் நிறைவேறுகிறது.

முதலில் படத்திற்கு 'வேலைக்காரன்' என்று பெயர் வைத்திருப்பது பொருத்தமாக

இல்லை. படத்தின் தலைப்பிற்கு ஏற்ப இது ஒருவேலைக்காரனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கதையல்ல. படத்தில் வீரப்பன் வேலைக்காரனாக வரும் பாகம் மிகச் சிறியது. நடனத்திற்கும், பாட்டிற்கும், கொலைக்கும், விபசாரத்திற்கும், இடமளிக்கும் விதம் கதையின் பேர்க்குக் கொண்டுபோகப்படுகிறது. ஆகையால், நான் சொன்னவாறு கதையில் ஒரு ஒற்றுமையான அடிப்படையில்லாமல் சம்பவங்கள் சிதறிக்கிடக்கின்றன.

படத்தில் டி. ஆர். மஹாலிங்கம் வரும் சந்தர்ப்பங்கள் குறைவாக இருந்தும்கூட அவருடைய நடிப்பு வழக்கம்பேபல் ஏமாற்றத்தை அளிப்பதாகவே இருக்கிறது. மேலும் அவர் தம் நடிப்புத் திறமையைக் காண்பித்துக்கொள்வதாகச் சவால் கூறி, 'சுபத்ரா – அர்ச்சுனா'வில் நடிக்கும் கட்டம் மஹா மோசம். அவருடைய அரிய சாரீரத்தைப் பயன் படுத்திக்கொண்டு பாடும் ஓரிரண்டு பாடல்கள் நன்றாகவிருக்கின்றன.

கமலாவாக வரும் எஸ். வரலக்ஷ்மியின் நடிப்பும் வழக்கம்போவ் சுமாராகத்தான் இருக்கிறது. அவருடைய நாணல் கோணல்களும், கொச்சைப் பேச்சும் பார்ப்பவர்களுக்குச் சற்று ஆயாசத்தைக் கொடுக்கின்றன.

வீரப்பனாக வரும் S. V. சுப்பையா வேலைக்காரனாக நடித்திருப்பதைவிட வேலைக்காரனல்லாத பாகத்தில் நடித்திருப்பது சற்று நல்லது என்று சொல்லலாம். இவருடைய பேச்சிலும், நடிப்பிலும் இருக்கும் ஒருவித மிடுக்கு, கதா பாத்திரத்தின் திட சித்தத்தை நன்கு பிரதிபலிக்கிறது.

கற்பழிக்கப்பட்ட கன்னிப்பெண் மல்லிகாவாக மாதுரி தேவி நன்றாக நடிக்க முயன்றிருப்பினும் சந்தர்ப்பத்திற்கேற்பப் பார்ப்பவர்களின் மனதில் உணர்ச்சிகள் ஏற்படவில்லை. நான் முன்னொருதடவை எழுதியவாறு இவருக்குக் கல்நெஞ்சு படைத்த வஞ்சகி வேஷங்கள் பொருத்தமாக இருக்கின்றனவே ஒழிய உலகறியாத, பரிசுத்தமான உள்ளத்தையுடைய பெண்கள் பாகத்தில் இவருடைய நடிப்பு வெறும் 'நடிப்பா'கவே தென்படுகிறது. இவருடைய தோற்றமும், இயற்கையான பாவனைகளும் இம்மாதிரியான வேஷத்திற்குப் பொருத்தமில்லாமல் இருக்கின்றன.

எம். எஸ். திரௌபதிக்கு ஒரு சிறிய பாகமே கொடுக்கப்பட்டிருக்கிறது. கணவனைப் பிரிந்து அநாதையாகத் தவிக்கும் தங்கமாக நன்றாக நடித்திருக்கிறார். இவர் இது வரையில் நடித்திருக்கும் படங்களில் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் பாகங்களே பெரும்பாலும் கிடைத்திருக்கின்றன. இவருடைய நடிப்பு வேறுவிதமான பாகங்களில் நன்கு பிரகாசிக்கும் என்பதை இவருடைய நாடகங்களைப் பார்த்தவர்கள் ஆமோதிப்பார்கள்.

இந்தப் படத்தில் ரஸிகர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் நடித்திருப்பது சுந்தரேச முதலியாராக வரும் V. K. ராமசாமிதான். கருமி நெஞ்சம் படைத்த சீமானின் உள்ளத்தை நன்கு சித்திரித்துக் காண்பித்திருக்கிறார்.

கடைசியாக வில்லன் குமார் வேஷத்தில் பாலய்யாவின் நடிப்பு மிகையாக இருக்கிறது. எப்படிப்பட்ட 'வில்லனா' இருந்தாலும் இவர் பெண்களிடம் பேசிப் பழகும் விதம் ஆண்களுக்குக்கூட லஜ்ஜையையும் அருவருப்பையும் தருவதாக இருக்கிறது. இவர் செய்யும் கருச்சிதைவு போதனை அவ்வளவு பட்டவர்த்தனமாக இல்லாமல் மறைமுகமாகச் சொல்லப்பட்டிருந்தால் ரஸிகர்களுக்கு ஏற்படும் அருவருப்பைத் தடுத்திருக்கலாம்.

படத்தின் ஒலிப்பதிவு நன்றாக இருக்கிறது. ஜெயில், போலீஸ் ஸ்டேஷன், ஸீன்களில் கேவலம் அட்டைச் சுவர்களைக் காண்பிக்காமல் இருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

A. V. M. ஸ்டுடியோவில் எடுக்கப்பட்ட இப்படத்தை, P. V. கிருஷ்ணன் டைரக்ட் செய்திருக்கிறார்.




நீங்கள் எங்கிருந்தாலும்...

ஹிமாலயா புக்கெ ஸ்னோ உபயோகியுங்கள்.

ஏனென்றால் இது பிரத்தியேகமாக இந்தியாவின் சீதோஷ்ணத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டது

சீதோஷ்ண நிலை எப்படி இருந்தாலும்—இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், ஹிமாலயா புக்கெ ஸ்னோ உங்கள் சருமத்தை அதிக மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ளுகிறது. இதன் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.

இன்னுமொரு நேர்த்தியான இராஸ்மிக் தயாரிப்பு




HBS. 7-X30 TM

இராஸ்மிக் கம். லிட். லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.




உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான். தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

**மார்கோ சோப்**

டாய்லட் & மெடிஸினல்

**கல்கத்தா கெமிகல்**

CALCUTTA CHEMICAL

**ஜண்டு பார்மஸூடிகல் வொர்க்ஸ் லிமிடெட்.**




# "ஜண்டு கேஸரி ஜீவன்"

சகல ஆயுர்வேத மருந்துகளையும், இங்கிலீஷ் மருந்துகளையும் ஏராளமாக, சாஸ்திரோத்தமாக, தயாரிப்பவர்கள்

இது சாதாரண இருமல், ஜலதோஷம், ஆஸ்த்மா தொண்டைக் கம்மல், சுவாசகோச அழற்சியால் தோன்றும் இருமல் முதலியவைகளுக்குச் சிறந்தது. மேலும் இது வக்கீல்கள், உபாத்தியாயர்கள், நூல் ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு மூளைக்குத் தெளிவையும், ஞாபக சக்தியையும் அளிப்பதோடு தேகத்திற்கு, தேஜஸூம் வீரியவிருத்தியும் அளிப்பதில் சிறந்தது.

1 பவுன் 6—8—0   ½ பவுன் 3—6—0   ¼ பவுன் 1—13—0

எல்லா மருந்து வியாபாரிகளிடமும், அல்லது ஜண்டு பார்மஸி ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

சென்னை ராஜதானி ஏஜண்டுகள்:

**தாமோதர் அண்டு கோ,**

113, நயனியப்பநாயக்கன் தெரு சென்னை, 3.

# நாகரீகம் எங்கே?

ஜி.எஸ்.மணி

15

ஜோஸப்பிடம் மேல் நாட்டு நடனம் பயின்று வந்தாள் வனஜா. அதற்காகவென்று அவள் இந்திய உடுப்புகளையும் அப்போதைக்குக் கைவிடவேண்டியதாயிற்று! நடனமாடும் சமயத்தில் மட்டும் அதற்கேற்றபடி மேல் நாட்டு வழக்கத்தை அனுசரித்து உடையணிந்து கொண்டும், மற்றச் சமயங்களில் பாதி ஆங்கில வழியிலும், பாதி இந்திய வழியிலுமாக வனஜா காட்சியளித்துக்கொண்டிருந்தாள்.

நடன சமயங்களில் அவளைக்கண்ட கோபாலன் அப்படியே மெய்மறந்துவிட்டான்!

"அற்புதம் வனஜா! அதியற்புதம்! அசல் வெள்ளைக்காரியைக்கூடத் தோற்கடிப்பவளாக இருக்கிறாய்! உடல் நெளிவுகளுக்கும், லாவண்யத்திற்கும் அந்நாட்டு நாட்டியக்காரி உன்னிடம் பிச்சை கேட்கவேண்டும்!' என்று சொல்லி மகிழ்ந்தான் கோபாலன்.

தன்னைக் கந்தர்வலோகத்து அழகியாக மதித்துக்கொண்ட வனஜா கோபாலனின் புகழுரைகளைக் கேட்டுத் தானும் மெய்மறந்தாள்.

நாளடைவிலே வனஜா கர்ப்பவதியானாள்.

அதையுணர்ந்தபோது அவளுக்கே பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது.

அதை அவள் வெளியிட்ட விதம் கோபாலனுக்கும், அந்த நவீன வாழ்க்கையில் முதல் தடவையாக, பெரிய அதிர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது.

"என் வாழ்வின் முக்கியமான கட்டத்திலே, எனக்கு வயிற்றில் வந்துவிட்டதே, சனியன்! குழந்தை பிறக்கவில்லையென்று யார் அழுதார்கள்?" என்று வனஜா மிகவும் சலித்துக் கொண்டாள்.

அப்போதுதான் கோபாலன் அவள் பேச்சைக் கேட்டு முதல்தடவையாகத் திடுக்கிட்டான், அவள் மனப்போக்கின் விபரீதச் சாயை அப்போதுதான் அவனுக்கு மங்கலாகப் புலப்படத் தொடங்கியது. அவள் அபிப்ராயத்தை அவன் ஆமோதிக்கவில்லை.

"என்ன வனஜா! இப்படி சலித்துக்கொள்கிறாய்! அதது அந்தந்தக் காலத்தில் ஏற்படுவது நல்லதுதானே! குழந்தை பிறப்பதனால் என்ன மோசமாகிவிடும்?" என்று திகைப்புடன் கேட்டான்; உண்மையில் அவள் கர்ப்பிணியாய் இருப்பது அவனுக்கு ஆனந்தத்தையே கொடுத்தது.

"என்ன மோசமா? உங்களுக்கென்ன? நீங்கள் சொல்லிவிடுவீர்கள்! பெறுவது நீங்களா, நானா?" என்று கேட்டுக் கோபத்துடன் சீறினாள்.

கோபாலன் சிரித்தான், "பயப்படாதே வனஜா! பெண்கள் தாய்மையைப் பெறுவது இயற்கை நிகழ்ச்சிகளில் ஒன்றுதான்; அவர்களுக்கு அனுகூலமானதுதான்!' என்றான்.

வனஜா அவனைச் சுட்டுவிடுவதுபோல் பார்த்தாள். "பெண்களிடம்—நீங்கள் உங்கள் குணத்தைக் காட்டாமல் விடமாட்டீர்களோ? புருஷன் முரட்டுத்தனத்துக்கு விதிவிலக்கே கிடையாதோ?" என்று பொங்கினாள்.

"ஏன் இப்படிச் சொல்கிறாய், வனஜா?" என்று ஒன்றும் புரியாமல் திகைத்தான் கோபாலன்.

"ஏனென்று கேட்கிறீர்கள், வாய் கூசாமல்? நான் தாய்மை பெறுவதால் — ஸ்வாரஸ்யமான இந்தக் கட்டத்தில் என் இஷ்டங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தாகவேண்டும்! மனம்போல் போக முடியாது; வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கவேண்டும்; உடல் தளர்ந்துபோகும்; என் அழகு குன்றிப் போகும்; என் யௌவனம் தேய்ந்துவிடும்—இதையெல்லாம் அனுபவிப்பது நானா – நீங்களா? என்று குமுறினாள்; குரலில் அழுகை பயமுறுத்திக்கொண்டேயிருந்தது.

"அதனால் என்ன வனஜா? குழந்தை பிறந்து சிலநாள் ஆனபிறகு நீ மீண்டும் உன் வாழ்வைத் தொடங்கலாமே?"

"என்ன ஆரம்பித்தாலும் இப்போது இருக்கும் 'ஜோர்' வருமா? பிறக்கும் சனியனோடு சதா போராடிக்கொண்டேதானே இருக்கவேணும்?"

"என்னதான் செய்யவேண்டுமென்கிறாய், வனஜா?" என்று கோபாலனும் சற்று ஆத்திரத்துடன்தான் கேட்டுவிட்டான்! அவள் உள்ளம் அவனுக்குப் பெரிய புதிராகக் காணப்படலாயிற்று,

"அபார்ஷன் ஆக வழி பண்ணவேண்டும்!" என்று கொஞ்சமும் கூசாமல் சொன்னாள் வனஜா.

எதிர்பாராத இடி விழுந்ததுபோல் அவன் உணர்ந்தான். "என்னது?" என்று கூவினன் உள்ளத்தையே சுட்டுவிடுவதுபோல.

"ஆமாம்!" என்று மீண்டும் அழுத்திச் சொன்னுள் வனஜா.

கோபாலன் அயர்ந்துவிட்டான்; அவள் பிடிவாதத்தைக்கண்டு திகைத்துவிட்டான்; அவள் விபரீத மனப்போக்கைக் கண்டு மலேத்துவிட்டான்.

"வனஜா! வாஸ்தவமாகத்தான் சொல்லுகிருயா? விசித்ரமான உன் மனப்போக்கு விபரீதமாயும் இருக்கிறது. அநேகமாக ஆண்பிள்ளைகள்தான் இந்தமாதிரியெல்லாம் அர்த்தமில்லாமல் பிதற்றுவார்களென்று இதுவரையில் எண்ணியிருந்தேன்; தாய்மையை வெறுக்கும் மகா கொடிய சித்தமுள்ள ஒரு பெண்ணை இப்போதுதான், முதன் முதலாக, என் கண் முன்னே பார்க்கிறேன்! புருஷன் ஸந்ததியை விரும்பியும், பெண்டாட்டி தாய்மையை வெறுக்கும் அளவுக்கு வந்திருக்கும் இந்த ராக்ஷஸ நாகரிகம் வேண்டாமே?" என்று மனமுருக வேண்டினன்.

வனஜா தேம்பித் தேம்பி அழலானுள்.

சுசீலா வந்தாள்; தன் புடவைத் தலேப்பால் அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "என்ன மன்னி, இது! அசடு மாதிரி பேச்சும், அழுகையும்! உள்ளே வா, சொல்லுகிறேன்!" என்று வனஜாவை அணைத்துக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றுள்.

16

ஓரிடத்தில் இருப்புக்கொள்ளாமல் உட்காருவதும், உலாவுவதுமாக, எதையோ அறிந்துகொள்ளப் பேராவல் உள்ளவனுய், துடித்துக்கொண்டிருந்தான் கோபாலன்.

அவன் இருந்த ஹாலுக்குப் பக்கத்து அறையொன்றின் கதவு மூடப்பட்டிருந்தது. அறையினுள்ளே யார் யாரோ பரபரப்புடன் நடமாடுவதும், மெதுவான குரலில் பேசிக்கொள்வதுமாக ஒரே 'கசமுச'லாயிருந்தது.

சிறிது நேரத்தில் அந்த அறைக்கதவு இலேசாகத் திறக்கப்பட்டது; அந்த இடுக்கு வழியாக உள்ளேயிருந்து சுசீலா வெளிப்பட்டாள்.

வாயால் தெரிவிக்கமுடியாத ஆத்திரத்துடன் கோபாலன் அவளைத் தலைநிமிர்ந்து நோக்கினன்.

புன்னகை பூத்த வதனத்துடன் சுசீலா, "ஆண் குழந்தை, அண்ணு!" என்று தெரிவித்தாள்.

கோபாலன் அடைந்த ஆனந்தபரவசம் அவன் தேகமாத்யந்தம் தெளிவாகத் தெரிந்தது; "இருவரும் சௌக்யந்தானே?" என்று உள்ளத் துடிப்பை மறைக்கமுடியாமல் வினவினன்.

"கவலை வேண்டாம், அண்ணு! தாயும், குழந்தையும் ஸௌக்யமே!" என்று சொல்லிவிட்டு, சுசீலா மீண்டும் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டாள்.

கோபாலன் நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டான்; அவன் பரபரப்பு அடங்கி அமைதியடைந்தான். பிள்ளைப்பேறு பெற்றதில் அவன் உண்மையாகவே பெருமிதம் கொண்டான்.

'குழந்தை பிறந்த பிறகு வனஜாவின் மனப்போக்கு மாறிவிடும், அவள் பழைய வனஜாவாக மீண்டும் திருந்தி விடுவாள்' என்று மனப்பூர்வமாக நம்பினுள் சுசீலா.

ஆனல் வனஜா மாறவில்லை. அவள் போக்கு—அவளுடைய நாகரிகப் பைத்தியம்—மேலும் விபரீதமாகிவிட்டது.

தன் ஆரோக்யம் கெட்டுப்போகுமென்று சொல்லிக்கொண்டு, வெகுசீக்கிரத்திலேயே, தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்திவிட்டு, குழந்தையைக் கவனித்துக்கொள்ள ஒரு தாதியை ஏற்பாடு செய்துவிட்டாள் வனஜா. பழையபடி நாட்டியமென்றும், 'கிளப்' பென்றும், சொல்லிக்கொண்டு வெளியிலே திரியலானுள்.

சுசீலா அவளைப்பற்றி வாஸ்தவமாகவே கவலைப்படலானுள்; "பிள்ளையார் பிடிக்கப்போய், குரங்காய் முடிந்துவிட்டதே அண்ணு!" என்று கோபாலனிடம் சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டாள்.

ஆரம்பத்தில் வனஜாவின் மாறுதலைக்கண்டு ஆனந்தம் கொண்ட கோபாலனின் உள்ளம், இப்போது அவள் போகும் போக்கைக்கண்டு சஞ்சலப்படத் தொடங்கியது. ஆயினும் அவளைக் கண்டிக்கத் தைரியமின்றித் தவித்தான். முதலில் அவன் அவள் விஷயத்தில் காண்பித்த அக்கறையும் உற்சாகமும் இப்போது எவ்வளவோ குறைந்துவிட்டன; வனஜாவை மீண்டும் திருத்த வகை தெரியாமல் விழித்தான்.

"பெற்ற குழந்தையைக்கூடக் கவனிக்க மனமின்றி என்ன நாகரிகம் வேண்டிக்கிடக்கிறது!" என்று அவனே வெறுத்துக்கொண்டான்.

"உன் மனசைப் பெரிதாக எண்ணிக்கொண்டு அவள் நாகரிக வலையில் விழுந்தாள்; இப்போது தானே பெற்ற குழந்தையைக்கூட அவள் நாகரிகம் விழுங்கிவிட்டது!" என்றுள் சுசீலா.

"நாகரிக மோகம் அவள் பகுத்தறிவையே பறித்துக்கொண்டுவிட்டது! தாய்மை உணர்ச்சியைக்கூட வீழ்த்திவிட்டது! நீதான் அவளிடம் கொஞ்சம் சொல்லிப்பார்க்கக்கூடாதா சுசீலா?" என்று அவன் அவளைப் பார்த்துக் கெஞ்சினன்.

"நான் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்ரு எண்ணினாய் அண்ணா? எவ்வளவோ விதமாகச் சொல்லிப்பார்த்துவிட்டேன்; அவள் கேட்கவில்லை; ஒருநாளும் இல்லாதபடி என்னையே தூக்கியெறிந்து பதில் சொல்லுகிருள்! இந்தப் பிள்ளைப்பேறு முடிவதற்குள் அவள் எவ்வளவு பொருமிவிட்டாள்! என்னையும் எவ்வளவு வெறுத்துக்கொண்டாள்! அதையெல்லாம் உன்னிடம் சொல்லப்போனால்...?''...

"'அபார்ஷன்' வேண்டாமென்று சொல்லி நீ அவளோடு பட்டபாடு எனக்கே தெரியும்! சுசீலா! நீ ஒருத்தி இங்கே இல்லாவிட்டால் இந்தக் குடும்பம், என்றோ, சுக்கு நூருகிச் சிதறியிருக்கும்! உனக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன், சுசீலா'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னான் கோபாலன்.

''இப்போதெல்லாம் எனக்கு மன்னியிடம் பேசவே பயமாய் இருக்கிறது; நீதான் அவளிடம் பேசிப் பாரேன்?'' என்று சொன்னாள் சுசீலா.

''அபார்ஷனைப் பற்றி அவள் சொன்னதிலிருந்து எனக்கே அவளது விபரீதப் போக்கைப் பற்றிப் பயமாகத்தான் இருக்கிறது! இதெல்லாம் என் முட்டாள் தனத்தால் உண்டான விபரீதம் தானோ என்று இப்போது பயப்படுகிறேன்!'' என்று தலைகுனிந்தபடியே சொல்லிக்கொண்டான் கோபாலன்.

''நீ மறுபடியும் சொன்னால் மன்னி கட்டாயம் திருந்திவிடுவாளென்றே தோன்றுகிறது, அண்ணா!'' என்று பரிவுடன் பேசினாள் சுசீலா.

''பார்க்கிறேன்; நான்தான் அவளை நாகரிக வழியில் பிரவேசிக்கும்படி நிர்ப்பந்தித்தேன்; இப்போது நானே வேண்டாமென்று சொல்லிப் பார்க்கிறேன்!" என்று தனக்குள்தானே போல் பேசிக்கொண்டான் கோபாலன்.

17

வீட்டு வாசலில் காரிலிருந்து இறங்கினாள் வனஜா.

'டிரைவர்' ஸ்தானத்திலே அமர்ந்திருந்த ஜோஸப்பின் பக்கத்திலிருந்து வெகு குதூகலத்துடன் பேசிச் சிரித்துக்கொண்டே வனஜா காரிலிருந்து வெளிப்பட்டாள்.

அவளைப்பார்த்துப் பல்லைக் காட்டிக்கொண்டே ஜோஸப் என்னவோ சொல்லி, செல்லமாக அவள் தாடையிலும் தட்டினான். மேலும் 'கலகல' வென்று சிரித்துக்கொண்டே வீட்டிற்குள் நுழையத் திரும்பினாள் வனஜா.

ஜோஸப் காரை ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

அவ்வளவையும், எட்டியிருந்தபடி, தலைமறைவாகப் பார்த்துக் கொண்டேயிருந்த கோபாலனுக்கு முகமும், மனமும் ஏக காலத்தில் சுண்டிப் போய்விட்டன,

சிறுத்த முகத்துடனே அவன் வனஜாவை அண்டி, உள்ளத்து உணர்ச்சிகள் அனைத்தையும் அடக்கிக்கொண்டவனாய், ''எங்கே போய்விட்டு வருகிருய், வனஜா?'' என்று சாதாரணமாகக் கேட்பவனைப்போலே அவளை வினவினான்.

எல்லைக்குள் அடங்காத பெருமித உணர்ச்சியுடனே அவனை நேராக நோக்கினாள். ''கடற்கரையோரமாக 'ஆங்கிலே – இந்தியன்' 'கிளப்' ஒன்று இருக்கிறதல்லவா! அங்கே போய், 'பால்–டான்ஸில் கலந்துகொண்டோம்! நான் அதியற்புதமாக நாட்டியமாடுகிறேனும்! உங்கள் 'ஜோஸப்'பே எனக்கு 'ஸர்டிபிகேட்' கொடுத்துவிட்டார்! போதுமல்லவா? இப்போது உங்களுக்கும் திருப்திதானே? நாளையதினம் மாலையில் அந்த 'ஆங்கிலோ–இந்தியன் கிளப்'பில் என்னுடைய நாட்டியக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்வதாகவும் சொல்லியிருக்கிருர்! நீங்களும் வந்தால் பார்க்கலாம்!'' என்று மூச்சுவிடாமல் பேசினாள் - கங்குகரையற்ற குதூகலத்துடனே விளங்கினாள்.

கோபாலன் அவள் சொன்ன மற்றதைப்பற்றிக் காதிலே வாங்கிக்கொண்டதாகவே தெரியவில்லை. ''இன்று நீயும், ஜோஸப்புமாய் அங்கே போய் ஆடிவிட்டு வருகிறீர்களா?'' என்றுமட்டும் கேட்டான்.

''ஆமாம்?''

''நீ அவனுடன்தான் சேர்ந்து ஆடினாயா?'' என்பது கோபாலனின் அடுத்த கேள்வி.



"பின்னே யாருடன் ஆடுவது? நீங்களும் கற்றுக் கொண்டால் உங்களுடன் ஆடுவேன்!" என்று சொல்லிச் சிரித்தாள் வனஜா.

"நீ அவனுடன் ஆடுவதுமுறையல்ல, வனஜா!" என்று கூறிய கோபாலனின் குரலிலே அவனையும் மீறி, கண்டிப்பு ஒலித்தது.

அதைக் கவனித்துவிட்டாள் வனஜாவும்; அடுத்த க்ஷணமே அவளுடைய மலர்ந்த முகம் கோபத்தால் சிவந்தது. "ஏன்? அவர் என்னைத் தொட்டுவிட்டால் ஒட்டிக்கொள்ளுமோ?" என்று வெகு அலக்ஷியமாக அவனை வினவினாள்.

பொறுக்கமுடியாத சவுக்கடி விழுந்துவிட்டதைப் போலே அவன் உணர்ந்தான்; வாய் பேச வழியின்றி அவளை நோக்கி முறைத்தான்.

வனஜா மேலும் தொடர்ந்தாள்:— அன்று நான் உங்கள் நண்பர்களோடு கைகுலுக்க மறுத்துவிட்டதற்காக, 'தொட்டால் ஒட்டிக்கொள்ளுமோ?' என்று இதே கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்டீர்கள்; எல்லாருடனும் ஸகஜமாகப் பழகவில்லையென்று என்னை வெறுத்தீர்கள். இன்று நீங்களே அந்தமாதிரியெல்லாம் நான் பழகக் கூடாது என்கிற அர்த்தத்தில் என்னைக் கண்டிக்க வருகிறீர்கள்! இதென்ன பேச்சு! இதென்ன நாகரிகம்! உங்கள் சஞ்சல புத்தி எனக்குச் சற்றும் பிடிக்கவேயில்லை!" என்று சுடச்சுடச் சொன்னாள்.

அதற்குள் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்ட கோபாலன் ஒருபடி இறங்கிவந்தான். "அதற்குச் சொல்லவில்லை வனஜா; பெற்ற குழந்தையைக்கூட சரிவரக் கவனிக்காமல் இதெல்லாம் ஏதுக்கு என்றுதான் சொல்லவந்தேன்!" என்று தயங்கினான்.

"அதிசயமாய்த்தானிருக்கிறது நீங்கள் குழந்தை—குழந்தையென்றே எப்போதுபார்த்தாலும் உருகுகிறது! குழந்தைக்காக ஏங்கிப் பிராணனை விடும் புருஷனை இப்போதுதான், முதல் தடவையாக, என் கண்முன்னே பார்க்கிறேன்! அந்தக் கவலை உங்களுக்குக் கொஞ்சம்கூட வேண்டாம்; குழந்தையைக் கவனித்துக்கொள்ளச் சுசீலாவும், தாதியும் இருக்கிறார்கள்!" என்று பளிச்சென்று பதில் சொன்னாள்.

"கொஞ்சம் தயவு பண்ணி நான் சொல்வதைக் கேள், வனஜா; உன்னை மறுபடியும் பழைய வனஜாவாகவே—பழமையில் நம்பிக்கையுள்ள வனஜாவாகவே—பார்க்க ஆசைப்படுகிறேன்! இந்தப் புதுமையையெல்லாம் விட்டுவிடுவாயா, வனஜா?" என்று பரிதாபகரமாக, அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு, கெஞ்சினான் கோபாலன்.

அவன் பிடியிலிருந்து தன் கரத்தை 'வெடுக்'கென்று இழுத்துக்கொண்டாள் வனஜா. "முடியாது! எப்போதும் உங்கள் இஷ்டப்படியே செய்துகொண்டிருக்க உங்கள் அடிமையில்லை நான் என்பது நினைவிருக்கட்டும்! என் இஷ்டப்படியிருக்கும் சுதந்திரம் எனக்கும் பூரணமாக உண்டு!" என்று வெகு அழுத்தமாகக் கூறினாள்.

"என் முழு முட்டாள்தனத்தால்தான் உன்னிடம் இந்த விபரீத மாறுதல் உண்டாகிவிட்டது!" என்று வருந்தினான் கோபாலன்.

"அதற்கு நான் என்ன செய்யமுடியும்!" என்று அவனை நையாண்டி பண்ணினாள் நாகரிகமோகத்தில் ஊறிப்போய்விட்ட வனஜா.

கோபாலன் மனம் உடைந்து நின்றான்; வாழ்வே கசந்துவிட்ட உணர்ச்சியைப் பெற்றான்.

போலி நாகரிகத்தால் விளைந்துவிட்ட வினைகள் ஒவ்வொன்றாக அவன் மனக்கண் முன்னே தோன்றலாயின.

உண்மையில் 'நாகரிகம்' என்பது எது? வெளிப்பகட்டா? வெறும்உடைமோகமா? பொருத்தமற்ற புதுப்பழக்கவழக்கங்களா? மனித உணர்ச்சியை மழுங்கச்செய்யும் பேய்ச் சக்திகளா? உள்ளத்தின் உயர்வை உதாசீனப் படுத்தும் வறட்டுப் பெருமைகளா?

அவையெல்லாம் அர்த்தமற்ற, வீண் அகம்பாவத்தின் அடையாளங்களாகவே அப்போது கோபாலனுக்குப்பட்டன.

பின் 'நாகரிகம்' எங்கேதான் இருக்கிறது?

உள்ளத்தின் உயர்விலேதான் நாகரிகம் உருவாக வேண்டும்; வறட்டு ஜம்பத்தையும், அவசியமற்ற ஆசைகளையும் அடக்கி, மனித மனத்தைப் பண்படுத்துவதிலே அது வளர்ச்சி பெறவேண்டும்; தேசத்துக்கு நன்மை பயக்கும் பல துறைகளிலே அது பெருமையடைய வேண்டும். கோபதாபங்களையும், துராசைகளையும் வெருட்டி ஓட்டுவதிலே அது வெற்றிக்கொடி நாட்டவேண்டும்.

தன் மீதே வெறுப்படைந்து கோபாலன், தனிமையை நாடி, கடற்கரைப்பக்கம் நிம்மதியைத் தேடிப் போனபொழுது, அங்கே ஒரு பொதுக் கூட்டம் நடந்துகொண்டிருந்ததைக் கவனித்தான்.

அந்தக் கூட்டத்திலும், அப்போது, பிரசங்கி நாகரிகத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தான்; அவன் சொன்னான்:

"நாகரிகத்தை நாடி நாம் மேல்நாடுகளை நோக்கி நிற்கவேண்டாம்; நம்மிடமே அது நிறைந்து கிடக்கின்றது; ஆனால் கவனிப்பாரின்றி, நமக்குள்ள மேல் நாட்டு மோகத்தினால், அது மேடிட்டுமேவியிருக்கிறது; சற்றே சிரத்தையுடன் மேலே படிந்திருக்கும் செத்தை சருகுகளை நீக்கிவிட்டுப் பாருங்கள்; மேல் நாட்டார் நாகரிகத்தைத் தேடி நம்மிடம் வரும் காலம் வரவேண்டும்

"நமக்குள்ளேயே சண்டையிட்டுக்கொண்டு மடிவது நாகரிகமல்ல; ஒரே இனமாக இருக்கும் நமக்குள் வகுப்புவாதத்தைக் கிளப்பிவிட்டுக் குட்டை குழப்புவது நாகரிகமல்ல; அர்த்தமில்லாமல் கிளர்ச்சி செய்வது கேலிக்கூத்தாகும். நம் தேசமாகிற தடாகம் ஏற்கனவே பல விதங்களில் தெளிவற்றுக் கிடக்கிறது; அதைத் தெளியவைப்பதில் நாம் சிரத்தை கொள்ளாமல் மேலும் குழப்பி விடுவது மதியீனமாகும்.



"விசால மனப் பான்மையிலேதான் நாகரிகம் வளர இடம் உண்டு; மனிதனுக்கு மனிதன் அன்பும், மரியாதையும், மதிப்பும், செலுத்துவதிலே தான் நாகரிகம் விருத்தியடைய வழியுண்டு; அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வதிலேதான் நாகரிகத்தின் சிறப்பை நாம் காணமுடியும்.

"அனாவசியமான ஆடம்பரங்களை அகற்றிவிடுங்கள்; வெறும் உடை மோகத்தை உதறிவிடுங்கள்; நம்மை வேரறுக்கும் வெறுப்புணர்ச்சியை விரட்டி விடுங்கள். அன்புடன்—ஒருவருக்கொருவர் ஆதரவுடன்—ஒற்றுமையுடன்—பெருமதிப்புடன்—நாகரிகமாய் வாழ்வோம்—வாருங்கள்!" என்றெல்லாம் உணர்ச்சிப்பெருக்குடன், ஆவேசமாய்ப்பேசினான் பிரசங்கி.

கோபாலனும் கேட்டுக்கொண்டிருந்தான்.

பிரசங்கி சொன்ன ஒவ்வொன்றும் உண்மையே என்று தோன்றியது. உறங்கிக்கொண்டிருந்த உள்ளம் விழித்துக்கொண்டது.

கோபாலன் மாறிவிட்டான்!

ஆனால் வனஜாவின் விபரீத மாறுதல் அவன் உள்ளத்தின் ஆழத்திலே தீராத வலியை உண்டாக்கி உபத்திரவப்படுத்திக்கொண்டேயிருந்தது.

வீட்டை அடைந்தான்; தான் அணிந்திருந்த மேனாட்டு உடுப்புக்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கழற்றி மூலையிலே வீசியெறிந்தான்.

வேஷ்டியொன்றை யெடுத்து உடுத்திக்கொண்டு பெருமூச்சுவிட்டான்.

அதே சமயம் அவனிடம் ஏதோ சொல்லவந்த சுசீலா அவனிடம் காணப்பட்ட மாறுதலைக் கண்டு பிரமித்துநின்றாள். வாயிலிருந்து வார்த்தையொன்றும் வெளிப்படவில்லை.

கோபாலன் அவளைப் பார்த்து அர்த்தத்துடன் புன்னகை புரிந்தான்; "என்ன சுசீலா!" என்றான்.

"இப்போது உன்னைப் பார்க்கக் கண்ணுக்கு எவ்வளவோ குளிர்ச்சியாக இருக்கிறது!" என்றாள் சுசீலா.

"என்னவோ சொல்ல என்னிடம் வந்தாயே? அது என்ன?" என்று வினவினான் கோபாலன்.

சுசிலாவின் வதனம் சட்டென்று சுருங்கிவிட்டது. "குழந்தை 'ராஜா'வுக்குத் தாங்கமுடியாமல் ஜுரம் அடிக்கிறது; கண்ணைத் திறக்காமல் கிடக்கிறது." என்று வருத்தம் நிறைந்த குரலில் சொன்னாள்.

குழந்தையைப் பார்க்க ஓடினான் கோபாலன்.

தொட்டிலிலே அது சுருண்டு படுத்துக்கிடந்தது; இளைத்து உருமாறிப்போய் காணப்பட்டது.

மெதுவாக கைவைத்துப் பார்த்தான்; ஜ்வரம் நெருப்பாய்த் தகித்தது.

"ஜுரத்துக்குக் காரணம் என்ன? ஏதாவது உனக்குத் தெரியுமா சுசீலா?" என்று கவலையோடு கேட்டான் கோபாலன்.

குழந்தையைப் பார்த்துக்கொண்டே, சுசீலா, மெதுவான குரலில், "காரணம்—வேறென்ன இருக்கப்போகிறது? பெற்ற தாயின் அரவணைப்பும், அன்பும், ஆதரவுமின்றியே ஒரு குழந்தை வளருமானால்......?......இப்படித்தான்!" என்று தயங்கிக்கொண்டே சொன்னாள்.

தலைகுனிந்தபடியே கோபாலன் பெருமூச்செறிந்தான்.

## 18

ஆங்கிலோ—இந்தியன் கிளப்'பைச் சேர்ந்த பெரிய ஹாலின் அமைப்பு கவர்ச்சிகரமாக இருந்தது; வழுவழுப்பான தரை, கண்ணாடியைப்போல் பிரதிபலித்தது. அங்கங்கே அழகாய் ஒளிவீசும் மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. விஸ்தாரமான அந்த ஹாலைச் சுற்றிலும், அரை வட்டமாக, அநேக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் ஆணும்—பெண்ணுமாய், நவநாகரிக உடை தரித்த அநேகர் அமர்ந்திருந்தனர்; சிலர் அலாதியான தோரணையிலே 'சிகரட்' பிடித்தனர்; மற்றும் சிலர் வெகு ஒய்யாரமாக உட்கார்ந்தபடி, அடிக்கடி தம் பார்வையை வெகு அலக்ஷ்யமாக நாலாபுறமும் சுழல விட்டனர்.

மற்றொருபுறத்திலே நாட்டியமாடும் மேடையொன்று அதியற்புதமாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது; எழிலோடு கூடிய வர்ணவிளக்குகளின் சோபையுடன் நடனமேடை மனமோஹனமாய்த் திகழ்ந்தது.

ஹாலின் ஒரு கோடியிலே வாத்ய கோஷ்டியொன்று மேனாட்டுப் பாணியிலே பண் இசைத்துக்கொண்டிருந்தது.

அதற்கேற்ப மேடையிலே அழகு ராணியாகத் திகழ்ந்த வனஜா, அதிசயிக்கத் தகுந்த விதத்திலே, ஆடிக்கொண்டிருந்தாள். பண்ணின் இசைக்கேற்ப மிகுந்த லாவண்யத்துடனே உடல் நெளிவுகள் பல செய்தாள்; தாளம் தவறாமல் அடியெடுத்து வைத்து ஆடினாள்.

நடனம் முடிந்ததும் சபையோர் மெச்சினர்; கரகோஷம் செய்தனர்.

வனஜா சொல்லவொண்ணாத புளகாங்கிதம் அடைந்தாள்.

அவளை வானளாவப் புகழ்ந்தபடியே அருகில் நெருங்கினான் ஜோஸப்.

சிரித்தபடியே அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு நடனமேடையிலிருந்து, ஹாலின் மத்ய பாகத்திற்கு அழைத்துக்கொண்டுபோனான்.

வாத்யகோஷ்டியின் பண் வேறுவிதமாக இசைக்கத் தொடங்கியது.

அங்கே கூடியிருந்தவர்களில் அநேகர், ஆணும் பெண்ணுமாய், ஜோடி ஜோடியாய்ச் சேர்ந்துகொண்டு, வாத்தியங்களின் இசைக்கேற்ப அடி வைத்து, ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு நடனமாடலாயினர்.



ஜோஸப் வனஜாவைப் பற்றிக்கொண்டு அவ்விதமே ஆடலானான்.

அவனுக்குச் சரியாக ஆடிவந்த வனஜா, அந்தப்பெருமை தாங்க மாட்டாமல், அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்; வாயைத் திறந்து, "எப்படி!" என்றும் கேட்டுவிட்டாள்.

"அற்புதம்! என் கண்ணே! அற்புதம்!" என்று மெதுவான குரலில், அவள் காதருகே கொஞ்சினான் ஜோஸப்.

க்ஷண நேரத்திலே வனஜாவின் மலர்ந்த வதனம் மாறிவிட்டது; திடுக்கிட்டுப்போன அவள் ஜோஸப்பை ஏறிட்டு நோக்கி, "என்னது!" என்று திகைத்தாள்.

"பேரழகியாகிய உன்னை என்னுடனேயே ஐக்யப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன், வனஜா! உன்னை என் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன்!" என்று வெறிகொண்டு முணகினான் ஜோஸப்.

அவன் பிடிப்பிலிருந்து 'சடே'ரென்று தூர விலகி நின்றுகொண்டாள் வனஜா; நெஞ்சு படபடக்க, விழிகளிலே கோபத்தீ பறக்க அவனைச் சுட்டு விடுவதுபோல் உறுத்திவிழித்தாள்; அவளையறியாமலேயே அவள் கை அவன் கன்னத்திலே பளீரென்று அறைந்தது.

"சீ, மானங்கெட்ட பேமானி! வெட்கங்கெட்ட வெறியா! துரோஹி! ஒரு பெண்ணுடன் நெருங்கிப் பழக நேர்ந்தால், சமயம் கிடைத்தபோது அவளைக் கெடுக்க முன் வருவதுதான் உன் நோக்கமோ? என்னை யாரென்று நினைத்துவிட்டாய்! போதும் உன் சகவாசம்! இனியும் என்னைப் பின்தொடர்ந்து வந்தால் போலீஸைக் கூப்பிடுவேன்!" என்று படபடத்துப் பொங்கிவிட்டு, அவ்விடத்தைவிட்டு 'விருட்'டென்று வெளியேறிவிட்டாள்

உள்ளத்தில் பொங்கிவந்த உணர்ச்சிகளை அவள் நடையின் வேகமும், பரபரப்பும் தெளிவாக எடுத்துக்காட்டின; அவமானமும், வெட்கமும், அவள் முகத்திலே மாறி மாறி வெளிப்பட்டன. உடல் குன்றிப்போய், ஒன்றையுமே கவனியாமல், யாரையுமே பாராமல், அவள் தலைகுனிந்தபடி 'விறு விறு'வென்று நடந்துகொண்டேயிருந்தாள்.

வேறுயாரும்கூட அவளைக் கவனிக்கவில்லை; ஒருவரும் பின்தொடர்ந்து வரவுமில்லை; தெருக்கள் யாவும் கலகலப்பாகவே விளங்கின; ஜே-ஜே யென்று மனிதக்கூட்டம் வந்து போய்க்கொண்டேயிருந்தது; மோட்டார்களும், டிராம் வண்டிகளும் இன்னும் பலவித வாகனங்களும் பட்டணத்துச் சந்தடியை அதிகமாக்கிக்கொண்டேயிருந்தன.

வருவோர் போவோர் மீது முட்டி மோதிக்கொண்டு வனஜா வேகமாக நடந்துகொண்டேயிருந்தாள்.

கடலில் மறையும் சூரியனின் கடைசிக்கதிர்கள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்தன.

ஜனசந்தடி தூரத்திலேயே அடங்கிவிட்டது; நீலக்கடலின் ஆரவாரத்துடன் ஓங்கார நாதமும் மெல்ல இழைந்தோடியது.

வனஜா தலைநிமிர்ந்து எதிரே நோக்கினாள்.

பரந்த கடல் அவளைப்பார்த்துச் சிரித்தது; உயர உயர எழும்பிய அலைகள் அவளைக் கைநீட்டி அழைப்பதுபோலிருந்தது.

ஹிதமாக வீசிய கடற்காற்று அவள் மனப் புயலைச் சற்றே தணித்தது.

திடீரென்று, "அய்யோ குழந்தை! குழந்தை! அலையோடு போகிறதே! அய்யோ!'' என்று ஒரு ஸ்திரீயின் ஓலம்—



திடுக்கிட்ட வனஜா குரல் வந்த திசையில் நோக்கினாள்.

கைகளைப் பிசைந்துகொண்டு, செய்வதறியா மல், துடித்துத் தவித்துக்கொண்டிருந்தாள் ஒரு தாய்; அலையோடு போகும் அவள் குழந்தையைக் காப்பாற்றும் நினைப்பிலே அவளும் கடலில் இறங்கத் துணிந்துவிட்டாள்...

அதற்குள் யாரோ நான்கைந்து ஆடவர்கள் கடலில் குதித்துக் குழந்தையைக் கரை சேர்த்து விட்டனர்.

உயிரோடு தன் குழந்தையை மீண்டும் பெற்ற அந்தத் தாயின் ஆனந்தத்தை ஏடுகளில் விவரிக்க முடியாது.

வனஜா எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டே நின்றாள்.

திடீரென்று அவள் உள்ளத்திலே எதிரொலி கிளம்பியது: "அய்யோ! குழந்தை! குழந்தை! அலையோடு போகிறதே அய்யோ'' என்று மீண்டும் ஒரு குரல் அவளுக்குள்ளேயே கூவுவது போலே ஒரு பிரமை உண்டாயிற்று...

வனஜா திகைத்தாள்...

"அய்யோ! குழந்தை! அலையோடுபோகிறதே! அய்யோ!''

என்னது? யாருடைய குழந்தை? வனஜாவின் குழந்தையா?.. அது எங்கே?.. எங்கே போகிறது?.

"அய்யோ! குழந்தை! அலையோடு போகிறதே! அய்யோ!''

தன் ஹ்ருதயத்திலேயே யாரோ கூவி அழைப்பது மாதிரி உணர்ந்தாள் வனஜா.........

தன் குழந்தையைக் காப்பாற்றும் எண்ணத்துடன் அந்த ஸ்திரீ கடலில் குதிக்கவும் தயாராக இருந்தாள்!......

அவளோ?......

குழந்தையின் தாயார் அதை உயிரோடு இழந்தவுடன் பட்ட பாடு! பத்திரமாக மீண்டும் பெற்றதும் அவள் அடைந்த ஆனந்தம்!......

ஆனால் வனஜாவோ......?......

மனச்சாட்சியா பேசுகிறது?......

அவள் குழந்தை—அவள் பெற்ற குழந்தை — இப்போது எங்கே—எந்த நிலையில் இருக்கிறது?... தெரியுமா?......

தன் உள்ளத்தை யாரோ சூட்டுக் கோலால் துளைப்பது போலே உணர்ந்தாள் வனஜா.

"அய்யய்யோ! குழந்தை! குழந்தை! அலையோடு போகிறதே! அய்யோ!''

அவள் குழந்தை! அவள் குழந்தையா? ராஜா! வனஜாவின் தாயுள்ளம் திடீரென்று விழித்துக் கொண்டு அலறித் துடித்தது!

அவள் பரபரவென்று வீட்டை நோக்கி நடக்கலானாள்.

"குழந்தை! குழந்தை! தாயின் அன்பற்று, அணைப்பின்றி—ஆதரவின்றி—அனாதையாக அலையோடு போகிறதே! அய்யய்யோ! என்ற குரல் வனஜாவை விரட்டிக்கொண்டே வந்தது.

## 19

வெறிகொண்டவளைப் போலே வீட்டினுள் நுழைந்தாள் வனஜா,

மளமளவென்று அறைகளைக் கடந்துகொண்டு சமையல் அறையில் நுழைந்தாள்.

அங்கு ஒருவருமில்லை.

வீடே 'கிச்' சென்றிருந்தது; சகிக்கமுடியாத அமைதி அவளை வெருட்டியது.

சுசிலா எங்கே?...... குழந்தை எங்கே?......

மாடிப்படிகளில் தடதடவென்று ஓடினாள்...... இலேசாக ஒருக்களித்து வைக்கப்பட்டிருந்த அந்த அறைக் கதவை நெருங்கியதும் ஒரே பாய்ச்சலில் உள்ளே நுழைந்துவிட்டாள்.

உள்ளே தொட்டிலின் பக்கத்திலே சுசிலா—கோபாலன் இரண்டுபேருமே, முகத்தில் விவரிக்க முடியாத கவலை படர்ந்திருக்க, சொல்லமுடியாத சோகம் விரிந்துகிடக்க உட்கார்ந்திருந்தனர்.

வனஜா ஒரு கணம் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள்.

அந்நிலையில் அவளைக் கண்டவுடன், சுசிலா, தன்னையுமறியாமல், "மன்னி! — வா மன்னி! என்று அலறிவிட்டாள். ஓடோடியும் வந்து வனஜாவை மார்புறத் தழுவிக்கொண்டு விம்மினாள்.

"வனஜா! இப்போதாவது குழந்தையைப் பார்க்க உனக்கு மனசு வந்ததே!" என்று துக்கத்தை அடக்கமுடியாமல் சொன்னான் கோபாலன்.

சுசிலாவின் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட வனஜா மௌனமாகத் தொட்டிலருகே வந்து நின்றாள்.

வாடி வதங்கிக்கிடந்த தன் குழந்தையைத் துயரத்துடன் உற்று நோக்கினாள் வனஜா.

மெதுவாகத் தொட்டுப் பார்த்தாள்; உள்ளம் பொங்கிவந்தது; உணர்ச்சியின் வேகத்தால் வெடித்துக்கொண்டு வந்த விம்மலை அவளால் அடக்கமுடியவில்லை.

குழந்தையை அன்புடன் மிருதுவாகத் தடவிக்கொடுத்தாள்.

தாயின் அன்பு நிறைந்த ஸ்பரிசத்திலே குழந்தை மெதுவாக நெளிந்துகொடுத்தது.

எல்லை கடந்த வாத்ஸல்யத்துடனே குழந்தையை அப்படியே வாரியெடுத்து மார்போடு வைத்து அணைத்துக்கெண்டாள்.

அதுகாறும் கிடைக்காத இன்பத்தை அந்தக் குழந்தையும் உணர்ந்ததோ — என்னவோ!

அனுபவித்து அறியாத அன்பைப் பெற்றுவிட்டமாதிரி வனஜாவின் ஏந்திய கரங்களில், இருந்தபடி கண்திறந்து பார்த்துப் புன்னகை புரிந்தது.

வனஜாவின் ஆனந்தம் எல்லை கடந்துவிட்டது.

"என் ராஜா! உன்னை இதுவரையில் மறந்தே போய்விட்ட பாவி நான்! கிராதகி நான்! எனக்கு மன்னிப்பு உண்டா, என் ராஜா?" என்று குழந்தையைப் பார்த்துக்கொண்டே, உணர்ச்சிப் பெருக்குடன் முணுமுணுத்தாள்.

கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்து கன்னத்தின் வழியே உருண்டோடியது,

சுசிலா வனஜாவின் பக்கத்தில் போய் நின்றுகொண்டாள்; அவள் கண்ணும் கலங்கி நின்றது,

வனஜாவைப் பார்த்தபடியே கல்லாய்ச் சமைந்துவிட்டான் கோபாலன்; நம்பமுடியாத வியப்பும், அளவு கடந்த பிரமிப்புமே அப்போது அவன் முகத்திலே குடிகொண்டிருந்தன.

முற்றிற்று



# வெற்றிக்குமேல் வெற்றி

ஹிந்துஸ்தானின் இணையற்ற வியாபாரம் பிரதி வருடமும் பெருகியே வருவதன் காரணமாக அதன் நிதி நிலைமை மேன் மேலும் உயர்ந்து மேன்மேலும் வலுவடைந்து வந்திருக்கிறது. இந்திய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் அபிவிருத்தித் துறையில் இது ஒரு அரிய சாதனை. 1951 வருஷத்திற்கான 45-வது வருடாந்தர யாதாஸ்தில் இந்த சொஸைடிக்கு என்றுமே பெருமை தருவதான உறுதி நிலையும் நாணயமும் மீண்டும் பிரதிபலிக்கின்றன.

***சில புள்ளி விவரங்கள் :—***

| | | | |
|---|---|---|---|
| **அமுலிலுள்ள அஷ்யூரன்ஸ் தொகை** | .... | ரூ. | 81,02,36,164 |
| **மொத்த ஆஸ்திகள்** | .... | ரூ. | 19,98,13,853 |
| **ஆயுள் நிதி** | .... | ரூ. | 17,66,19,628 |
| **பிரீமியம் வருமானம்** | .... | ரூ. | 3,72,27,528 |
| **உரிமைகள் செலுத்தப்பட்டது** | .... | ரூ. | 83,57,978 |

**புதிய வியாபாரம் ரூ. 16,28,85,800**

# ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்

## இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்

***ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ், 4 சித்தரஞ்சன் அவெனியூ,***

**கல்கத்தா.**

சென்னை டிவிஷனல் ஆபீஸ்:

***ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ், 107, அரமனைக்காரத் தெரு***

**சென்னை - 1.**




மொழிபெயர்ப்பு

(தென் ஆப்ரிக்க கதை, எழுதியவர்: திரு. சர்வதேசுவரார்)

'சொர்ணபுரி' என்று அழைக்கப்படும் அந்த நகரத்தின் மோசமான, அதிகமாகச் சொன்னால் சுத்தமில்லாத ஒரு பகுதியிலிருந்து "என் குழந்தை! என் குழந்தை!" என்று கூச்சல் வந்துகொண்டிருந்தது. தெரு குறுகலாக இருந்தது. வெளிச்சத்தையே காணோம். விளக்குகள் இருந்தாலல்லவா? முனிசிபாலிட்டியின் திருஷ்டி அதன்மேல் விழவில்லை. மழைபெய்து அடித்துக்கொண்டு போனாலொழிய, வேறு எந்த விதத்திலும் சுத்தப்படுத்த முடியாத அளவுக்கு இருந்தது அத்தெரு. ஜோஹன்ஸ்பர்கில் உள்ள 'ஆசியா பஜார்' என்ற இடம்தான் அது. இந்தியர்களுக்கென்றே தனியாக ஒதுக்கப்பட்ட இடம்.

சப்தம் வந்த வீட்டு வழியே இரண்டு, பாதிரி உடை தரித்த மனிதர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். 'என் குழந்தை' என்ற கதறல் அவர்கள் செவியிலும் விழுந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் ஏன் நிற்கிறார்கள்?

"ஸ்காட்! அதுஎன்ன சப்தம்? யாரோ இக்கட்டான நிலைமையில் இருக்கிறார்கள் போலிருக்கிறது. வா பார்த்து, தெரிந்துகொண்டு வரலாம்!" என்றார் அவர்களுள் ஒருவர்.

"பர்க்! நீ இப்போது லண்டனில் இல்லை என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் உனக்கு ஏற்பட்டிருக்கிறது. மதம் உனக்கு எதிராக இருக்கிறது. நாம் இப்போது இந்தியர்கள் வசிக்கும் பகுதியில் இருக்கிறோமென்று தெரிந்துகொள்!"

"மதம் எப்படியோ இருக்கட்டும். அதை நான் தெரிந்துகொள்ளவேண்டும்!" என்றார் பர்க். வழிப்போக்கன், ஒருவனை நிறுத்திக் கேட்டதற்கு "ஓ அதுவா, அவள் ஒரு பைத்தியக்காரி!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

வழிப்போக்கன் அளித்த பதில் பர்க்கைத் திருப்திப்படுத்துவதாய் இல்லை. மேலும் தெரிந்துகொள்ள அவர் விரும்பினார். பைத்தியக்காரி எழுப்பும் கூச்சலுக்கு, ஏதோ ஒரு சோகரசமான சம்பவம் அடிப்படையாக இருக்கவேண்டும் என்று அவர் யூகித்தார். அவருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய ஒரு நபர் அவருக்குக் கிடைத்தான்,

"நான் அவள் வீட்டிற்குப் பக்கத்தில் குடியிருக்கிறேன். அவள் புருஷனைக்கூட எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் கதை மிகவும் பரிதாபகரமானது!" என்றான் புதியவன்.

"சரி மேலே சொல்லு. எனக்கு எல்லாமே தெரிந்துகொள்ளவேண்டுமென்றே ஆவல்!" என்றார் பர்க்.

"நீங்கள் இந்த இடத்திற்குப் புதியவரோ!" என்றான் புதியவன்.

"ஆம்! என் பெயர் பர்க். நான் லண்டனைச் சேர்ந்த ஒரு பாதிரி. இங்கிருந்து இரண்டு மூன்று பர்லாங் தூரத்தில் உள்ள மாதாகோவில் நிர்வாகத்தை ஏற்க வந்திருக்கிறேன்."

"ஓஹோ! சரி, அதனால் இந்த வட்டாரத்து விஷயங்கள் உங்களுக்கு அதிகமாகத் தெரியாது. அருகிலுள்ள என் வீட்டிற்கு உங்களை அழைத்துச் செல்ல நான் விரும்புகிறேன்; என்றாலும், இந்நாட்டு வழக்கப்படி, நீங்கள் வரமாட்டீர்களோ என அஞ்சுகிறேன்!" என்றான் புதியவன்.

"எனக்கு அதெல்லாம் ஒன்றும் அக்கறை இல்லை. ஸ்காட்! நீயும் வருகிறாயா?" பர்க் பேசினார் தாம் என்ன செய்கிறோம் என்பதை உணராமல்.

ஸ்காட், முதலில் சற்றுத் தயங்கினார். பிறகு பர்க்கைப் பின் தொடர்ந்தார். இருவரும் பிரேம்நாத் என்ற அந்த இந்தியன் வீட்டை அடைந்தனர்.

"இப்போது சொல்லுங்கள்!" என்று பர்க் கேட்கவே, பிரேம்நாத் சொல்ல ஆரம்பித்தான்.

"இந்தப்பெண்ணின் புருஷன் டர்பானிலிருந்து வந்தவன். அதனால் அவன் டிரான்ஸவாலுக்குள் அனுமதிச்சீட்டு இல்லாமல் நுழையமுடியாது. அப்படி நுழைந்தாலும், ஆறு மாதத்திற்கு மேல் தங்க முடியாது. அவன் பெயர் பிரகாஷ் வில்லியம். அவன் ஒரு இந்தியன். அனுமதிச்சீட்டு இல்லாமல் அவன் டிரான்ஸ்வாலுக்கு வந்துவிட்டான். அது சட்டப்படி தவறான காரியம். ஒரு வருடம் கழிந்தபிறகு, இப்போது கூச்சல் போட்டுக்கொண்டிருக்கும் இந்தப்

பெண்ணை அவன் மணந்துகொண்டான், சில நாட்கள் அவர்கள் சுகமாக வாழ்ந்தார்கள். அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தபோதுதான் தொந்தரவும் கூடவே ஆரம்பமாகியது, அதாவது குழந்தையைப் பதிவுசெய்யவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டபோது! சட்டத்திற்கு விரோதமாக அவன் இங்கு வந்திருக்கிறான் என்பது இப்போது நிச்சயமாகத் தெரிந்துவிடும் அல்லவா? அதனால் உடனே அவனுக்குச் சிறைத் தண்டனைதான் கிடைக்கும்.



அது தெரிந்துபோன நாளிலிருந்து தன் மனைவிக்காகவும், குழந்தையின் நிலைக்காகவும் அவன் மிகவும் வருத்தப்பட்டான். டிரான்ஸ்வாலிலும் அவன் இருக்க முடியாது. நேட்டாலில் இருந்த டர்பானுக்கும், அவர்களோடு அவனால் திரும்ப முடியாது. காரணம் சட்டம்.

அவன் கலங்கிப்போனான். என்னென்னவோ வழிகளைக் கையாண்டு, நான் அவனுக்கு ஊக்கமளிக்க முயன்றேன். என்னால் முடியவில்லை. எல்லாமே அவனுக்கு எதிராக இருந்தன. பார்லிமெண்டில், தொகுதிப் பிரிவுச் சட்டமும், குடியேற்றச் சட்டமும் கொண்டுவரப்பட்டபோது, அவன் நிலை மிகவும் மோசமாகிவிட்டது இந்தியர்கள்மீது சுமத்தப்பட்ட அச் சட்டங்கள் மிகவும் மோசமானவை! அவனை எப்படியாவது கண்டுபிடித்து, குற்றவாளி என நிரூபித்து, சிறைக்குள் தள்ளுவார்கள் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். இதில் சிக்கிச் சீரழிய அவன் விரும்பவில்லை. இந்த இக்கட்டிலிருந்து எவ்வாறு தப்புவது என்ற எண்ணம்தான் அவன் மனதை ஆக்ரமித்துக்கொண்டிருந்தது. தூக்கமில்லா இரவுகள் எத்தனையோ? எந்த வினாடியில் கைதியாக்குவார்களோ என்ற எண்ணம் அவனை அரித்துக்கொண்டிருந்ததால், போலீஸ்காரர்களைக் கண்டபோதெல்லாம் கலங்கினான் அவன்.

ஒரு நாள் திடீரென அதிகாரிகள் புது உத்தரவு ஒன்றைப்போட்டுவிட்டார்கள். டிரான்ஸ்வாலில் படித்துக்கொண்டிருந்த நேட்டால்மாணவர்களின் அனுமதிச்சீட்டை வாபஸ் பெற்றுக்கொண்டுவிட்டார்கள் அதிகாரிகள். அதுதான் அவர்களின் புதிய நடவடிக்கை. வில்லியமின் நிலைமை மிகவும் மோசமாகிக்கொண்டுவந்தது. கவலை அதிகமாகிவிடவே அதை மாற்ற, 'குடி'க்க ஆரம்பித்தான் வில்லியம்.

அவன் குடும்பத்தின் நிலைமை மோசமாகிக் கொண்டு வந்தது. அடிக்கடி புருஷனுக்கும், மனைவிக்கும் சில்லறைப் பூசல்கள். அதனால் அவன் குடியும் அதிகமாகியது. எவ்வளவுதான் கஷ்டம் இருந்தபோதிலும் அவன் மனைவி, அவனுக்குரிய மரியாதையைக் கொடுத்துக்கொண்டுதான் இருந்தாள். கணவன் என்ற கடமை இருக்கிறதல்லவா?

முடிவில் வருத்தம் தரக்கூடிய ஒரு சம்பவம் நிகழப் போகிறது என்பதை அவள் மனது அறிந்துகொண்டது. அவளைத் தேற்றுவதற்கு யாரும் அருகில் இல்லை. அவள் கண்ணீர்தான் அவளுக்குத் துணையாக இருந்தது. தன் வீட்டு முற்றத்தில் அமர்ந்து, நிலாவைப் பார்த்தவண்ணம் அவள் எத்தனையோ இரவுகளைக் கழித்திருக்கிறாள். தன் கஷ்டங்களைத் தீர்க்கும்படி, அவள் கும்பிடாத கடவுள்கள் இல்லையெனலாம்! எந்த விதத்திலும் அவளுக்கு ஆறுதல் இல்லை. தனியாக இருந்து தனக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைச் சமாளிப்பதென்னவோ அவளுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

இருக்கும் தொந்தரவு போதாதென்று மேலும் அவளுக்கு உபாதை! அவள் கணவன் குடிவெறியினால் அவளை அடிக்க ஆரம்பித்துவிட்டான். அப்பப்பா, அந்த நிகழ்ச்சிகளை மனதாலும் நினைக்க முடியவில்லை. அவ்வளவு கோரம்! நல்ல மனிதனான வில்லியம் அந்தக் காரியங்களைச் செய்திருப்பானா என்று சிலர் நம்பக்கூட மாட்டார்கள்.

ஆனால் நிலை......அது மனிதனை என்ன வேண்டுமானாலும் செய்யுமல்லவா?

ஒருநாள் இரவு திடீரென வில்லியம் காணாமல் போய்விட்டான். அதற்குப் பிறகு அவனைப்பற்றிய தகவலே காணோம். போனவன்......போனவன்தான்!

திருமதி வில்லியம் நிராதரவானாள். உதவிசெய்வார் யாருமில்லை. அவள் தன் இரண்டு வயதுக் குழந்தையை வைத்துக்கொண்டு உதவி இல்லாமல் என்ன செய்வாள்?

நான் எவ்வளவோ ஆறுதல் சொன்னேன். அதை அவள் ஏற்றுக்கொண்டால்தானே? அவள் கஷ்டங்கள் அவளோடுதான் இருந்தன! அடிக்கடி அவள் புண்பட்ட இதயத்தைக் கீறிக்கொண்டு வெளிவரும் சில வார்த்தைகளை நான் இன்னும் மறக்கவேயில்லை. "குடி! குடி!! அதுதான் என் கணவனைச் சூறையாடிவிட்டது. எங்கள் வாழ்க்

கையைப் பாழாக்கிவிட்டது. எனக்காக அவர் எதையும் செய்யச் சித்தமாக இருந்தார், சில நாட்களுக்கு முன்பு. ஆனால் குடி அவரை ஆக்ரமித்துக்கொண்டபின் குடிக்காக எதையும் செய்யத் தயாராகிவிட்டார் அவர்."

இதற்குப்பிறகு அவள், தன் குழந்தையைப் பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியமேற்பட்டுவிட்டது, சில நாட்களுக்குப்பிறகு ஆசிய அலுவல்களைக் கவனிக்கும் இலாகாவிடமிருந்து அவளுக்கு ஒரு உத்தரவு வந்தது. அந்த உத்தரவு அவளுக்கு வந்த இன்னொரு அதிர்ச்சி. குழந்தை டிரான்ஸ்வாலிலிருந்து நேட்டாலுச்குக் சென்று குடியேறவேண்டுமென்பதுதான் அதிகாரிகள் அனுப்பிய தாக்கீது. அம்மா டிரான்ஸ்வாலில், குழந்தை நேட்டாலில். இந்தியர்களுக்காகப் புதிய புதிய விதிகள். கற்பனையில்கூட எதிர்பார்க்க முடியாத சம்பவம். திருமதி வில்லியமின் நிலைமையை உங்களுக்கு நான் சொல்லித்தான் ஆகவேண்டுமா?

மறுநாள் சாயங்காலம், "என் குழந்தை! என் குழந்தை!!" என்று என்னிடம் கதறிக்கொண்டு வந்தாள். நான் என்ன செய்யட்டும்? உண்மைகள் காகிதத்தில் அல்லவா இருந்தன! உணர்ச்சி வெறி அவளை மேற்கொண்டு இருந்தது. தாய்மை விக்கல்களாக வெளிப்பட்டது. அவளால் பேச முடியவில்லை. அவளுடைய அப்படிப்பட்ட நிலைமையிலும் குழந்தையை அதிகாரிகளிடம் எடுத்துக்கொண்டு போனாள். அவள் சொன்ன எந்தக்காரணமும், அதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதாய் இல்லை,

வகுப்பு வெறிக்கு அதிகாரிகள் அடிமையாய் இருந்தார்கள். குடியேற்றச்சட்டமோ கண்மூடித்தனமானது. டிரான்ஸ்வாலுக்குள், நேட்டாலில் இருந்துவந்த எந்த இந்தியனும் குடியேறக்கூடாது. அதேபோல் டிரான்ஸ்வாலில் இருந்து நேட்டாலுக்குவந்து எவனும் குடியேறக்கூடாது. இது சட்டம்.

அதிகாரிகள் அதற்கு அடங்கி நடந்தார்கள். குழந்தை மட்டும் வெளியேறித்தான் ஆகவேண்டும் என்ற முடிவு! ஒட்டி உலர்ந்துபோன மார்பில் குழந்தையைத்தாங்கிக்கொண்டு, தாய்ப்பாசம் கதற, அவள் வீடு திரும்பாமல் என்ன செய்யமுடியும்? மெத்தையிலிருந்து கீழிறங்கி வர அவளுக்கு லிப்ட்கூட உபயோகப்படவில்லை. ஏனெனில் அவள் இந்தியப் பெண்!

மீண்டும் என்னிடம் வந்து அழுதாள். "என் பொக்கிஷத்தை, என் கண்மணியை என்னிடமிருந்து பிரிக்க முயல்வதைப் போன்ற வேறெதாவது கொடுமை உலகத்தில் இருக்கிறதா? ஒரு தாய் தன் குழந்தையிடமிருந்து பிரிய முடியுமா? தாயைத் தவிர, குழந்தைக்கு வேறு கதியேது? அவர்களிடம் மனிதத் தன்மையே கிடையாதா? தாயின் துயரம் அவர்கள் கண்ணில் படாதா? ஐயோ! என் குழந்தை" என்று கதறினாள்.

குழந்தையைத் தாயிடமிருந்து பிரிக்கும் பாதகத்தை விட வேறென்ன அதிகமாக மனிதனால் செய்யமுடியும்?

பிரேம்நாத் இந்தக் கட்டத்தைச் சொன்னபோது உணர்ச்சி வசப்பட்டுப் போனான். அவன் கண்களில் நீர்த்துளிகள், அவனால் சரியாகக்கூட


உங்கள் வீட்டை அழகாகவும்
சுத்தமாகவும் வைத்துக்கொள்ள வேண்டுமா?

Trade AKR Mark

(Cement Mosaic Flooring Tiles)
சிமிண்ட் மொசைக் ஓடுகளை
உபயோகியுங்கள்

பல உயர்ந்த வர்ணங்களாலும், மார்பிள் கற்களாலும் சிறந்த வகையில்
ஹைட்ராலிக் பவர் பிரஸ்ஸில் தயாரானவை
எல்லா வர்ணங்களிலும் கிடைக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணா டைல்ஸ் அண்டு பாட்டரீஸ் (மதராஸ்) லிமிடெட்
குமாரவிஜயம், — மைலாப்பூர், — மதராஸ்-4
போன்: 86554 3755
தந்தி: "AEKAIOR"

மூச்சுவிட முடியவில்லை. பிரேம்நாத்தைப்போலவே பர்க்கும் தம் நிலையை மறந்தார். ஸ்காட்டும் அதேமாதிரிதான். இம்மாதிரியான பரிதாப நிலைக்குத் தாங்களும் ஒரு வகையில் காரணம் என்று நினைக்கும்போது அந்த இருவர்களால் ஒன்றுமே பேசமுடியவில்லை.

அன்று நடந்த அந்தச் சம்பவங்களெல்லாம் மீண்டும் ஒரு தடவை அவன் கண்முன் தோன்றின. வகுப்புவெறி என்ற கத்தியால், அவன் உடல் முழுவதும் இரக்கமில்லாமல் குத்தப்படுவது போன்ற ஒரு உணர்ச்சி. உடம்பு வலிப்பது போல இருந்தது. அதனால் அவன் தன்னை மறந்தான். சூழ்நிலையை மறந்தான். உணர்ச்சி வாய் வழியாக வெளிப்பட்டது.

"எத்தனை நாட்களுக்குத்தான் நாங்கள் இம்மாதிரி இழிவான நிலையில் காலந்தள்ளமுடியும்? மனிதத் தன்மைக்கும், குணத்திற்கும் அப்பாற்பட்ட குற்றத்தைச் செய்கிறீர்கள். அதற்கு மன்னிப்பே கிடையாது! தாயிடமிருந்து குழந்தையைப் பறிப்பதைத்தவிர வேறு கொடூரம் ஏதாவது இருக்க முடியுமா? மிருகம்கூடத் தன் குட்டியைப் போஷிக்கிறது, காப்பாற்றுகிறது. துரோகிகள்—நாசக்காரர்கள், இந்த நாகரிகத்தைத்தான் அவர்கள் எங்களுக்குக் கற்பித்துத் தருகிறார்களா? இந்தியனின் உரிமைக்காக நான் என் உடம்பில் உள்ள கடைசிச் சொட்டு ரத்தம்வரை போராடுவேன். மற்றவர்களையும் அதைப்போலவே செய்யத் தூண்டுவேன். வெள்ளையர்களால் நாங்கள் எத்தனை நாட்களுக்குத்தான் அடிமைப்படுத்தப் பட்டிருக்கிறது, இனி, தாங்க முடியாது...நான் சபதம் செய்துகொண்டுவிட்டேன்!" என்று சொல்லி பிரேம்நாத் முடித்தான்.

பர்க், ஸ்காட், ஆகிய இருவருமே பிரேம்நாத்தை இடைமறித்துப் பேசவில்லை. அவன் போக்குக்கு விட்டுவிட்டார்கள். அதிக நேரம்கழிந்தபின் தான் பிரேம்நாத் தன்நிலையை அறிந்தான். அப்போது அவன் தான்பேசியதெல்லாம் மீண்டும் ஒரு தடவை யோசித்துப் பார்த்தான். முடிவு செய்தது செய்தது தான்.

அவனால் உடனே பேச்சை ஆரம்பிக்க முடியவில்லை. பிறகு ஆரம்பித்தான்.

"திருமதி வில்லியமுக்கு ஒரு நாள் கழிவது ஒரு யுகமாக இருந்தது. காலத்துடன் அவள் போராடினாள். அதுதான் அவளுக்குப் பரம எதிரியாக இருந்தது. எதிர்கால வாழ்க்கை இருண்டு வந்தாற்போல ஒரு பிரமை!

ஒரு காலத்தில்அவள் எவ்வளவு அழகியாக இருந்தாள். ஆனால் இப்போது! முப்பது நாட்களும் வெகு சீக்கிரம் முடிவடையும் போலிருந்தது. குழந்தையைப் பிரியத்தான் வேண்டும்! அவள் கணவனையும் காணவில்லை. நேட்டாவில் குழந்தையைப் பாதுகாப்பார் யாருமில்லை. உறவினரும் இல்லை.



கடைசியாக ஒருநாள் அவளும் காணாமல் போய் விட்டாள். சில நாட்களுக்குப் பிறகு, "என் குழந்தை! என் குழந்தை!! என்று கதறிக்கொண்டு, இங்கு வந்தாள். அவள் இப்போது பழைய திருமதியாக இல்லை. வீட்டில் இருந்த சாமான்களையெல்லாம் உடைத்தாள். பைத்தியக்காரி! நாட்களை இப்படித்தான் கழித்துக்கொண்டிருக்கிறாள். நீங்கள் பார்க்கவேண்டுமென்றால் கூட்டிக்கொண்டு போகிறேன்." என்றான் பிரேம்நாத்.

"அவசியம் பார்க்கத்தான் வேண்டும்!" என்று பர்க்கும், ஸ்காட்டும் சொல்லவே, அவர்கள் மூவரும், அவள் வீட்டை நோக்கிப்புறப்பட்டனர்.

அவள் வீட்டுக் கதவைத் திறந்ததும், திருமதி வில்லியத்தின் பைத்தியகார உருவம்தான் அவர்களை வரவேற்றது. அவள் ஆடை கிழிந்திருந்தது. தலைமயிர் அலங்கோலமாகச் சிதறி இருந்தது. ஆழமாகக் குழி விழுந்த கண்கள் இரண்டும், அவர்களை ஏறிட்டுப்பார்த்தன. அந்த வீடு சூறையாடப்பட்டது போல் சாமான்கள் நாலு பக்கமும் சிதறி இருந்தன. அறையைக் கூட்டி அநேக வருடங்கள் ஆயின என்பதற்கறிகுறியாகக் குப்பை குவிந்திருந்தது.

சிறிது நேர அமைதிக்குப் பிறகு மீண்டும், அவள் கத்த ஆரம்பித்துவிட்டாள். 'என் குழந்தை' 'என் குழந்தை' என்ற கதறல்தான். திடீரென்று பக்கத்து அறைக்குள் நுழைந்து ஒரு தலையணையை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். அவள் கைகள் அதை மார்போடு இறுக அணைத்திருந்தன. மீண்டும் சப்தம். கதறல்! அழுகை! 'என் குழந்தை' பிறகு ஒரு பயங்கரமான சிரிப்பு.

ஒரு முறை அவர்களை உருட்டி விழித்துவிட்டு, கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடிப்போனாள். தெருவில் 'என் குழந்தை' என்று அவள் போடும் கூச்சல் நன்றாகக் கேட்டது. ●




தி. நா. சுப்பிரமணியன்

அவள் நினைவாகவே இருந்தது அவனுக்கு. என்னதான் முயன்றும் அவளை மறக்க முடியவில்லை அவனால். வேறு எதை எதைப் பற்றியோ சிந்தித்துப் பார்த்தாலும் முடிவில் அவன் எண்ணம் அவள் நினைவிலேயே வந்து லயித்து நின்றது.

அவள் நல்ல எழில்வாய்ந்த அழகிதான். ஆனால் அவளைப்போன்ற பேரழகிகளை அவன் பார்த்திராதவனா? அன்றி, அப்படியென்ன அவன் இளங்காளையா, பெண்களின் ஸௌந்தர்யத்திலே மயங்கித் தன்னிலை இழப்பதற்கு? வயசு நாற்பத்தைந்துக்கு மேல் ஆகிவிட்டது. அவன் தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை, சுகபோகங்களை ஆர்வத்துடன் அனுபவிக்கக்கூடிய மிடுக்குப் பொருந்திய முக்கியமான பகுதியைக் கழித்தாகிவிட்டது. அப்படிப்பட்ட அவனே இப்போது அவள் நினைவாக ஏங்கி வாடுவது அதிசயம்தானே.

இது அவனுக்கே பிரமிப்பாகத்தான் இருந்தது.

அந்த நினைப்பிலே அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. எத்தனை நாழிகைதான் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக்கிடப்பது? எழுந்து மஞ்சத்திலேயே உட்கார்ந்தான்.

அந்த அறையிலே விளக்குக் கொஞ்சம் மங்கலாகவே எரிந்துகொண்டிருந்தது. வெளிச்சத்தின் பிரகாசம் ஒன்றும் குறைந்துவிடவில்லை. ஆனால் கண்ணுக்கு ஒருவகையான குளிர்ச்சியைக் கொடுத்தது. அவ்வெளிச்சத்திலே அவன் எப்போதும் தன் பக்கத்திலேயே வைத்திருக்கும் கோடரியுடன் அந்த உடைவாளும் கிடப்பதைக் கண்டான். அதைக் கையில் எடுத்துப் புரட்டிப் புரட்டிக் கூர்ந்து கவனித்தான். அதன் அழகைக் கண்டு அவன் கண்கள் மலர்ந்தன. இதழ்க்கடையிலும் இலேசாக ஒரு குறுநகை தவழ்ந்தது.

அவன் உள்ளத்தே ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது.

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்த அவன் உடைவாளைப் பக்கத்திலே மஞ்சத்தின்மீது வைத்துவிட்டுத் தன் இரு கைகளையும் இலேசாகத் தட்டினான். அவன் கையைத்தட்டி முடிவதற்குள்ளாகவே கூடாரத்தின் வாசலில் காவல் காத்து நின்ற போர்வீரன் உள் நுழைந்து தலை தரையில் படும்படி வணங்கி நின்றான்.

"ஆகாபக்ஸியை அழைத்துவா"

ஆகாபக்ஸி அந்தப்புரக் காவலாளிகளான பேடிகளின் தலைவன்; எஜமானனுடைய விருப்பு வெறுப்புகளை நன்றாக அறிந்தவர்களிலே அவனை மிஞ்சியவர் யாரும் இல்லை. நாயையும் மிஞ்சிய எஜமான விசுவாசம் கொண்ட அந்த அபிசலீனியன் ஷாவின் பூர்ண நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். அந்தப்புரம் சம்பந்தப்பட்ட வரையில் அவனுக்குத் தெரியாத இரகசியமே இல்லை யெனலாம்.

அவன் வந்தபோது ஷா மஞ்சத்தினின்றும் கீழிறங்கிக் அந்தக் கூடாரத்திலே குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டிருந்தான். எஜமானனுடைய தோற்றத்தைக்கொண்டே அவன் மன நிலை எவ்விதம் இருக்கும் என்பதை வெகு எளிதில் அறிந்துகொள்ளும் சாமர்த்தியம் வாய்ந்தவன் ஆகாபக்ஸி. இல்லாவிட்டால் விதவிதமான மனோபாவங்களைப் பெற்றுள்ள அந்தப்புரத்துப் பெண்களையும் பேரழகிகளையும் கட்டி மேய்த்து எஜமானனுடைய நம்பிக்கையையும் பெற்று அந்த உத்தியோகத்தை நீண்ட காலமாக வகித்துவர முடியுமா?

ஷாவின் முகம் மலர்ந்து பிரசன்னமாக இல்லை. ஆனாலும் அவன் உள்ளம் ஏதோ ஓர் உணர்ச்சியால் நிறைந்திருந்ததென்பதையும், அவ்வுணர்ச்சி

யால் கடுமையான நிகழ்ச்சியோடு கொடூரமோ ஏதும் நடந்து விடாதென்பதையும் உணர்ந்து கொண்டான் ஆகாபக்சி. பல சமயங்களில் ஷா தன் கீழ் ஊழியம் பார்க்கும் வேலைக்காரர் களுடன் நெருங்கிப் பழகுவது உண்டு, அந்தச் சமயங்களில் அவர்களிடையே எஜமானன் வேலைக்காரன் என்ற வேற்றுமையே தோன்றாது. காடு, மலை, பாலைவனம் என்று பார்க்காமல் தினம் ஓர் இடத்தில் கூடாரம் போட்டுச் சதா போர்க்கோலத்துடனேயே வாழும் அவர்களிடையில் அத்தகைய வேற்றுமை அதிகமாகத் தலைக் காட்டாதுதான். எந்தச் சமயத்திலும் ஆபத்து நேரிடலாமென்பதை எதிர்நோக்கி நிற்கும் போது படைத்தலைவனும் போர் வீரனும் ஒரே நிலையில் தானே இருப்பர். ஆனால் ஆபத்து நீங்கிச் சுகமாக வாழ்க்கை கிட்டிவிட்டால், அவ்விதம் இருக்கமுடியுமா? ஆயினும் ஷா பெரும்பாலும் அதைப் பொருட்படுத்த மாட்டான்.

அதே மனப்பான்மை இப்போது அவனிடம் பிரதி பலித்து நின்றது. ஆகாபக்சி அவன் சமீபத்தில் வந்து முறைப்படி வணங்கித் தலை நிமிரும் வரையில்கூட ஷா காத்திருக்கவில்லை.

"சாயங்காலம் நடந்த விஷயங்களை அறிவாயா?" என்று அவனைப் பார்த்துக் கேட்டான் ஷா.

"கேள்விப்பட்டேன்".

"தீரம் மிகுந்த பெண் அவள்".

ஆகாபக்சி அதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஷா நினைப்பதற்கு மாறான தன் அபிப்ராயத்தை எந்த எந்தச் சமயங்களில் வெளியிடக் கூடாது என்பதை அவன் நன்றாக அறிவான். தவிர, அவன் பதில் பேசவில்லையென்பதையும் ஷா பொருட்படுத்தவில்லை. தன் கையில் வைத்திருந்த உடை வாளை அவன் விளக்கு வெளிச்சத்தில் மறுபடியும் ஒரு தரம் கூர்ந்து கவனித்தான்.

"மங்கை யொருத்தி வைத்து விளையாடிய பொம்மை" என்று அவனையும் மீறி அவன் வாய் முணுமுணுத்தது.

ஆகாபாக்சி அப்போதும் பதில் பேசவில்லை. எஜமானன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான்.

ஷா மேலும் பேசிக்கொண்டே போனான்.

"இதைக்கொண்டு அவள் இன்றைக்கு எத்தனை ஆண் சிங்கங்களை மிரட்டி விட்டாள்? அவர்கள் ஆண்களா! சுத்தப்பேடிகள். அவள் அன்றோ வீர மங்கை! அந்தப் பெண்ணுடைய தைரியமும் வீரமும் ஆண்களுக்கும் இருக்குமானால்—"

ஷா பேச்சை அப்படியே நடுவில் விட்டு விட்டு நிமிர்ந்து நின்று எதிரிலிருந்த ஆகாபக்சியைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தான். அவனோ முன் போலவே வாய் மூடி மௌனியாக நின்றான். அந்தக் கூடாரத்திலே ஒருகணம் நிச்சப்தம் நிலவியது.

அந்த அமைதியையும் ஷாவே கலைத்தான்.

"அவளைச் சந்தித்துப் பேச விரும்புகிறேன்."

இதைக்கேட்ட அந்தப்புரக் காவலன் திடுக்கிட்டுப் போனான். தன் எஜமானனைக் கண்டது முதலே இந்த விதமாக ஏதோவொன்று நேரிடபோகிறதென்பது அவனுக்குத் தெரிந்து விட்டது. ஆனாலும் அவன் இதை எதிர்பார்க்கவில்லை. அவ்விதமே நடப்பதாக இருந்தாலும் இவ்வளவு சீக்கிரமாக நேரிட்டு விடும் என்பதை அவன் கனவிலும் கருதவில்லை.

அந்தப்புர சம்பிரதாயங்களில் நன்றாகப் பழகி ஊறிப்போனவன் அல்லவா அவன்? தன் மனத்திலே எழுந்ததை அவன் வெளியிடவில்லை. அது மட்டுமா? அதைத் தன் முகத்திலும் பிரதிபலித்து விடாமல் உள்ளூறவே அமுக்கிக்கொண்டு சகஜமாகவே தன் எஜமானன் எதிரில் நின்றான்.

இனியும் அவன் பேசாமடந்தையாக இருக்க முடியாதே.

"தனியாகவா?"

இதை அவன் மிகுந்த தயக்கத்துடனேயே கேட்டான்.

"ஆமாம். ஏன், அதனால் என்ன?"

"இல்லை. அந்தப் பெண்......"

மேலே வாக்கியத்தை அவன் முடிக்கவில்லை. மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் திணறினான் ஆகாபக்சி.

"ஏன், அவள் எனக்கு ஏதாவது தீங்கிழைத்து விடுவாள் என்று பயப்படுகிறாயா?"

"இல்லை அவள் என்னசெய்துவிட முடியும்? ஷா இன்ஷா வல்லமைபொருந்தியவர். ஆனாலும் இந்த ஹிந்துஸ்தானிப் பெண்களிடம் எனக்கு நம்பிக்கையே இல்லை."

"நீ தவறாக எண்ணிவிட்டாய். மனத்திலே கொஞ்சமும் கபடம் இல்லாதவர்கள் அவர்கள். அந்தப் பெண் செய்யவிருந்த காரியத்தைச் செய்யத்துணியும் யாரையும் தாராளமாக நம்பலாம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகர்களைத்தான் நம்பலாகாது."

"அதைப்பற்றிச் சொல்லவில்லை. அந்தப் பெண்ணுக்குக் கொஞ்சம் சித்த சுவாதீனம் இல்லையென்றும் கேள்வி."

இதைக்கேட்ட ஷா கலகலவென்று நகைத்தான்.

"யாருக்குச் சித்த சுவாதினம் இல்லை. அதை உனக்குக் கூறியவர்களுக்குத்தான் அவ்விதம் இருக்கவேண்டும்.''

ஷா அதற்குமேல் பேச்சைவளரவிடவில்லை. தன் ஒரு கையை ஆகாபக்ஷியின் தோள்மீது கனிவுடன் போட்டு, "கவலைப்படாதே. அவள் என்னை யாதும் செய்துவிடமாட்டாள். அவளை உடனே இவ்விடம் அனுப்பு'' என்றான்.

அவன் இதைச் சாதாரணமாகத்தான் சொன்னான்.

ஆனாலும் அது அசைக்கமுடியாத ஓர் உத்தரவு, அரசன் ஆணை என்பதை அந்தப்புரக் காவலாளி அறிவான். ஷா இவ்விதம் கூறிவிட்டபிறகு, யார் வந்து எதைச் சொன்னாலும் அதை மாற்றமுடியாதென்பதும் அவனுக்குத் தெரியும். மற்றவர்கள் அதற்குக் கீழ்ப்படிந்து உடனே அதை நிறைவேற்றியாகவேண்டும்.

* * *

அன்றை மாலை நடந்த சம்பவம் ஷாவின் மனக்கண்ணைவிட்டு அகலவே இல்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும், கண்ணை விழித்திருந்தாலும் சரி, மூடியிருந்தாலும் சரி, அவன் அவளையே கண்டான்.

அவ்விடம் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த அடிமைப் பெண்களின் கூட்டத்திலே அவளது தோற்றம் எடுப்பாக, கம்பீரமாக விளங்கியது. அதை அவன் ஆரம்பத்திலேயே, கூடாரத்திற்குள் நுழைந்தவுடனேயே கண்டுகொண்டான். அவனது கூரிய பார்வையினின்றும்தான் எதுவும் தப்புவது அரிதாயிற்றே!

அவனுக்கு உலகத்திலேயே இரண்டுபொருள்களின்மீதுதான் ஆசையதிகம். ஒன்று குதிரை, மற்றொன்று பெண். இவ்விரண்டையும் பரீக்ஷித்து உத்தம ஜாதியைப் பொறுக்குவதில் அவன் சமர்த்தன். உயர்ந்த ஜாதிக் குதிரைகளைக் கண்டால் அவன் விடவே மாட்டான்; எப்படியாவது கைப்பற்றிவிடுவான். ஆனாலும் அவ்விதம் தனக்குக் கிட்டிய எல்லாக் குதிரைகளையும் அவனே வைத்துக்கொண்டுவிடமாட்டான். எல்லாவற்றையும் அவனே வைத்துப் பராமரித்துச் சவாரிசெய்து அனுபவிக்க முடியுமா? ஆகவே முக்கியமானவைகளைமட்டும் தன் சொந்த உபயோகத்துக்காக வைத்துக்கொண்டு மற்றவைகளைத் தன் அந்தரங்கமானவர்களுக்கும் தன் அன்புக்குப் பாத்திரமானவர்களுக்கும் அவர் அவர் தகுதிக்கு ஏற்பப்பகிர்ந்து கொடுத்துவிடுவான்.

குதிரை விஷயத்தில்தான் இப்படி. பெண்கள் விஷயத்தில் இப்படியில்லை. அவன் இதே முறையைக் கையாளவும் முடியாது. அதனால் அவனுக்கு எத்தனையோ தொந்தரவுகள் நேரிடக்கூடுமே. அவனோ போர்க்கோலத்துடன் இன்றைக்குத் தங்கிய ஊரில் நாளைக்குத் தங்காமல் படையை நடத்திச் செல்லவேண்டியவன். பக்கத்து நாடுகள் பலவற்றையும் வென்று அடிப்படுத்திப், பரந்த ஒரு சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டித்து, அதன் சக்ரவர்த்தியாகத் திகழவேண்டுமென்று அபிலாஷைபிடித்தவன். பெண் சபலம் அந்த வாழ்க்கைக்கு எவ்விதத்திலும் ஒவ்வாது. தன் உள்ளத்தைக் கவர்ந்த பெண்கள் எல்லோரையும் அவனே அடைந்து விடுவானாகில் அவன் அத்தனைபேரையும் எப்படிக் கட்டியாண்டு நாடோடியாகத் திரியத் தன்னுடன் அழைத்துச் செல்லமுடியும்? அதனால் அவன் ரூபசுந்தரிகளைக்கண்டு சந்தோஷித்து அவர்களோடு சிறிது நேரம் உரையாடி மகிழ்வுடன் விட்டு விடுவான்.

அன்றைக்கும் அவன் அம்மாதிரியான எண்ணத்துடன் தான் கிளம்பினான். ஹிந்துஸ்தானத்தின் பேரழகிகள் எப்படி யிருக்கிறார்கள் என்பதை நெருக்கதில் சென்று பார்த்து விடவேண்டுமென்ற சபலம் அவனுக்கு. உலகத்திலேயே மிக்க எழில் வாய்ந்தவர்களென்று பாரசீகத்தின் வடபகுதியில் வசிக்கும் மங்கையர்களையே குறிப்பார்கள். ஆனாலும் ஹிந்துஸ்தானப்பெண்மணிகளின் எதிரில் அவர்கள் அழகு அவ்வளவு பிரகாசமாகத் தோன்றாது என்பதையும் அவன் கேள்விப்பட்டிருந்தான். அதை நேரில் பரீட்சித்துப் பார்த்து விட வேண்டுமென்ற நீண்ட நாள் ஆசையையும் அன்றைக்குத் தீர்த்துக்கொள்ளவிருந்தான் அவன்,

அதேநோக்கத்துடன்தான் அவன் மொகலாயப் பாதுஷாவான முகமதுஷாவுக்கு அவ்விதம் ஆணையிட்டான்.போரில் தோல்வியடைந்த மொகலாய மன்னன் வேறு என்ன செய்யமுடியும்? அவனோ போர்க்களத்தையே காணாமல் அரண்மனையிலே சுகமான போக வாழ்க்கை நடத்தியவன். ஹிந்துஸ்தானத்தின் மீது படையெடுத்துவந்த நாதிர்ஷாவோ ரத்த வெறிபிடித்தவனேபோல முரட்டுப் போர் வீரர்களை நடத்திவந்து மூர்க்கமாக யுத்தம் செய்தான். அதுமட்டுமா? இடையில் உள்ள நாடு நகரங்களையும் கொள்ளைகொண்டு ஸாம்ராஜ்யத்தின் தலைநகரான டில்லிக்கும் அவன் வந்துவிட்டான். கடைசியில் வேறு வழியில்லாமல் முகமதுஷா அவன் முன்னால் மண்டியிட்டுச் சமாதானத்தை வேண்டினான்; அதற்காகப் பாரசிகன் கேட்டவை எல்லாவற்றையும் அளிக்கச் சம்மதித்தான்; அவன் இழைத்த அவமானங்களுக்கும் உட்பட்டான்.

நாதிர்ஷாவும் ஒன்றும் அதிகமாகக்கேட்டுவிடவில்லை. பத்து யானை, நூறு குதிரை, ஐம்பது அடிமைச் சிறுவர்கள், ஐம்பது அடிமைப் பெண்கள் இவ்வளவுதான். பரந்த ஒரு ஸாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியான மொகலாய மன்னன் தன்னை வெற்றி கொண்ட நாதிர்ஷாவுக்கு அளிக்கும்

வெற்றிக் காணிக்கையெனக் கணக்கிட்டுப் பார்த்தால் இது மிகவும் குறைவு என்றே தோன்றும்.

ஆனல் இந்தக் காணிக்கையைப் பாதுஷா பிறந்த மேனியாக அனுப்பமுடியாதே; சர்வாபரண பூஷிதமாக உயர்ந்த ஆடை முதலியவற்ருல் நன்ருக அலங்கரித்து அந்த ஆடையாபரணங்களுடனே சேர்த்துக் காணிக்கை செலுத்த வேண்டும். மற்றும், ஒன்று பரிசாக அனுப்பப்பெறும் யானை குதிரைகளும் சரி, அடிமைகளும் சரி, அங்க லக்ஷணத்தில் எந்த விதமான குறைபாடுகளும் இல்லாமல் நிறைந்து விளங்கவேண்டும். இவ்விதம் திரட்டிச்சேகரித்த காணிக்கையைப் பாதுஷா அன்றைத்தினம் மாலைக்குள்ளாகவே செலுத்திவிட வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தான் நாதிர்ஷா.

சூரியாஸ்தமனம் ஆகியும் காணிக்கை வந்து சேரவில்லையே என்று நாதிர்ஷா குமுறிக்கொண்டிருந்த சமயம்தான் அவர்கள் வந்து சேர்ந்தார்கள். நன்ருக இருட்டிவிட்டது. அதனல் அவன் யானை குதிரைகளை மேலெழுந்தவாரியாகப் பார்த்து, மறுநாட்காலையில் அவற்றைப் பரீக்ஷிப்பதாகக் கூறிவிட்டு அடிமைகளையும் பணிப் பெண்களையும் கண்காணிக்க வந்தான்.

அடிமைச் சிறுவர்கள் ஒரு கூடாரத்திலும் பணிப்பெண்கள் மற்ருெரு கூடாரத்திலும் நிறுத்தப் பெற்றிருந்தனர். பணிப் பெண்களைப் பார்க்கவே நாதிர்ஷா முதலில் வந்தான். அடிமைகள் அவர்கள் கேவலமானவர்கள் அல்ல. அவர்கள் அடிமையாகப் பிறக்கவும் இல்லை; வளரவும் இல்லை. உயர்ந்த குடும்பத்தில் பிறந்து சீரும் செல்வமுமாக வளர்ந்தவர்களே. விதிவசத்தால் அவர்கள் இன்றைக்கு அடிமைகளாகச் சிக்கிக் காணிக்கைப் பொருள்களாக மாறினர். சர்வாங்க சுந்தரிகளான அவ்வைம்பது பேர்களைப் பொறுக்கி எடுக்க முகம்மதுஷா பட்டகஷ்டமே அதை எடுத்துக் காட்டும்.

அடிமைப் பெண்கள் இருந்த கூடாரத்திலே நாதிர்ஷா நுழைந்தபோது அவன் கண்டகாட்சி அவனுடைய மனத்துக்கு ஒரு திருப்தியை அளித்தது. அத்தகைய வரவேற்பு அவனுக்குப் புதியதல்ல. எனினும் சுகபோகங்களை அனுபவிப்பதிலும் மென்மையுணர்ச்சி எவ்வளவுதூரம் பிரதிபலிக்கிறதென்பதை அவன் அங்கே கண்டான்.

நாதிர்ஷாவுக்கும் சுகபோகங்களுக்கும் வெகுதூரம். சதாகாலமும் படைதிரட்டிப் போர்புரிவதிலேயே நோக்கம் கொண்டவனுகத் தன் வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்த அவன் சுகபோகங்களைப்பற்றிக் கனவிலும் நினைந்தது இல்லை. கரடுமுரடான வாழ்க்கையில் ஆழ்ந்திருந்த அவனுக்கு மொகலாயர்கள் போலப் போகங்களை அனுபவிக்க முடியுமென்பதுகூடத் தெரிந்திருக்காது.

காஷ்மீரப் பச்சைக் கம்பளங்களை விரித்துக் கூடாரத்தை அலங்கரித்திருந்தார்கள். இயற்கை யன்னையின் பசும்புல் தரையேபோல் அது தோற்றம் அளித்தது. ஐம்பது பணிப்பெண்களும் இரண்டு வரிசையாகக் கூடாரத்தின் இருமருங்கிலும் நின்றிருந்தனர். வரிசைக்கு இருபத்தைந்து பேர் இருந்தனர், இரண்டு வரிசைக்கும் நடுவில் பேடி ஒருவன் முத்தும் மணியும் இழைத்த பாப்பாசு ஒன்றைத் தன் கையில் ஏந்தி அவர்களை மேய்த்து வந்தான், ஆம், அந்தப் பெண்களும் தன்னைப்போலவே ஆறறிவுபடைத்த மனிதப் பிறவிகள்தாம் என்ற நினைப்பே அவனுக்கு இல்லை. ஆடுமாடுகளைப்போலவே அவர்களை நடத்திவந்தான் அவன்.

நாதிர்ஷா உள்ளே நுழைந்தவுடன் அங்கே இருந்தவர் அனைவரும் தலை பூமியில் படும்படியாகத் தாழ்ந்து வணங்கிச் சலாம் செய்துவிட்டுத் தலைகவிழ்ந்தபடியே மரியாதையாக ஒடுங்கி நின்ருர்கள்.

பாரசிகத்து ரூப சுந்தரிகளை ஹிந்துஸ்தானப் பெண்களின் ரூப லாவண்யம் தோற்கடித்து விட்டது. லக்ஷணப்படி அமைந்து, கண்டோரை மயக்கும் அங்க அமைப்பு வாய்ந்த இத்தகைய சுந்தரிகளை அவன் அதற்கு முன் கண்டதே இல்லை.

மேலெழுந்தவாரியாக அவர்களை ஷா கவனித்தான். அந்த ஒருத்தி அவர்களிலே தலை சிறந்து விளங்கினுள். இரண்டு வரிசைக்குமிடையிலே மெதுவாக நடந்து வந்த அவன் அந்தப் பெண் இருந்த இடத்துக்கு நேராக வந்ததும் அவளையே சிறிது நேரம் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்று விட்டான்.

சிறுத்த இடையும் துவளும் மேனியும் பெற்றிருந்த அவள் பூர்ண வளர்ச்சிபெற்று ஒவ்வோர் அங்கத்திலும் பெண்மை மிளிரப் பொலிவுடன் காணப்பட்டாள். இருபது வயதுக்குமேல் இராது. எனினும் அங்கே வந்திருந்த மற்றவர்களைக் காட்டிலும் அவள் ஒருபிடி உயரமாக இருந்தாள். கறுத்துப் பளபள வென்று மின்னும் கூந்தலும் கயல் விழியும் கொண்ட அவள் மான் போல் மருண்டு பார்த்தாலும், அவள் தோற்றத்திலே ஓர் அகங்காரம் மிகுந்து நின்றது. சந்தைக் கடையிலே விற்பனைக்கு வந்திருக்கும் ஒரு பொருளைப் போல அவ்விடம் வந்திருப்பதை யெண்ணி உள்ளம் குலைந்து உடல் குன்றியிருந்த நிலையிலும் அவள் தலை நிமிர்ந்து கம்பீரமாக விளங்கினுள்.

"இவள் யார்?"

இந்தக் கேள்வியை நாதிர்ஷா பாரசீக மொழியிலே கேட்டான், அவர்களை அழைத்து வந்து காவல் காத்து நின்ற பேடியைப் பார்த்து.

"ஹுஜூர், அவர் ஒரு ராஜபுத்திர கன்னிகை".

பேடி இவ்விதம் கூறியதும் அந்தப் பெண் நாதிர்ஷாவின் முகத்தை ஒருதடவை ஏறிட்டுப் பார்த்தாள்.

"ராஜபத்தினி, கன்னிகையல்ல. ஏற்கனவே மணம் ஆனவள்."

இதை அவள் படபடப்பு ஏதும் இல்லாமல் நிதானமான குரலில் அதே பாராசிகமொழியில் உரைத்தாள்.

இவ்விதம் அவள் சொன்னது நிச்சப்தமாக விளங்கிய அந்தக் கூடாரத்திலே ஒரு பெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அது சம்பிரதாயத்துக்கு விரோதம் என்பதுமட்டுமல்ல; விபரீதமான நிகழ்ச்சிகள் அதன் விளைவாக நேரிட்டுவிடவும் கூடும். இவ்வளவு தூரம் சிரமப்பட்டு எத்தனையோ அவமானங்களுக்கும் உட்பட்டுச்செய்து கொண்ட சமாதானம் நிலை குலைந்து பழைய படியே போர்மூண்டுவிடவும் கூடுமே. அவளை வாயைத் திறக்கவிட்டதன்றோ பெரும்பிழையாய்ப் போய்விட்டது.

அதனால் சட்டென்று அந்தப் பேடி முன்வந்து, அவளை வாயில் அடித்துவிடுவதேபோலத் தன் கையிலிருந்த கல்லிழைத்த பாப்பாசை ஓங்கினான். நடந்தவரையிலாவது தொலையட்டும். மேலும் விபரீதம் ஏதும் உண்டாகாமல் தடுத்துவிடலாமே என்ற யோசனைபோலும். ஆனால் அடுத்த க்ஷணமே அவன் படம் விரித்த பாம்பைக் கண்டது போலப் பயந்து உடல் விலவிலக்கப் பின்னடைந்தான்.

அவள்தான் அந்தப்பேடியை அப்படி மிரட்டினாள். அவன் தன்னை யடிக்கவருவதை யறிந்த அவள் தன் மார்பகத்து ஆடையின் உட்புறத்திலிருந்து உடைவாள் ஒன்றை உருவி அதைக் கெட்டியாக அவன் எதிரே பிடித்து நின்றாள். அந்த வாளின் நுனியை அவள் கீழ் முகமாகப் பிடித்திருந்தாலும், அவள் கண்களில் தீப்பொறியிட்டுக் கிளம்பிய ஜ்வாலை அவள் எதற்காக அதை உருவினாள் என்பதை எடுத்துக்காட்டி அச்சுறுத்தியது.

ஷாவோடு அப்போது வேறு இருவர் உடன் இருந்தார்கள். போர்முகத்தே பாடியிறங்கியிருக்குங் காலங்களில் தனக்கு முக்கியமான ஒன்றிரண்டுபேர்களைத் தன்னுடன் உண்ணுவதற்கு ஷா அழைப்பது வழக்கம், நாடோடி வாழ்க்கை மேற்கொண்டிருந்த அவனுக்கு அது பல சமயங்களில் மனச் சாந்தியை அளித்திருக்கிறது. அன்றைக்கும் அவன் அதேபோலத்தான் அவ்விருவரையும் அழைத்திருந்தான்.

அவர்களிலே ஒருவன் காசிம்கான் என்ற பாரசீக இளைஞன். மற்றவன் முபராக் என்னும் எல்லைப்புற மாகாணத்தான். அந்தப் பெண் உருவிய உடைவாள் விளக்கு வெளிச்சத்திலே பளபளவென்று மின்னியதைக் கண்டு காசிம் ஓர் அடி பின்னடைந்தான். ஆனால் முபராக்கோ முன் நோக்கி நடந்து அவளுக்கும் ஷாவுக்கும் இடையில் குறுக்கே போனான். ஒருவன் தன் உயிருக்குப் பயந்து பின்னடைந்தான். மற்றவன் ஷாவைக் காப்பாற்ற முன் விழுந்தான்.

ஆனால் ஷா சிறிதும் கலங்கவில்லை. அவன் நிலையிலே எந்த விதமான மாறுதலும் உண்டாகவில்லை. நிலைபெயரவில்லை. அவன் அந்த நிலையிலேயே அவன் தன் தலையை ஒருபுறமாகக் சாய்த்துப் பின்னடைந்த காசிம்கானை நோக்கினான். அவன் பார்வையில் இகழ்ச்சியே மேலோங்கி நின்றது. "ஷாஇன்ஷா மன்னிக்கவேண்டும். நான் என்ன கத்திபிடித்துச் சண்டைபோடும் போர் வீரனா? பேனா பிடித்துக் கணக்கு எழுதும் கணக்குப்பிள்ளைதானே" என்று கெஞ்சினான் காசிம். 'உம், என்ற திக்காரத் தொனியுடன் ஷா திரும்பிவிட்டான்.

அவன் முபராக்கையும் விட்டுவிடவில்லை. ஒரு கையால் அவனைப் பிடித்துத் தன் பக்கத்தில் இழுத்துக்கொண்டான். அந்தப் பெண் கத்தியை உருவினாலும் அதனால் தனக்கு ஒன்றும் கெடுதி நேரிடாது என்பதை அவன் நன்றாக அறிவான்.

மன்னன் அந்தப் பெண்ணையே சிறிது நேரம் கூர்ந்து கவனித்து நின்றான். அவன் பார்வையில் ஆச்சரியமும் புகழ்ச்சியும் கலந்து தோன்றின.

"அந்தக் கத்தியை என்னிடம் கொடு."

கம்பீரமாகவும் திடமாகவும் எழும்பிய அக்குரல் அவளுக்கு ஓர் ஆணையாகவே ஒலித்தது, சக்கரவர்த்தியை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்தாள் அவள்: சிறிது தயங்கினாள். அப்பால் ஏதும் பேசாமல் கத்தியை அவனிடம் அளித்து விட்டாள். அவனும் அதை வாங்கி அலக்ஷியமாகத் தன் இடுப்பிலே சுற்றியிருந்த சால்வையில் செருகிக்கொண்டான்.

"அரசன் எதிரில் கத்தியை உருவினால் அதற்கு என்ன தண்டனையென்பது உனக்குத் தெரியுமா?"

அவள் பதில் பேசாமல் மௌனமாகவே நின்றிருந்தாள்.

"சிரச்சேதம்தான்"

அதற்கும் அவள் வாயை மூடிக்கொண்டிருந்தாள்; ஆனால் அவளுடைய மார்பு மட்டும் ஒரு தரம் விம்மி வடிந்தது.

மன்னன் அந்தப் பேடியைப் பார்த்து, "மரியாதை கெட்ட நாயே! மொகலாயச் சக்கரவர்த்தியின் ஊழியன் ஆனதால் பிழைத்தாய். இல்லாவிட்டால் இதற்குள் உன் முதுகுத் தோல் உரிந்து போயிருக்கும்" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தினின்றும் கிளம்பிவிட்டான்.

அவன் ஒரு தடவை அந்தக் கூட்டத்தின் மறு கோடி வரையில் ஒவ்வொரு பெண்ணையும் பார்த்

தூக்கொண்டே போனான். திரும்பிவரும்போதும் அவன் அந்தப் பெண் எதிரே ஒரு கணம் தயங்கி அவளைக் காலோடு தலை ஏற இறங்க ஒருதரம் பார்த்தான். மேலே ஒன்றும்பேசவில்லை. அந்தக் கூடாரத்தை விட்டுக் கிளம்பி நேராக வெளியே வந்தான்.

அதற்குப் பிறகு அவனுக்கு அந்த பெண்ணைப் பற்றிய எண்ணமே.

சூரியன் அஸ்தமித்துப் பத்து நாழிகைக்கு மேலாகிவிட்டது. பாரசிகப்படை பாடியிறங்கியிருந்த இடத்தைச் சுற்றிப் போர் வீரர்கள் ரோந்து சுற்றி வரும் சப்தமும் தூரத்தில் ஒன்றிரண்டு நாய்கள் ஒற்றைக் குரல் பாய்ச்சிக் குறைக்கும் சப்தமுமே நிலவின. அந்த இடம் நல்ல விசாலமான பரந்த வெளிதான். எனினும் வானத்திலே எந்த விதமான சலனமும் இல்லாமல் மோன நிலையே குடிகொண்டிருந்தது.

பகலில் கொளுத்திய வெப்பம் பூமியைத் தாக்கிச் சூரியாஸ்தமனத்துக்குப் பிறகு ஆவியாக மாறி வெளிக்கிளம்பி எல்லோரையும் வதைத்தது. ஷாவுக்கும் தூக்கம் வரவில்லை. தன் அந்தப்புரத்தை நாடிச் சென்றான். அங்கேயும் அவனுக்கு மனசு நிம்மதியடையவில்லை. எங்கே திரும்பினாலும் அவள் தன்னெதிரே நிற்பது போலவே அவனுக்குத் தோற்றம் உண்டாயிற்று. அதனாலே அவளை நேரில்காண விரும்பி அழைத்துவரச் சொன்னான்.

(அடுத்த இதழில் முடியும்)




ரொக்கப்பரிசு ரூ. 1000

( அபூர்வ சக்தியுடையது )

# மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C. K.)

JULLUNDUR CITY. Pb.



# சிற்பியின் கடிதம்

வ.அ. இராசரத்தினம்

மைந்த, வாழ்க்கையில் அவன் காணமுயற்சித்த லட்சியத்திற்கும் இந்த உலகிற்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை. தான் அடைய விரும்பியதைத் தன் வாழ்நாளில் அடைந்துகொள்ளமுடியாமல் புழுங்கிச் சாம்பிய மனதோடு மறைந்தே விட்டான் அவன்.

ஆம்; எதற்காகத் தன்னைத்தானே பைத்தியக்காரன் ஆக்கிக் கொண்டானோ அதற்காக, அந்தக் கலையின் லட்சியத்திற்காக உலகம் அவனைப் பலி வாங்கிவிட்டது. இல்லை, அவன் தன்னைத்தானே பலியிட்டுக்கொண்டான்.

அவன் மறைந்து பன்னூறாண்டுகள் ஆகிவிட்டன. அவன் இவ்வுலகைவிட்டுச் சென்றபோது தனக்காக எதையுமே கொண்டுபோகவில்லை, ஆனால் அவன் விட்டுச்சென்ற எல்லாமே, இன்று ஆயிரமாயிரம் கற்பனைகளைக் கிளறும் அமர சிருட்டிகளாக ஆகிவிட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக அவன் எழுதிச்சென்ற அந்தக் கடிதம்—உலகத்தையும் சமூகத்தையும்பற்றி அவன் கொண்டிருந்த அபிப்பிராயம், ஓர் புரட்சி இலக்கியமாகவே இருக்கிறது,

அந்தச் சிற்பி, பணத்திற்காக அல்ல—லட்சியத்திற்காகச் சிற்பத் தொழிலை மேற்கொண்டான். ஆனால் அதே லட்சியத்திற்காகத் தன்னைத்தானே பாழ்படுத்திக்கொண்ட அந்தக் கதை...... ஆம்; கதை என்றுதான் வைத்துக்கொள். கதைகேட்கமுன் ஜன்னலைச் சாத்திவிடு. குளிர் காற்றடிக்கிறது.

2

பிரிய, ஆயிரமாண்டுகட்கு முன்னே அடுத்தடுத்து நிகழ்ந்த தமிழரின் படையெடுப்புக்களால் இலங்கையின் அரசியல் நிலை சீர்குலைந்திருந்தது, பொருளாதாரநிலை குன்றிப்போயிருந்தது. நாடெங்கும் வறுமை கோர தாண்டவமாடியது. சப்த நாக்குகளையும் சுழற்றி நின்றெரியும் அக்கினியாய்ப் பற்றியெரிந்த மக்களின் வயிற்றுப் பசியின் எதிர்த் தாக்குதலுக்குப் பயந்து, சிங்களமன்னர்கள் இடத்துக்கிடம் தங்கள் இராசதானிகளை மாற்றிக்கொண்டிருந்தனர். மக்களிடையே எங்கும் அதிருப்தி...... மன உளைச்சல்.......

மன்னர்களின் மணிமுடியணிந்த தலைகட்கு யாரால் எப்போது ஆபத்து வரும் என்று சொல்ல முடியாதிருந்தது. ஆம்; ஓரிரவுமட்டும் அரசாண்ட மன்னர்களைப் பற்றி இலங்கையின் பூர்வ சரித்திரத்தில் எழுதப்பட்டிருப்பதை நீ நம்பக்கூட மாட்டாய்.

அரசியல் நிலை இப்படிச் சீர்கேடாயிருந்த அந்தக் காலத்திலேதான், இலங்கையின் சிற்பக்கலையிலும் சித்திரக்கலையிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. சோழ, பல்லவக் கலைகள் இலங்கையின் புராதனக் கலைகளோடு இரண்டறக்கலந்து ஓர் மறுமலர்ச்சியை உண்டாக்கின. திருவடி தூக்கி நின்றாடும் தில்லை நடராசனின் உருவச்சிலையைச் சிங்களக் கலைஞர்களே கல்லில் வடிக்கத் தொடங்கினார்கள்.

மைந்த, கதை சொல்லாமல் ஏதேதோ சரித்திரம் சொல்கிறேன் என்று அலுத்துக்கொள்கிறாயா? இந்தச் சூழ்நிலையில்தான் நம் கதாநாயகன் பிறந்தான் என்பதற்காகத்தான் இவ்வளவையும் சொல்ல வேண்டியிருந்தது. இனி நேரடியாகக் கதையைச் சொல்கிறேன் கேள்.

நாணிக்கொண்டு மென்னடை நடக்கும் பெண்ணைப் போல, அன்ன நடை பயின்றோடும் மகாவலிகங்கை தீரத்தில் ஓர் சாதாரண கமக்காரனுக்கு மகனாகப் பௌத்தசாரன் பிறந்தான். 'தானுண்டு தன் நிலமுண்டு' என்று வாழ்ந்த அவன் தந்தை அரசியற் சூதாட்டத்திற் காயாக உருட்டப்பட்டுத் தமிழரோடு நடந்தபோரிலே, அரசனுக்காக மாண்டான். ஏற்கனவே தாயை இழந்திருந்த பௌத்தசாரனும் அநாதையானான்.

குழந்தைப் பருவத்திலே அநாதையாக விடப்பட்ட பௌத்தசாரனுக்குக் கற்பனை பண்ணப் போதிய அவகாசமிருந்தது. அத்துடன் பிறவிக் கொடையோ என்னவோ, தன் கற்பனைகட்குக் கல்லிலே உருவம் கொடுக்கும் கைத்திறமையும் இருந்தது. அந்தத் திறமையை விருத்திசெய்வதற்காக அவன் அலையாத நாடில்லை.........போகாத ஊரில்லை......

நாளாக ஆகக் கல்லுக்கு உயிரூட்டும் அந்தக் கலையில் அவனுக்கு ஓர் பைத்தியமே பிடித்துவிட்டது. ஊணின்றி, உறக்கமின்றி, தன் சிறிய குடிசையிலே, தனிமையிலே தன் ஆசைக் கனவுகட்கு, லட்சியங்கட்குக் கல்லிலே உருக் கொடுத்துக்கொண்டிருந்தான். அப்படிச் செய்துகொண்டிருப்பதில் அவனுக்கு ஒரு திருப்தி.........மன நிறைவு......

ஆனால் எந்தக் கலைஞனும் இந்தத் திருப்தியோடு மட்டும் வாழ்ந்துவிட முடியாது. அவன் செய்வது 'சரி, பரவாயில்லை' என்றாவது சொல்ல யாராவது ஒருவர் வேண்டும். அவன் உள்ளங்குளிரும் படியாக இரண்டொரு புகழ் வார்த்தைகள் வேண்டும். இவைமட்டும் இருந்தால் கலைஞன் ஓர் உலகத்தையே சிருட்டித்துவிடுவான்!

ஆனால் இதைச் சொல்லத்தான் பௌத்த சாரனுக்கு எவருமே இருக்கவில்லை. அதற்கு மாறாக உலகம் அவனைப் பைத்தியக்காரன் என்று பரிகசித்தது. அவனைப் பற்றியும், அவன் கலா மேதையைப் பற்றியும் உலகம் தெரிந்துகொள்ளவில்லை. ஏன்; தெரிந்துகொள்ளவேண்டிய அவசியத்தையாவது உலகம் தெரிந்துக்கொண்டிருக்கவில்லை.

இதையிட்டுப் பௌத்த சாரனும் அதிகம் கவலைப்படவில்லை, உலகம் உளுத்துப்போன முருங்கை மரம் என்பது அவன் அபிப்பிராயமாகிவிட்டிருந்தது. புத்ர, பௌத்த சாரனுக்குப் பிடித்த கலைப் பைத்தியம் நன்றாக முற்றட்டும். வா; நாம் அவனை விட்டுவிட்டு மறுபடியும் இலங்கை அரசியலைச் சிறிது கவனிப்போம். அதைக் கவனிக்காவிட்டாற் கதைப்போக்கே தடைப்பட்டுவிடும்.

3

இலங்கையின் அரசியல் நிலை சீர் குலைந்து கிடந்தது என்று ஏற்கனவே சொன்னேன் அல்லவா? இருள் மண்டிக்கிடந்த அவ்வேளையிலே, இருளைக் கிழித்துக்கொண்டு தோன்றிய இரவியைப் போல அரசியல் வானத்திற் பராக்கிரமபாகு மன்னன் தோன்றினான், இலங்கைச் சரித்திரத்தில் ஒப்பாரும் மிக்காரும் அற்றவனாய், சரித்திர ஆசிரியர்களால் 'மகா' என்ற அடைமொழி கொடுத்து எழுதப்பட்ட இம்மன்னன், தந்தை வழியால் தமிழ் இரத்தக் கலப்புள்ளவன். இவன் குறுநில மன்னர்களின் கீழ்ச் சிதறுண்டு கிடந்த நாட்டை ஒன்றாக்கி, இலங்கையை ஒரு குடைக்கீழ்க் கொண்டுவந்தான். அதுமட்டுமல்ல; வடக்கே சோழரையும், கிழக்கே அரமனா நாட்டையும் வென்றான். இவ்வெற்றிகளின்பின் பொல்ல நறுவையைத்தன் இராசதானியாக்கிக் கொண்டு, நாட்டின் அபிவிருத்திக்கு ஆகவேண்டுவனவற்றைச் செய்வதில் ஈடுபட்டான். குளங்களைக் கட்டத் தொடங்கினான். கால்வாய்களை வெட்டத் தொடங்கினான். பௌத்த விகாரங்களையும், சிவாலயங்களையும் கட்ட ஆயத்தமானான்.

ஆலயங்களைக் கட்டவும், அதிலே அமரனின் திருவுருவங்களை அமைக்கவும் மன்னனுக்கு ஏராளமான சிற்பிகள் தேவையாயிருந்தனர். நாட்டின் பலபாகங்களிலிருந்தும், ஏன் வெளி நாடுகளிலிருந்தும்கூடச் சிற்பிகள் அழைக்கப்பட்டனர்.

இந்த நேரத்தில் பௌத்த சாரனின் நண்பன் ஒருவன் அரசனிடம் போகும்படி புத்திகூறினான். 'அங்கே சென்றால் அவன் கலை அமரத்துவம் அடையும், அவனும் பேரும் புகழும் அடைவான்' என்று ஆசைவார்த்தை கூறினான்.

தன் லட்சியத்தை அடையத் துடித்துக்கொண்டிருந்த பௌத்த சாரனும் அதற்குச் சம்மதித்து அரசனிடம் போனான்.

மன்னன் ஆக்ஞைப்படி பொல்ல நறுவையைச் சுற்றிலும் பௌத்த விகாரங்களும் சிவாலயங்களும் நிர்மாணிக்கப்பட்டன. பிட்சா பாத்திரம் ஏந்திய புத்தபிரானையும், மன்றுளாடும் சிவனாரையும், ஜாதகக் கதைகளில் வரும் பல சம்பவங்களையும் செதுக்கும்படி வெவ்வேறு சிற்பிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

ஆனால் இளமையிலேயே தாய் தந்தையரை இழந்து, வறுமையின் கோரப் பற்களிற் சிக்கி, வாழ்க்கையின் வக்கிர விசித்திரங்களை அனுபவித்து, மனங்கசந்துபோன பௌத்த சாரனுக்குக் கடவுள் என்ற ஒன்று இருப்பதாகக் கற்பனை பண்ணக்கூட முடியாதிருந்தது. அர்த்தமற்ற வெட்டவெளிக்குக் கண்ணும் மூக்கும் வைத்து ஒட்டும் பிள்ளைவிளையாட்டு அவனுக்குப் பைத்தியக்காரத்தனமாகப்பட்டது. எனவே அந்த வேலையைச் செய்யக் கண்டிப்பாக மறுத்துவிட்டான். அதன்முடிவாகத் தன் குடிசையிலே மறுபடியும் பைத்தியக்காரன் என்ற நிலையில் ஒதுக்கப்பட்டுத் தனக்குப் பிடித்தமான, தன் கற்பனையிலுதித்த

கனவுகட்கு உருக் கொடுத்துக்கொண்டு வாழ்ந்தான். நாளுக்குநாள் அவன் குடிசையிற் கருங்கற்கள் உயிர்பெற்று வந்தன. சரி, இனித்தான் கதையின் முக்கியமான கட்டம் வருகிறது, சார்ந்துகொண்டேயிருந்தால் நித்திரையாகி விடுவாய்; நிமிர்ந்திருந்து கேள். விளக்கையும் தூண்டிவிடு·

## 4

ஒரு நாள்......

மன்னன் மனைவி லீலாவதி, தன் பரிவாரங்களுடன், நிருமாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் புதுக் கோயில்களைப் பார்வையிட்டுக்கொண்டே வந்தாள். அவர்கள் வரும் வழியில்தான் பௌத்த சாரனின் சிறு குடிசையும் இருந்தது. நடையிலேயே அக்கூட்டம் குடிசையில் இருக்கும் பல்வேறு சிற்பங்களையும் பார்த்துக்கொண்டு சென்றது.

ரசனையற்ற மனித சமூகம் என்பதைப் பொய்ப்பிப்பதற்காகவோ என்னவோ அந்தக் கூட்டத்தில் ஒரு பெண் ஓர் சிலையை ஆசையோடு உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தாள். அவளோடு வந்த கூட்டமும் அவளை மறந்து போய்விட்டது. அந்தப் பெண்ணும் தன்னை மறந்து அச்சிலையையே பார்த்துக்கொண்டிருந்தாள்!

எங்கோ வெளியே சென்றிருந்து, அப்போதுதான் தன் குடிசைக்குள் நுழைந்த பௌத்த சாரன், தன் சிலை ஒன்றை ஊன்றிக் கவனித்துக்கொண்டிருந்த அப் பெண்ணைக் கண்டு தன் கண்களையே நம்பாதவனாய் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றான். ஆம்; அந்தப் பெண் ஊருக்கே—இல்லை—இந்த உலகத்துக்கே ஒருத்தி.

சிற்பி மெதுவாக அவள் அருகிற் சென்று கேட்டான்: சிலை நன்றாயிருக்கிறதா?

அவளிடமிருந்து பதில் இல்லை. பௌத்த சாரனின் கேள்வியே அவள் காதில் விழவில்லை.

சிற்பி திரும்பவும் கேட்டான் "சிலை அழகாயிருக்கிறதா?"

அவள் கனவுலகிலிருந்து விழித்துக்கொண்டவள்போல "ஆ, என்ன கேட்டீர்கள்" என்றாள்.

"சிலை நன்றாயிருக்கிறதா என்று கேட்டேன்" என்றான் அவன்.

"ஆம், அழகாயிருக்கிறது. அற்புதமாயிருக்கிறது. தாய்மையின் உயர்ந்த தத்துவம் எவ்வளவு இலகுவாக விளக்கப்பட்டிருக்கிறது. இச்சிலையில், இதைச் செதுக்கிய சிற்பியை உங்கட்குத் தெரியுமா?

"ஆம்; தெரியும். அவன் என் நண்பன்" என்றான் சிற்பி.

"உயர்ந்த கலைஞன்தான் உங்கள் நண்பன். நீங்கள் இந்தச் சிலையைக் கவனிக்கவில்லையா?

"பார்த்திருக்கிறேன். ஆனால் விளங்கிக்கொள்ளவில்லை" என்றான் சிற்பி.

அவள் திரும்பவும் ஓர்முறை சிலையைப் பார்த்துவிட்டுச் சொன்னாள். "உண்மையாகவே கலையை விளங்கிக் கொள்வதற்குப் பழக்கம் வேண்டும். ஏன்? அதுவும் ஒரு கலைதான். இதோ இந்தச் சிலையைப் பாருங்கள். கொட்டும் மழையில் தங்குவதற்கு, அந்த ஏழைத்தாய் ஓர் மரத்தடியில் ஒதுங்குகிறாள். கிழிந்து கந்தலான ஆடையால் தன் பாலனைத் தன் அடி வயிற்றோடு அணைத்து மறைத்துக்கொண்டும், மரத்திலிருந்து சொட்டும் மழைத் தண்ணீர் தன் குழந்தையை நனைத்துவிடாமல் கூனிக்கொண்டு தன் முதுகினால் குழந்தையை மறைத்து......ஆ; எவ்வளவு தத்ரூபமாக இருக்கிறது."

"ஆம்; உயர்ந்த கற்பனைதான். ஆனால் இதை உணர்வதற்கு மனிதனுக்குப் பொறுமையில்லையே" என்று அலுத்துக்கொண்டான் சிற்பி.

"பொறுமையில்லைதான். எனக்கு உங்கள் நண்பரைப் பார்க்கவேண்டும் என்று ஆசை. எப்போ பார்க்கலாம்?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"எப்போது என்பது இல்லை. அவனுடைய சிற்பங்களை விளங்கிக்கொள்ளத் திராணியுள்ள உங்களைப்போன்ற ரசிகர்கட்கு அவன் எப்போதுமே அடிமையாகி விடுவான். நாளைக்கே நீங்கள் அவனைப் பார்க்கலாம்" என்றான் சிற்பி.

"அப்படியானால் நாளைக்கே வருகிறேன்" என்று அவனிடம் சொல்லிவிட்டு, அந்தப்பெண் விடைபெற்றுக்கொண்டாள், அவள் போகும் திக்கையே கண்ணிமைக்காது கவனித்துக் கொண்டிருந்தான் சிற்பி, அவன் கண்களிலிருந்து அவள் மறைந்துவிட்டாள். ஆனால் வைகறையின் குளுமையில், வெண்ணகை காட்டிப் புதுப்பனி தோய்ந்து அசையும் மல்லிகையின் நறுமலர் போன்றிருந்த அவள் முகத்தின் யௌவன சௌந்தர்யம் அவன் கண்களிலிருந்து மறையவில்லை, இளமையின் பெருமிதத்தோடு விம்மிப் பொருமி நின்ற அவள் மார்பும், உருக்கக்கூடிய தந்தத்தையும் பொன்னையும் ஒன்றாகச் சேர்த்து உருக்கி வார்த்தது போன்றிருந்த உடலமைப்பும், ஒடிந்துவிடும்போல் இருந்த அவள் இடையும்......

வாரம் ஒன்றாகிவிட்டது.

'நாளைக்கே வருகிறேன் என்று சொல்லிப் போன அந்தப்பெண் இன்னமும் வரவில்லை. அரண்மனைத்தாதி அல்லவா? நினைத்தமாத்திரத்தில் வரமுடியுமா?

அவள் வரவைக் கணத்துக்குக் கணம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் சிற்பி. ஆனாலும் அவள் வரவில்லையே என்பதற்காக அவன் துக்கப்படவில்லை. அவள் வருமுன்னம் அந்தச் சிலையை முடித்துவிடவேண்டும் என்பதே அவாவாகக் கல்லில் இராப்பகலாகச் செதுக்கிக்கொண்டிருந்தான் சிற்பி.

எட்டாம் நாட்காலை.

சிற்பியின் குடிசைக்குள் அந்தப்பெண் நுழைந்தாள். இன்று சிற்பியைக் காணவேண்டும் என்ற ஒரே எண்ணந்தான் அவள் மனதில் நிறைந்திருந்தது.

குடிசையின் உள்ளே நுழைந்த அந்தப் பெண் ஆச்சரியத்தால் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள்! ஒரு வாரத்திற்கு முன்னால் சிற்பியின் நண்பன் என்று தன்னைச் சொல்லிக்கொண்டவன், இன்று இவ்வுலகையே மறந்தவனாக ஏதோ சிலை ஒன்றைச் சமைத்துக்கொண்டிருந்தான். அந்தச் சிலையை உற்று நோக்கினாள் அவள். அன்று அவனுடன் பேசிக்கொண்டிருக்கையில் எப்படி நின்றாளோ அதே நிலையில், இன்று கல்லோடு கல்லாய், வாய்பேசா வண்ணம் மதிலொட்டி' நின்றாள். அவளைப்போல அந்தச் சிலை நின்றது. அவள் சிலையாகி நின்றாள்? அவள் உள்ளம், உடல் எல்லாமே திடீரென்று விறைத்து நின்றன ஓர் கணம். மறு கணம் ஏமாற்றத்தின் ரோசம் தொனிக்கும் குரலில் "நமஸ்காரம்" என்றாள்.

சிற்பியும் திடீரென்று வந்த இக் குரலொலியைக் கேட்டுத் தடாரென்று திரும்பி, "ஓ நீங்களா? வணக்கம் இப்படி உட்காருங்கள்" என்று எதிரே கிடந்த கயிற்றுக் கட்டிலைக் காட்டினான்.

அவளும் உட்கார்ந்துகொண்டே அன்று நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டீர்கள். இனிமேலும் என்னை ஏமாற்ற முடியாது. நான் நேரிலேயே உங்களைக் கண்டுவிட்டேன்" என்றாள்.

சிற்பி ஏதோ சொல்ல வாயெடுத்தான். அவள் அவனை முந்திக்கொண்டு "இங்கிருக்கும் சிலைகளை எல்லாம் உருவாக்கியது நீங்கள்தானா" என்றாள்.

அவனும் இலேசாகச் சிரித்துக்கொண்டே "சிற்பியைப்பற்றி என்ன இருக்கிறது? அவன் சிருட்டிகள் உயர்ந்தனவா என்பதுதான் கவனிக்கப்பட வேண்டியது" என்றான்.

"கலைஞன் இல்லாமற் கலை வருமா?" என்றாள் அவள்.

"கலை என்று ஒன்று இருக்கும் வரை கலைஞன் குற்றுயிராகவாவது இருக்கத்தான் வேண்டும்" என்றான் சிற்பி.

"நீங்கள் கற்சிற்பி மட்டும் அல்ல; சொற்சிற்பியுங்கூட. உங்களைப்போல எனக்குப் பேசத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். வாழ்க்கையை இவ்வளவு தத்ரூபமாகச் சித்திரிக்கும் நீங்கள் கடவுள் தத்துவத்தைச் சித்திரிப்பீர்களானால் எவ்வளவோ நன்றாயிருக்கும். இன்றைய நிலையில் மன்னனிடமிருந்து ஏராளமான பொன்னும் மணியும் பெறலாம். உங்கள் வாழ்க்கையே சொர்க்கானுபவமாகிவிடும்" என்றாள்.

இதைக் கேட்டதும் அவன் கெக்கட்ட மிட்டுச் சிரித்தான். சிரித்துக்கொண்டே சொன்னான். "வாழ்க்கையில் கண் முன்னால் நடக்கும் வறண்டு போன சம்பவங்கள் ஆயிரமாயிரம் இருக்கின்றன. இவைகளை மனிதன் சிந்திப்பதேயில்லை.



தன்னுற் காணுத, கருத்துக்குத் தட்டுப்படாத வெறும் வெளிக்குக் காலும் கையும் ஒட்டவைப் பதில் தன் மண்டையை உடைத்துக் கொள்கிறுன் இம் மூட்டாள் மனிதன். இத்தகையவர்களைத் தான் நான் வெறுக்கிறேன்."

"அப்போது என்னையும் வெறுக்கிறீர்களா?" அவளுடைய வினவில் ஆவல் தொனித்தது.

"உங்களை வெறுப்பதால் ஒன்றும் குடிமுழுகி விடாது. எங்ஙனமாயினும் நான் உங்களை வெறுக்கவில்லை. அவரவர் கொள்கை அவர்கட்கு. உங்களிடமிருக்கும் ரசிகத் தன்மைக்குத் தலை வணங்குகிறேன். ஆம்; இந்த உலகிலேயே உங்களைத்தான் நான் கண்டேன்" இப்படிச் சொல்லிவிட்டு அவன் திரும்பிக்கொண்டு அவள் சிலையைப் பார்த்தான். குடிசைக்குள் சில நிமிடங்கட்கு மௌனம் நிலவியது.

சிற்பி தான் மறுபடியும் மௌனத்தைக் கலைத்துக்கொண்டே "உங்கள் பெயர்......?" என்றிழுத்தான்.

"மல்லிகா" என்ருள் அவள். குரல் நடுங்கிக் கனத்திருந்தது.

"அழகான பெயர்" என்றுன் சிற்பி.

"உங்கள் முக வசீகரத்தைப் போல" என்ருள் அவள்.

"இல்லை; இதோ இருக்கும் உங்கள் உருவச் சிலையைப்போல" என்றுன் அவன்.

"இல்லை, அதைவிட நீங்கள்தான் அழகாயிருக்கிறீர்கள். நான் உங்களைத்தான் விரும்புகிறேன்" என்ருள் அவள். இதைச் சொல்லியதும் அவள் தலை கவிழ்ந்துகொண்டது. கால்விரல் மண்ணைக் கிளறியது.

"ஏன் என்னை விரும்புகிறீர்கள்?" என்று கேட்டான் அவன்.

"உங்கள் அழகுக்காக" என்ருள் அவள். அவள் முகம் மலர்ந்திருந்தது. ஆனுல் அவள் வார்த்தைகளைக் கேட்டதும் அவன் முகம் சுருங்கியது. அவ்வார்த்தைகள் அவன் உள்ளத்தை அப்படியே உலுப்பி விட்டன. வருத்தம் தோய்ந்த குரலில் அவன் சொன்னுன்: "இதோ; இந்தச் சிலையை விரும்புங்கள்; அதில் அர்த்தமிருக்கிறது இந்த உளியை விரும்புங்கள்; அதிலும் அர்த்தமிருக்கிறது. ஆனுல் என்னை......

அவன் முடிக்கா முன்னரே அவள் இடைமறித்துச் சொன்னுள்: "இல்லை, நான் உங்களைத்தான் விரும்புகிறேன்."

அவன் படபடப்போடு "என்னை விரும்புவது அர்த்தமற்ற சூன்யத்தை விரும்புவது போலத்தான்" என்று இரைந்துவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் எழுந்து விறு விறென்று நடந்தான். எங்குப் போனுனே!

மல்லிகா திகைப்போடும், பயத்தோடும், வேதனையோடும் நெடுநேரமாக அவன் திரும்பி வருவான் என்று காத்துக்கொண்டிருந்தாள். அவன் வரவேயில்லை. கடைசியாய் உடைந்த உள்ளத்தோடும் கண்ணீர் மல்கிய கண்களோடும் அவள் அரண்மனைக்குப் போனுள்.

மைந்த; கதை இன்னமும் முடிந்துவிடவில்லை. இனிமேல்தான் கதையின் கருப்பொருளான ஓர் கடிதம், அந்தச்சிற்பியின் இதயக்குமுறலைச் சொல்லப்போகிறேன் கேள்.

அன்று சாயந்திரம் மல்லிகாவுக்கு விலாசமிடப்பட்ட ஓர் கடிதம் அரண்மனைக்கு வந்தது. அதிற் சிற்பி பௌத்த சாரன் எழுதியிருந்தான்.

மல்லிகா,

நான் பொன்னையும் மணியையும் விரும்பவில்லை. நான் விரும்பியதெல்லாம் என் கனவிலுதித்த சிருட்டிகளை மனிதன்கண்டு ரசிக்கவேண்டும் என்பதுதான்.

நான் எதற்காக ஏங்கினேனே அதை நீ தான், நீ ஒருத்திதான், எனக்குத் தந்ததாக உன்னைச் சந்தித்த முதல் நாளன்று எண்ணினேன். பிறந்த தின்பலனை அன்றுதான் நான் அனுபவித்தேன். ஆனுல் இன்று நான் ஏமாந்ததை உணர்ந்தேன். ஆம்; நீ என்னைத்தான் விரும்பினுய், என் கலையை அல்ல என்பதைக் கண்டுகொண்டுவிட்டேன்.

ஆம்; நான் எதற்காக ஏங்கினேனே அது என் வாழ்நாளிலே கிட்டவில்லை. என்ன செய்வது? உண்மையை உணரும் தன்மை இன்றைய மனிதனின் உடலமைப்பிலேயே கிடையாது. எனவே இன்னமும் பன்றிகளின் முன்னுல் முத்துக்களைச் சிதறிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

கடைசியாய், என் லட்சியத்தைப் பூர்த்தியாக்க, மரணம் என்கின்ற கல்லில் என் உயிரையே சிலையாக்கப்போகின்றேன்.

இன்றேடு நான் இவ்வுலகிலேயே இருக்கமாட்டேன். ஆனுற் காலம்வரும். அப்போது என் சிருட்டிகள் ஒவ்வொன்றும் அரிய பொக்கிஷமாகக் காப்பாற்றப்படும். அதைக்கண்டு நீ பெருமிதமடையப்போகிருய். அப்போது, நான் உனக்காக, வாழையடி வாழையாக வந்த யாராவது ஓர் ரசிகனுக்காக, என்சிருட்டிகளில் வாழ்ந்துகொண்டிருப்பேன். சரி போய் வருகிறேன். வணக்கம்"

மைந்த, கடிதம் முடிந்துவிட்டது. கதையுமே முடிந்துவிட்டது. உனக்குத் துக்கமாயிருக்கிறதா? என்ன செய்வது? கலைஞர்களின் சரித்திரமே இது தான். பௌத்தசாரனைப்போன்ற ஆயிரக்கணக்கான கலைஞர்களின் கனவுகள், மரணம் என்ற கருந்திரைக்குப் பின்னுல்தான் பூர்த்தியாக்கப்பட்டிருக்கின்றன. அதற்காகத் துக்கப்பட்டுப் பயனில்லை. மாண்ட கலைஞர்கட்கு மரியாதை செய்வதோடுமட்டும் நின்றுவிடாது, வாழ்ந்துகொண்டிருப்பவர்களை உற்சாகப்படுத்தி அவர்கள் மேதையை உலகறியச் செய்வதுதான் இப்போது நம் முன்னுலிருக்கும் பெரிய கடமை.

சரி, நேரமும் பன்னிரண்டு மணி ஆகிவிட்டதே. விளக்கை அணைத்துவிட்டுப் போய்ப் படுத்துக்கொள் நாளைக்கு வேறோர் கதை சொல்கிறேன். ●

Edited & Published by N. R. Ramanujam & Printed by S. Rangaswami
at the Cauvery Colour Press, Besant Road, Kumbakonam.

# நீங்கள் ஒரு பெரிய
## கப்பலைக்கொண்டு சிறிய நதியைக் கடப்பீர்களா?



சுத்த மடத்தனம் அல்லவா? ஆயினும் பாட்டரி ரேடியோ உபயோகிக்கும் அநேகர் குறைந்த சக்தி செலவில் திருப்திகரமாக ரேடியோ கேட்க முடிந்தாலும்கூட, மிகவும் சக்தி வாய்ந்ததும் அதிக செலவு அளிக்கக் கூடியதுமான, ஸெட்டுகளை உபயோகிக்கிறார்கள்.

அதிகப்படியான வால்யூம் அளிக்கக்கூடிய ஓர் ரேடியோ ஸெட் பாட்டரியின் சக்தியை வெகு சீக்கிரத்திலேயே வீணாக வற்றச் செய்கிறது.

குறைந்த சக்தியால் வேலை செய்யும் ஓர் ரேடியோ பாட்டரி சக்தியை சிக்கனமாக செலவிட்டு உங்களுடைய பணத்தையும் எப்பொழுதும் மிச்சப்படுத்துகிறது. ஆகையால் நீங்கள் ஒரு பாட்டரி ரேடியோ வாங்கும்பொழுது குறைந்த சக்தியை உபயோகிக்கும் ஸெட்டையே பார்த்து வாங்குங்கள். அதுவே உங்களுக்குப் போதிய, தெளிவான வால்யூமை அளித்து, பெருங்கூச்சலை தவிர்க்கிறது.

**நீங்கள் எப்பொழுதும்**

# EVEREADY

TRADE-MARK

**ரேடியோ பாட்டரிகளையே உபயோகியுங்கள்**

*அவைகளே உலகத்தில் மிகச்சிறந்த ரேடியோ பாட்டரிகள்*

**ஒரு நாஷனல் கார்பன் தயாரிப்பு**


இணையில்லா
வாசனை
தயாரிப்புகள்
டி.எஸ்.ஆர்
அரைக்கீரை விதை தைலம்
சந்தனாதி
தைலம்
கோகுல் ஹேர்
ஆயில்
T.S.R. & CO.
T.S.R. & CO.
FAS.
எஸ். ஆர். & கோ., கும்பகோணம்.